ஸ்ரீ:

கருணாலஹரீ.

(ஸ்ரீ பண்டித ஜகந்நாத கவி இயற்றியது.)

திருச்சி அட்வகேட்

ஸ்ரீ A. V. கோபாலாசார்யஸ்வாமி அவர்கள்

எழுதிய பதவுரை விசேஷ அர்த்தங்களுடன்

கூடியது.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்

டவுன் ஹைஸ்கூல் ரோடு,

கும்பகோணம்.

 1953. [விலை 0—12—0

ஶ்ரீ:

கருணாலஹரீ.

(ஸ்ரீ பண்டித ஜகந்நாத கவி இயற்றியது.)

திருச்சி அட்வகேட்

ஸ்ரீ A. V. கோபாலாசார்யஸ்வாமி அவர்களால்

எழுதிய பதவுரை விசேஷ அர்த்தங்களுடன்

கூடியது.

ஸ்ரீ ஜனர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்

டவுன் ஹைஸ்கூல் ரோடு,

கும்பகோணம்.

 1953. [விலை 0—12—0

ஸ்ரீ:

முகவுரை.

இந்த க்ரந்தகர்த்தா பண்டிதராஜ ஜகந்நாதர், மஹா ப்ரஸித்தரான ஸர்வசாஸ்த்ரக்ஞ வித்வான். மதுரவாக்கான கவி. இவர் மூகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானுக்கும், அவருடைய முக்ய அதிகாரிகளான அஸாப்கான், முகுந்தராயர் முதலியவர்களுக்கும் மிகவும் வல்லபர். டில்லி சக்ரவர்த்தி ஷாஜஹான் இவருக்கு "பண்டிதராஜர்" எனும் பிருதத்தை அளித்தார். "டில்லி சக்ரவர்த்தி என் யௌவனத்தில் என்னை உள்ளங்கையில் வைத்து வளர்த்து வந்தார்., இப்பொழுது வயது முதிர்ந்து, நான் "அந்தக சீரஸ'ரான ஸ்ரீவிச்வநாதனுடைய க்ஷேத்ரநகரமாகிய காசியில் பரதத்வஸி சாரமந்நாதிகளால் திவஸங்களைக்கடத்திக்கொண்டு வருகிறேன்." என்று இவர் தம்மை வர்ணித்துள்ளார். இவரெழுதியுள்ள, 'அஸாப்காண் விலாஸம்' எனும் அழகிய காவ்யத்தின் அவதாரிகையில், "தேசம் முழுவதிலும் மஹோபகாரங்களைச் செய்து வருபவரும், பரமரஸிகர்களான மஹாவித்வான்களால் எப்பொழுதும் சூழப்பட்டு அவர்களுடன் ரஸாநுபவங்களால் விகஸிதமான மனதுடையவரும், கலியுகத்தை க்ருதயுகமாக மாறச்செய்பவரும், வேதாந்தாரண்யகமார்க்கம் குலைந்து முள் மண்டியிருப்பதை 'அகண்டக'மாயும் அநாகுலமாயும் வித்வத்வரர்களைக்கொண்டு செய்விப்பவரும், அஸாப்கான் ப்ரபுவினுடைய ப்ரஸாதமே மூர்த்தீகரித்தவருமான முகுந்தராயருடைய கட்டளையால், ஷாஜஹான் சக்ரவர்த்தியால்

பண்டிதராஜரெனும் பிருதமளிக்கப்பட்டு, அந்த பிருதத்தோடு விளங்குபவரான தைலிங்க குலசிரோபூஷணரான ஜகந்நாதரால் இந்த ஆக்யாயிகை கவனம் செய்யப்பட்டது" என்று கூறப்பட்டது. இவர் ஸ்ரீ பட்டோஜி தீக்ஷிதருக்கும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதருக்கும் ஸமகாலம். பட்டோஜி தீக்ஷிதருக்கும் இவருக்கும் பலத்த சாத்ரவம். அவருடைய ப்ரௌடவ்யாகரண க்ரந்தங்களை இவர் கண்டித்து கண்டனக்ரந்தமெழுதுபவர். பட்டோஜி தீக்ஷிதருடைய ப்ரௌடமநோரமை எனும் க்ரந்தத்தை இவர், 'ப்ரௌடமநோரமாகுசமர்த்தநம்' எனும் க்ரந்தத்தால் கண்டித்துள்ளார். ஸர்வசாஸ்த்ரங்களிலும் பாண்டித்யத்தில் இவர் ஒருவருக்கும் தாழ்ந்தவரல்லர். அலங்கார சாஸ்த்ரத்திலுமிவர் அதிநிபுணர். ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் உத்தரதேச யாத்திரையாக எழுந்தருளி இருக்கும் போது பட்டோஜி தீக்ஷிதர் அவரிடத்தில் வேதாந்த காலக்ஷேபம் செய்தார். பட்டோஜிக்கும் பண்டிதராஜருக்கும் ஓர் ஸபையில் வாக்யார்த்தம் நடந்தபோது, மத்யஸ்தராக இருந்த அப்பய்ய தீக்ஷிதர் தன் சிஷ்யரான பட்டோஜியிடம் பக்ஷபாதமாக இருந்ததாக பண்டிதராஜர் நினைத்து தீக்ஷிதருடைய அலங்காரக்ரந்தங்களை (சித்ரமீமாம்ஸா, குவலயாநந்தம் முதலியவைகளை) பலமாகத் தூஷித்து ரஸகங்காதரீயமெனும் ஓர் பெரிய அலங்காரக்ரந்தத்தை எழுதினர். குவலயாநந்தத்தில் ப்ரதி வஸ்தூபமாலங்கார நிரூபணாவஸரத்தில் "தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்ய திச்சதி1 ஸ்திதேZரவிந்தே மகரந்த நிர்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹிவீக்ஷதே,"

("तत्रामृतस्यन्दिनि पादपङ्कजे निवेशितात्मा कथमन्यदिच्छति ।
स्थितेऽरविन्दे मकरन्दनिर्भरे मधुव्रतो ने क्षुरकं हि वीक्षते ॥"

என்ற ச்லோகத்தை உதாஹரித்து அதன் தாத்பர்யத்தையும் மிக ரஸமாய் விளக்கினார். ஆளவந்தாருடைய இந்த ச்லோகம் மஹாகவியும் மஹாபக்தருமான பண்டிதராஜரின் மனதைக் கவர்ந்தது. அந்த ச்லோகத்திற்குத் தீக்ஷிதர் செய்த வ்யாக்யானமும் அவர் நெஞ்சைக் கவர்ந்தது.

தீக்ஷிதர் க்ரந்தத்தைத் தூஷித்து வந்தவர் இந்த இடத்தில் தீக்ஷிதருடைய வ்யாக்யானத்தை ஒப்பினார். உயர்ந்த கவியான ஆளவந்தார்—'ஸ்திதः' என்றுதான் பாடி இருப்பாரென்றும் பணித்தார்.

குவலயா நந்தத்தினுடைய ரஸிகரஞ்ஜினீ என்ற வ்யாக்யானகர்த்தா ஜகந்நாத பண்டிதருக்குத்தோன்றி அவர் போற்றிய 'ஸ்திதः' என்றும் பாடமே த்ராக்ஷா மதுரமான ஆளவந்தார் கவிதைக்கு ஏற்கும்" என்று புகழ்ந்தார். நமக்கு டில்லி சக்ரவர்த்தியின் வால்லப்யத்தால் இந்த ராஜாங்க செல்வாக்கைக் கொண்டு தென்னிந்தியா ப்ரதேசத்திலுள்ள ஆளவந்தார் ஸ்தோத்ரத்தை வரவழித்து அதையநுபவித்து அதுபோலவே, தம்முடைய ஸிரதிசய பக்திக்கு விஷயமான ஸ்ரீ கிருஷ்ணன் விஷயமாய் அதே ரீதியில் அறுபது ச்லோகங்கொண்ட "கருணாலஹரீ" எனும் இந்த ஸ்தோத்ரத்தைப் பாடியுள்ளார். ஆளவந்தார் ஸ்தோத்ரம் 64-ச்லோகங்கள் கொண்டது. முதல் 3 ச்லோகங்கள் அவர் க்ரந்தத்திற்கு மங்களமாக ஸ்வ

ப்ராசார்யநாதமுனி நமஸ்க்காரரூபம். "பிதாமஹரான நாத முனிகளை புரஸ்கரித்துக்கொண்டு என்னுடைய சீலவ்ருத்தங்களைச் சிந்திக்காமல் எனக்கு அநுக்ரஹம் செய்யவேணும்." என்ற கடைசி ச்லோகமும் நாதமுனியின் ஸம்பந்த விசேஷ கீர்த்தநபரம். பாக்கி 60-ச்லோகங்களும் முழுவதும் பகவத் ஸ்தோத்ரபரம். இந்த எண்ணிக்கையை இக்கவி ஆதரித்தார். இந்த இரண்டு ஸ்தோத்ரங்களின் பல ஒற்றுமைகளை வ்யாக்யானத்தில் அங்கங்கே காட்டியுளது. காவ்யமாலையில் பம்பாயில் இந்த ஸ்தோத்ரம் மூலமச்சிடப்பட்டிருக்கிறது. இதன் வ்யாக்யானத்தைத் தாஸன் எழுதிப் பல வருஷங்களாகியும், இது ப்ரசுரமாகும் பாக்யம் இப்போதுதான் கிடைத்தது. அது எங்ஙனமெனில்; காமகோடிபீடம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் ஸந்நிதானம் சென்று அநுக்ரஹம் பெறவேணுமென்று பரமக்ருபையுடன் ஸ்மாமிகள் தாஸனுக்கு அனுப்பிய ஆக்ஞையைத் தாஸன் முடிகொண்டு ஸன்னிதானத்திற்குச் சென்றபோது ப்ரஸக்தாநுப்ரஸக்தமாய் பண்டிதராஜருடைய கருணாலஹரி ஸ்தோத்ரம் மிக வழகாக இருப்பதால் அதற்கு வ்யாக்யானம் செய்திருக்கிறேன் என்று விண்ணப்பித்தேன். உடனே ஸ்ரீமத் ஸ்வாமிகள், "அமந்தமிளதிந்திரே நிகில மாதுரீமந்திரே முகுந்த முக சந்திரே" என்ற ஸ்தோத்ரம் தானே என்று ஸ்தோத்ரம் கடைசி ச்லோகத்தை திருவுள்ளத்தில் கொண்டு கேட்டபடியால் தம்முடைய அதன் ரஸாஸ்வாதநம் ஸூசிக்கப்பட்டது. அச்சிடவேணுமென்ற ப்ரார்த்தனையை ஸங்கோசத்தால் அடியேன் செய்யவில்லை. சில தினங்கள் கழித்து அத்வைதஸபா நிர்வாஹகரான

பிர்மஸ்ரீ S. வைத்யநாதய்யரவர்களிடம் அச்சுக்குத் தக்க படி எழுதப்பட்டிருந்த மாத்ருகை, படிக்கும்படி திருச்சியில் கொடுக்கப்பட்டது. அப்பெரியார் முழுவதும்வாசித்து தாமும் ரஸித்து, அவர் தம் க்ருஹத்திற்கு வந்திருந்த பிர்மஸ்ரீ K. பாலஸுப்ரமண்ய அய்யர் வாசித்து ரஸிக்கும்படியும் செய்தார். அவர்கள் மிகவும் ரஸித்தார்கள். ஆர்ய தர்மபத்திரிகையில் இதை முத்ரணம் செய்வதைப்பற்றி பத்ராதிபர்களிடம் ப்ரஸ்தாபம் செய்யப்பட்டதில், உடனே அவர்கள் இதை த்ராவிடதேசம் முழுவதும் பரவிய அப்பத்ரிகையில் க்ருபையாக அச்சிடத்தொடங்கி இப்போது புத்தக ரூபமாக அது அச்சிட்டு முடிந்திருக்கிறது. ஸ்ரீ காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்வாமிகளின் கடாக்ஷங்கள் ப்ரவஹித்து க்ருபையின் மூலமாக அதிசீக்ரத்தில் இந்த க்ரந்தம் அச்சிடப்பட்டுத் தமிழ் நாடெங்கும் பரவும்படி பாக்யம் பெற்றது.

இந்த க்ரந்தமும் வ்யாக்யானமும் முன்பு ஸ்ரீஉபய சின்னமூ, ஸ்ரீநிவாஸபாட்டாசார்யர் ஸ்வாமிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அவர் அதை முழுவதும் கடாக்ஷித்து ரஸித்திருந்தார். ஆர்யதர்மத்தில் இது அச்சிடப்படுவதை அறிந்து அந்த ஸ்வாமிதாமே பத்ராதிபர்களிடம் ப்ரூப் பார்த்து சோதிப்பதாக ஒப்புக்கொண்டு அப்படியே முழுக்ரந்தத்தையும் அவ்வப்பொழுது சோதித்து திருத்த வேண்டிய அம்சங்களை அடியேனுக்கு proofகளில் குறித்துக்காட்டியும் இப்படியாக அச்சிடுவதில் மஹோபகாரம் செய்து வந்திருக்கிறார். ஸ்ரீமத் காமகோடி ஸ்வாமிகள்

தொடங்கி மேலே குறித்த எல்லா ஸ்வாமிகளிடமும் அடியேனுடைய க்ருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பண்டிதராஜருக்கு கரைபுரண்ட க்ருஷ்ணபக்தி. அலங்கார க்ரந்தங்களில் பிறர் ப்ராயேண ப்ராசீனச்லோகங்களையே உதாஹரித்துள்ளார். ரஸகங்காதரீயத்தில் கண்ணன் விஷயமானதாகவே ச்லோகங்களை இயற்றி அவற்றை இவர் உதாஹரித்திருக்கிறார். இவருடைய ச்லோகங்கள் தோஷலேசமற்றவை. வித்வத்ஸார்வபௌமரான காஞ்சி ஸ்ரீ அண்ணங்கராசாரியார் ஸ்வாமி ஆர்யதர்மத்தில் இந்த க்ரந்தம் 8. 8. பங்கங்களாக ப்ரசுரித்து வருகையில் ப்ரசுரிக்கப்பட்ட பாகங்களை அவ்வப்பொழுது ஒரு எழுத்தும் விடாமல் படித்து 'இன்பவெள்ளம் இன்பவெள்ளம்' என்றே புகழ்ந்து எழுதிவந்திருக்கிறார். இதில் 26-வது ச்லோகத்தில், "ஜநகோபதர்பவார்ணவே நிவார்யோபவதாகதம் விபோ" என்ற பின்பாதில் 'நிவார்ய:' என்பதற்கு பதிலாய் 'நிவார்யே' என்று க்ரியா ரூபமான பாடம் கவியின் பாடமாய் இருக்கலாமென்று அவர் காட்டியதில் ஔசித்யமுண்டு. "மற்றொன்றின் நினைவேயில்லாமல் கங்கைமாநதியின் மணலில் உட்கார்ந்து கொண்டு மதுரமதுரமான க்ருஷ்ண ப்ரஹ்மசைதந்யத்தில் முழுகி அங்கேயே அழுந்திக்கிடப்பதென்பது என்றுகொலோ" என்று ஆழ்வார்களின் அநுபவ மக்ரந்த நிலையைப் ப்ரார்த்தித்துக் கொண்டே ஸ்தோத்ரம் முடிவடைகிறது.

A. V. கோபாலாச்சார்யர்.

கருணாலஹரீ.

विषीदतानाथ! विषानलोपमे विषादभूमौ भवसागरे विभो ।
परं प्रतिकारमपश्यता धुना मया अयमात्मा भवते निवेदितः ॥

விஷீததா நாத விஷாநலோபமே
விஷாதபூமௌ பவ ஸாகரேவிபோ ।
பரம் ப்ரதீகாரம பச்யதா துநா
மயா அயமாத்மா பவதே நிவேதித: ॥

நாத! – நாதனே, விபோ – எங்கும் வ்யாபித்துள்ள ப்ரபுவே, விஷாநலோபமே-விஷ நெருப்பைப் போன்றதும், விஷாதபூமௌ - துக்கத்திற்குக் குடியிருப்பிடமுமான, பவ ஸாகரே - ஸம்ஸார ஸமுத்ரத்தில், விஷீததா - தத்தளித்து வருந்துபவனும், பரம் - (உம்மைத் தவிற) மற்றோர், ப்ரதீகாரம் - சோகம் தவிர்க்கும் உபாயத்தையும், அபச்யதா – காணாத, மயா - என்னாலே, அயம் ஆத்மா - இந்த உயிர், அதுநா - இப்பொழுது(தே), நிவேதித: - ஸமர்ப்பிக்கப்பட்டது. (படுகிறது).

க்ரந்தாவதாரிகை:

ஜகந்நாத பண்டிதர் என்பவர் ஸகல சாஸ்திரங்களிலும் கரைகண்டவர். வ்யாகரணம், அலங்காரம், வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களில் அற்புதமான நூல்களை இயற்றியவர். க்ருஷ்ணனிடத்தில் அவர் பக்தி கரைபுரண்டதென்பது ப்ரஸித்தம். ஷாஜஹானென்னும் முகலாய சக்ரவர்த்திக்கு அவர் மிகவும் வல்லபர். பண்டிதராஜரென்னும் பிருது அவருக்கு ஷாஜஹானால் அளிக்கப்பட்டது. 'அவர் உள்ளங்கையில் நான் யௌவனத்தில் வளர்ந்தேன். இப்பொழுது காசி நகரத்தில் பாதத்வஸித்தை செய்கிறேன்.' என்று அவரே பேசுகிறார். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் வட

தேச யாத்ரை சென்ற பொழுது, பட்டோஜீ தீக்ஷிதர் அவரை வேதாந்த காலக்ஷேபத்திற்கு ஆச்ரயித்தார். பட்டோஜிக்கும் ஜகந்நாத பண்டிதருக்கும் கொடிய விரோதம். பட்டோஜியுடைய வ்யாகரண க்ரந்தங்களை ஜகந்நாதர் கண்டித்து கண்டன க்ரந்தங்களையும் எழுதியிருக்கிறார். இவ்விருவருக்கும் நடந்த வாதத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் தம் சிஷ்யரான பட்டோஜியிடம் பக்ஷபாதமாக இருந்தாரென்று ஜகந்நாதருக்கு அவர் மீது கோபம் பாய்ந்தது. ஸ்ரீ தீக்ஷிதருடைய குவலயாநந்தத்தை பண்டிதராஜ ஜகந்நாதர் கண்டித்து ரஸகங்காதரீயமென்று எழுதினார். ஸ்ரீ தீக்ஷிதர் குவலயாநந்தத்தில் ப்ரதிவஸ்தூபமா என்னும் அலங்காரத்தை விவரிக்கையில், ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் "तवामृतस्यन्दिनि पादपङ्कजे" "தவாம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே" என்னும் ச்லோகத்தை உதாஹரித்து அதை அந்த அலங்காரத்திற்கு த்ருஷ்டாந்தமாக, அழகாக ஸமர்த்தித்து உரை செய்தார். அந்தச்லோகத்தை பண்டிதராஜர் பார்த்ததும், அது அவர்மனதை முற்றிலும் கவர்ந்துவிட்டது. சித்ரமீமாம்ஸையை அக்ஷரமக்ஷரமாய்க்கண்டித்து எழுதியவர் இந்தச்லோகத்தின் உபபாதநத்தை அழகென்று அநுமோதித்தார். ஆனால் ச்லோகத்தின் பாடம், 'स्थितेऽरविन्दे' என்று இருக்கவேணுமென்று அறுதியிட்டார். அப்படிப் பாடமிருந்தால் அது ரமணீயமாகுமென்றார். (பக்கம் 336). இந்தச்லோகத்தை 'ஆளவந்தாரு' ஸ்தோத்ரபத்யமென்று பேசுகிறார். பண்டிதராஜர் தெலுங்கர். அதனால் 'ஆளவந்தாரு' என்கிறார். குவலயாநந்தத்திற்கு ரஸிகரஞ்ஜிநீ என்னும் வ்யாக்யாநத்தை இயற்றிய கங்காதரவாஜபேயீ, "பண்டிதராஜர் காட்டிய பாடம் தான் தாமரையிலுதித்த ப்ரஹ்மாவின் ப்ரியையான ஸரஸ்வதியின் முககமலத்திலிரு

ந்து பெருகும் தேன்பொழிவோவென்று ஆச்சர்யப்படத்தக்க ராமணீயகதையையுடைய ஸகல ஸரஸஹ்ருதய ரஞ்ஜக கவியான ஆளவந்தார் வாக்குக்குப் பொருந்துவது" என்று ஆளவந்தார் கவிதாமாதுர்யத்தைப்புகழ்கிறார். ஆளவந்தார் ச்லோகம் என்பது குவலயானந்தத்தில் குறிக்கப்படவில்லை. பண்டிதராஜர் இந்தச்லோகத்தினழகிலீடுபட்டு தமக்கிருந்தசெல்வாக்கைக் கொண்டு விசாரித்து ஸ்தோத்ரரத்நக்ரந்தத்தை ஸம்பாதித்து அதை மனப்பாடம் செய்து அதுபோலவே கண்ணன் விஷயமாக இந்தக்கருணாலஹரியை (60 ச்லோகங்களை)ப் பாடினரென்பது திண்ணம். ஆளவந்தார் ஸ்தோத்ர க்ரந்தத்திலும் பெருமாள் ஸ்தோத்ரம் 60-ச்லோகங்களே. முகுந்தமாலையும் பண்டிதராஜர் அநுபவித்தது. ஆளவந்தார்பத்யங்கள் இவர் நெஞ்சிலூறி இந்த லஹரியில் வழிந்தோடுவதை ஆங்காங்கே ஸ்பஷ்டமாய்க்காணலாம்.

'விஷீததா' என்று இந்த லஹரியின் தொடக்கம். கண்ணனிடம் தம் ஆத்மாவை ஸமர்ப்பித்து கண்ணனை சரணமடைகிறார். ஆளவந்தார் காட்டிய மார்க்கத்தையே அநுஸரிக்கிறார். 'துயரப்படுமென்சோகத்தைத்தீர்க்க மற்றோர் சரணைக்காண்கின்றிலேன்' 'न हि प्रपश्यामि ममापनुद्यात् यच्छोकं' "நஹிப்ரபச்யாமிமமாபநுத்யாத் யத்சோகம்" என்றானர்ஜுனன். அதுபோல், 'பரம்ப்ரதீகாரமபச்யதா - வேறுகதியறியாதனென்னால்" என்று இங்கு பேசுகிறார். 'अकिञ्चनोऽनन्यगतिश्शरण्य त्वत्पादमूलं शरणं प्रपद्ये' 'அகிஞ்சநோநந்யகதி: சரண்ய த்வத்பாதமூலம் சரணம்ப்ரபத்யே" என்ற ஸ்தோத்ரரத்நம் - 22 ச்லோகம் இங்கே முதலிரண்டு ச்லோகங்களிலும் கவிநெஞ்சிலோடுகின்றது. 'क्रन्दामि संप्रत्यगतिस्तवाग्रे' .

'க்ராந்தாமிஸம்ப்ரத்யகதி ஸ்தவாக்ரே', 'तदहंतवपादपद्मयोरयमद्यैव मया समर्पितः' ததஹம்தவபாதபத்மயோ ரயமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்பது ஓடுகிறது. இவையெல்லாம் சரணாகதி செய்யும் ச்லோகங்கள். "अयमद्यैव मया समर्पितः" "அயமத்யைவமயா ஸமர்ப்பித:" என்பதை யநுஸரித்து "அதுநா மயாயமாத்மா பவதே நிவேதித:" என்று இங்கே பாடுவதென்பது ஸ்பஷ்டம். "நிவேதயத' என்று விபீஷணாழ் வார் ப்ரயோகித்தபதத்தைப் ப்ரயோகிக்கிறார். 'शरण्य तेऽङ्घ्रि-महमयां' என்று அடுத்தச் ச்லோகத்தில், 'शरण्य त्वत्पादमूलं शरणं प्रपद्ये' 'சரண்ய த்வத்பாத மூலம். சரணம் ப்ரபத்யே" என்பதை அநுஸரிக்கிறார். "நாத" ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் நாதனென்னும் நாதமுநிவிஷயமாக முதலில் மூன்றுச் லோகங்கள். முடிவுச்லோகத்திலும் நாதமுநியின் ஸங்கீர்த்தனம். 'मम नाथ', "மமநாத" 'सकृदेव नाथ' 'ஸக்ருதேவநாத' 'नाथनतेनुरूपः' நாதநதேநுரூப:" என அங்கே பகவத் விஷயத்திலும் ப்ரயோகிக்கப்பட்டது. இங்கே கண்ணன் விஷயமாக நாதசப்தத்தோடு தொடக்கம் இந்த ஸம்ஸார பூமியை நெருப்பென்று சொல்ல வேணும். நெருப்பிலும் 'விஷநெருப்பு' என்கிறார். 'संसारदवा शुशुक्षणि' 'ஸம்ஸார தவாசுசுக்ஷணிம்" என்பதை ஸ்மரிக்கிறார். விஷாதபூமி-துக்கபூமி - துக்கத்திற்கிருப்பிடம் என்பதால் மட்டும் பூமி என்ற பேர் தகுமென்கிறார். பூமியை 'ஸ்திரா' என்று சொல்லுவது பொய். இது ஓயாது அலைக்கும் ஸம்ஸார ஸமுத்ரமென்று பேசுவது தகும். 'விபோ' நீர் எங்கு முள்வப்ரபு. உம்மைச்சரணம் பற்ற ஓரடிகூட நகரவேண்டாம் இருக்குமிடத்திலேயே சரணம் புகலாம். திருவடியும் எங்கும பரவியது. த்ரிவிக்ரமன் திருவடி எங்கேதான்

அகப்படாது 'विलासविक्रान्त परावरालयं त्रिविक्रम चरणाम्बुजं' "விலாஸவிக்ராந்தபராவராலயம் த்ரிவிக்ரம சரணாம்புஜம்" 'लोक विक्रान्त चरणौ शरणं तेऽव्रजं विभो' 'லோகவிக்ராந்த சரணௌசரணம்தேऽவ்ரஜம்விபோ" என்பதை இங்கே நினைக்க வேணும். 'பவதே' என்று நான் காம்வேற்றுமை கவனிக்கத்தக்கது. 'வந்தநம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதநம்' என்கிறபடி அநுத்தமபக்தியான சரணாகதியை நிவேதநசப்தத்தால் விளக்குகிறார். 'அதுநா', 'அத்ய'. 'க்ஷிப்ரம்' எவறு விபீஷணாழ்வார் காட்டியத்வரை. "விஷாதோ விஷமுத்தமம்" என்று பாரதம். 'மாளாத துயர் தருவல்வினைநெருப்புக்கு இந்த நமயெண்ணிறந்த காலமெல்லாம் இன்னமுமிப்பவக்குழியேயிழியா வண்ணம்

भवानलज्वाल विलुप्तचेतनः शरण्यतेऽङ्घ्रिं शरणं भयादयाम् ।
विभाव्य भूयोपि दया सुधाम्बुधे ! विधेहि मे नाथ यथा यथेच्छसि ॥

பவாநலஜ்வால விலுப்த சேதநः சரண்ய
தேऽங்க்ரிம் சரணம் பயாதயாம் |
விபாவ்ய பூயோபிதயாஸுதாம்புதே
விதேஹிமேநாத யதா யதேச்சஸி ॥

சரண்ய-சரண்யனே! பவாநலஜ்வாலவிலுப்த சேதந:- ஸம்ஸாராக்நியின் ஜ்வாலைகளால் அடியோடு லோபமடைந்த அறிவோடு கூடிய (நான்) தே - உம்முடைய, அங்க்ரிம் - சேவடியை, பயாத் - பயத்தினால் (அபயத்தின் பொருட்டு) சரணம் - அடைக்கலமாக அயாம் - அடைந்தேன். தயா ஸுதாம்புதே - க்ருபாம்ருதக்கடலே! நாத - நாதனே! பூயோபி - மறுபடியும், (மிகவும்), விபாவ்ய - ஆலோசித்து,

யாதாயதா இச்சஸி - எப்படி யெப்படி திருவுள்ளமோ (அப்படி) மே விதேஹி - என்னை விதிக்க (நியமிக்க) வேணும்.

'ஸம்ஸாராக்நி விதீபநவ்யபகத ப்ராண' என்று ஸ்ரீ பாஷ்யமங்களச்லோகத்திலுள்ளது போன்ற வர்ணனம். 'அதாஹ்யோயம்'என்று கீதையில் ஜீவர்த்மஸ்வரூபத்தைக் கொளுத்தமுடியாதென்று கூறப்பட்டது, ஸ்வரூபத்தை கொளுத்துவதல்ல, ஜ்ஞானமென்னும் தர்மமான சைதன்யத்தையேஸம்ஸாராக்நி தியிலும்-கொடியது. சோகம் நீங்குவதைகீதாசரம ச்லோகம் சொல்லிற்று. பயம் நீங்குவதை ராமனபயப்ரதானம் சொல்லிற்று. சரணமடைவது என்ன பலத்தைக்கோரி ? தேவரீருக்கு என்னென்ன குற்றேவல்கள் திருவுள்ளமோ அதிலெல்லாம் என்னை நியமித்தருள வேணுமென்கிறார். இதுதான் நான் கோரும்பலம். அல்லது தேவரீருக்கு எப்படி எப்படி திருவுள்ளமோ அப்படிக்கெல்லாம் என் விஷயத்தில் செய்யலாம். தேவரீர் என் விஷயத்தில் என்ன செய்தாலும் அது எனக்கு போக்யமே. தேவரீர் திருவுள்ளமேதான் என் இஷ்டம்.

विहाय संसार महामरुस्थलीं अलीक देहादि मिलन्मरीचिकाम् ।
मनो मृगो मे करुणामृताम्बुधे विगाढुमीश! त्वयि गाढमीहते ॥

விஹாய ஸம்ஸாரமஹா மருஸ்தலீம்
அலீகதேஹாதிமிளன் மரீசிகாம் ।
மநோம்ருகோமே கருணாம்ருதாம்புதே
விகாடு மீச த்வயிகாடமீ ஹதே ॥

கருணாம்ருதாம்புதே - கருணாம்ருதக்கடலே, அலீக தேஹாதி மிளந்மரீசிகாம் - பொய்யான தேஹம் முதலிய கானல்லைகளைக்கும், ஸம்ஸாரமஹாமருஸ்தலீம் - ஸம்ஸார

மெனும் பெரும்பாலைவனத்தை, விஹாய - விட்டு விட்டு, மே - என்னுடைய, மனோம்ருக: - மனமெனும்மானது, த்வயி- (அமுதக்கடலான) உமக்குள், காடம்- குள்ளக்குளி ரத்குடைந்து, விகாடும் - புகுந்து நீராட, காடம் - மிகவும், ஈஹதே - ஆசைப்படுகிறது.

"ஸம்ஸாரமருகாந்தாரத்தில் பரிச்ராந்தனை தேஹிக்கு உம்முடைய பக்தி யெனும் அமுதநதியில் அவகாஹநம் உப தேசிக்கப்பட்டது" என்று யாதவாப்யுதயத்தில் பகவத் ஸ்தோத்ரம்-தேஹம் முதலிய தெல்லாம் ஸம்ஸார"மெனும் பாலைவனத்தில் மித்யா. "மெய்யெனும் பொய்யை, என்பர் தமிழர். 'भ्रान्तस्य मे विषय भोगमरीचिकासु ? 'ப்ராந்தஸ்யமே விஷயபோகமரீசிகாஸு". இந்த்ரிய போகங்களை கானல் நீருக்கு ஒப்பிடுவர். இந்த்ரியங்கள் மான்கள். வெப்ப அலைகள் குளிர்ந்த நீர்போல் தோன்றுவதை நீரென்று ப்ரமித்து வெயிலிலோடி ஏமாந்து போகும் மான்கள்போல இந்த்ரியங்கள் வெப்பமான விஷயபோகங்கள் தாபம் தீர்க் கும் குளிர்ந்த நீரென்றுப்ரமித்து தாபத்தையே பெருக் கிக்கொள்ளுகின்றன. தேவரீர் ஸுகபூமி, ஸுகபூமா - ஸம்ஸாரம்துக்கபூமி, துக்கபூமா. ஸம்ஸாரம் நரகாகாரம், நீர் ஆனந்த வெள்ளம். 'नित्यासङ्गमशेषतापशमनं निःश्रेयसार्थप्रदं ग्रीष्मे शीतमिवहृदं बहुगुणं ब्रह्मप्रविष्टो मुनिः' "நித்யாஸங்கம் அசேஷதாபசமநம் நிச்ரேய ஸார்த்த ப்ரதம் க்ரீஷ்மே சீதமிவஹ்ரதம்பஹுகுணம் ப்ரஹ்மப்ரவிஷ்டோ முநி:" என்று ப்ரஹ்மமென்னும் குளிர்ந்த மடுவில்முழுகிஸகலதா பங்களையும் போக்கு வதை ஸங்கல்ப ஸூர்யோதயம் பாடிற்று. ஸூர்யோதயத்தில் குளிர்ந்த நீர்மடுவில் அவ காஹநம் செய்வர்.

"एषब्रह्मप्रविष्टोस्मि ग्रीष्मे शीतमिवह्रदम् । शाम्यामिपरिनिर्वामि" 'என்று ருஷிகள் ப்ரஹ்மத்தில் நீராடுவதைப்பாடினார்கள். மனமெனும் யானை காட்டுத்தீயிலிருந்து ஓடிப்ரஹ்ம மெனும் குளிர்ந்த நீரில் முழுகிஇன்புறுவதை பாகவதம் பாடிற்று. गाढं (காடம்) என்பதை முன்பும் பின்பும் அந் வயிக்கவேணும்.

त्वदङ्घ्रिफुल्लाम्बुजमध्यनिर्गलन्मरन्दनिः स्यन्दनितान्तलम्पटः ।
मनोमिलिन्दो मम मुक्तचापलः त्वदन्यमीशं न तृणायमन्यते ॥
(त्वदन्यमीशान ! तृणाय मन्यते) (५) ॥

த்வதங்க்ரி புல்லாம் புஜமத்ய நிர்களந்மரந்
த நிஸ்யந்த நிதாந்தலம்பட: |
மநோமிலிந்தோ மமமுக்தசாபல:
த்வதந்ய மீசம் நத்ருணாய
மந்யதே" (த்வந்யமீசா ந!
த்ருணாய மந்யதே) பாடாந்தரம்."

த்வதங்க்ரி, - உம்திருவடியாகிய, புல்லாம்புஜ - அலர்ந் ததாமரையின், மத்ய நிர்களந் - நடுவிலிருந்து பெருகும், மரந்தநிஸ்யந்த - தேன் பெருக்கில், நிதாந்த - மிகவும்லம் பட :— இன்பரஸம் (ஆசை) உடையதும், முக்தசாபல:- (உம்மைத்தவிரமற்றவைகளில்) விடப்பட்ட ஆசையை உடையதுமான, மம - என்னுடைய, மநோமிளிந்த :- மநதாகியதேனீ (வண்டு), த்வதந்யம் - உம்மைத்தவிரமற் றோர், ஈசம் - ஈசனை, த்ருணாய - ஓர் துரும்பாகக்கூட, நமந்யதே - மதிக்கவில்லை. (பாடந்தரத்தில்) ஈசாந - ஓ ஈசனே!, த்வதந்யம்-உம்மைத்தவிரமற்றவரை, த்ருணாய- புல்லாக, மந்யதே - மதிக்கிறது.

குவலயாநந்தத்தில் எந்தச்லோகத்தைப் பார்த்து மகிழ்ந்து ஆளவந்தார்பத்யங்களிலீடுபட்டாரோ, அந்த "தவாம்ருதஸ்யந்திநிபாதபங்கஜே நிவேசிதாத்மாகதமர் யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்தநிர்பரேமதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹிவீக்ஷதே," என்னும் ச்லோகத்தின் ப்ரதிபிம்பம் போலவே இந்தச்லோகத்தை யமைத்தார். "தேவர் போக்யதையிலே அழுந்தின மநஸ்ஸூம் வேறொன்றிலும் போகமாட்டாதென்கிறார்" என்று அங்கே பெரிய வாச்சான் பிள்ளை அருளிய அவதாரிகை. யுஷ்மச்சப்தத்திலேயே இந்தச்லோகமும் தொடங்குகிறது. இங்கேரூபகம். 'புல்லாம்புஜ'. மலர்ந்த திருவடித்தாமரை என்னை ஏற்றுக் கொள்ள ஆசையுடன் அலர்ந்ததோ" என்று கருத்து. 'ஸ்திதே' (ஸதி) என்ற பாடத்தில் "மதுவாலே பூர்ணமான செந்தாமரையானது போக்தாக்களைக்குறித்து அவஸர ப்ரதீக்ஷமாய் (காத்துக்கொண்டு) இருக்க" என்று பிள்ளை அருளிய ரஸம். 'புல்லாம்புஜ' என்பதில் அதே கருத்து. குவலயாநந்தத்திலும் ரஸகங்காதரீயத்திலும் பிற்பாதியில், 'ஆசையுடன் பார்ப்பதில்லை' என்று பொருள்கூறி இச்சையை நிஷேதிப்பதாகக்காட்டினார்கள். இங்கும் இச்சையோடு ஆதரத்தை நிஷேதிக்கிறார்.

जगत्त्रयत्राणविधौ धृतव्रतं (धुरंधरं)तवाङ्घ्रिराजीवमपास्य ये जनाः ।
शरण्यमन्यं मृगयन्ति यान्ति ते नितान्तमीशान ! कृतान्तदेहलीम् ॥

ஜகத்த்ரயத்ராண விதௌ
த்ருதவ்ரதம் (துரம்தரம்)
தவாங்க்ரி ராஜீவம பாஸ்யயே ஜநா: |

சரண்ய மந்யம்ம்ருகயந்தி
யாந்திதே நிதாந்தமீசாந!
க்ருதாந்த தேஹளீம்॥ [5]

ஈசாந – ஈச்வரனே! ஜகத்த்ரயத்ராணவிதௌ – மூவுலகையும் காக்கும் தர்மத்தில், த்ருதவ்ரதம் - ஓர் வ்ரதமாக தீக்ஷை உடைய, தவாங்க்ரி ராஜீவம் – உம் திருவடித் தாமரையை, அபாஸ்ய – தள்ளி, யேஜநா: – எந்த ஜனங்கள், அந்யம் சரண்யம்–மற்ருேர் அடைக்கலத்தை, ம்ருகயந்தி– தேடுகிருர்களோ, தே – அவர்கள், நிதாந்தம் – மிகவும், க்ருதாந்ததேஹளீம் – யமன் த்வாரத்தை, (யமன் வீட்டு ரேழியை) யாந்தி – சேருகிருர்கள்.

"नमस्यदार्तिक्ष रणे कृतक्षणं। धनं मदीयं तवपादपङ्कजं।"

"நமஸ்யதார்தி க்ஷபணே க்ருதக்ஷணம் | தநம்மதீயம் தவபாத பங்கஜம்" என்றது போன்ற திருவடித்தாமரையின் வர்ணனம். உம துயாறு சுடரடியை விட்டு, துயர் பெருக்குமடிகளை சரணுக வரிப்பரோ? வென்கிருர். "ஸ்ரீநிவாஸன் தயாதேவியே! உன்னிடம் பகுமதி இல்லாமல் மற்ருேர் கதியை (தயையை) யெவன் பற்றுகிருனே அவன் தன் தாஹத்தைத் தீர்க்க ஸாரநதியாகிய கங்காநதி அருகே ஓடிக்கொண்டிருப்பதை நெருங்காமல், கானலலைகளைத் தேடியோடுபவன் போலாவான்." என்ற தயாசதக ச்லோகத்தையுமிங்கே நினைக்கவேணும். "மறுபடியும் என் வசத்திலகப்படுகிருன்" என்ருர் யமதர்ம ராஜா நசிகேதஸ்ஸினிடம். ம்ருகயந்தி – தேடுகிருர்கள், மான் போல ஆசரிக்கிருர்கள் என்று இரண்டு பொருள்கள். முன் ச்லோகத்தில் கூறிய ம்ருகத்ருஷ்ணிகை என்னும் கானலைத் தேடுகிருர்கள் என்பது இங்கும் இந்த சப்தத்தால் த்வநிக்கும்.

रमामुखाम्भोज विकासन क्षमो जगत्त्रयोद्बोध विधान दीक्षितः ।
कदा मदज्ञानविभावरीं हरे! हरिष्यति त्वन्नयनारुणोदयः ॥

ரமாமுகாம்போஜவிகாஸநக்ஷம:
ஜகத்த்ரயோத்போத விதாநதீக்ஷித: |
கதா மதஜ்ஞாந விபாவரீம்ஹரே
ஹரிஷ்யதி த்வந்நயநாருணோதய:॥ [6]

ஹரே – ஆபத்துகளை அபஹரிப்பவரே, ரமாமுகாம்போஜவிகாஸநக்ஷம:–லக்ஷ்மியின் முக கமலத்தை மகிழ்ந்து மலரச் செய்யும் திறமையையுடையதும், ஜகத்த்ரயோத்போத விதாநதீக்ஷித: – (அநாதிமாயையால் தூங்கி அஜ்ஞாநத்தில் ஆழ்ந்திருக்கும்) மூவுலகங்களையும் எழுப்பி ஜ்ஞாநம் மலரச் செய்வதையே ஓர் யாகதீக்ஷையாகக் கொண்டதுமான, த்வந்நயநாருணோதய: – உம் திருக்கண்களின் கடாக்ஷமாகிய அருணோதயம், கதா – என்று சொல்; மதஜ்ஞாநவிபாவரீம் – என்னுடைய அஜ்ஞாநமென்னும் இரவை ஹரிஷ்யதி – போக்குமோ ?

திருவடித் தாமரைகள் கொண்ட வ்ரதத்தை வர்ணித்தார். “கண்ணிணையும் அரவிந்தம், அடியும் அஃதே” என்பர். திருக்கண்களாகிய தாமரைகள் கொண்ட தீக்ஷா வ்ரதத்தை வர்ணிக்கிறார். அநாதிமாயையால் தூங்கிக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு ப்ரபோதத்தை(விழிப்பை)த் தருகின்றன. ஜ்ஞானக்கண்ணை மலரச்செய்து அஜ்ஞான ராத்திரியை நீக்கி ஜ்ஞான ஸூர்யனை உதிக்கச்செய்கின்றன. ‘तेषामादित्यवत् ज्ञानं प्रकाशयति तत्परम्’ “தேஷாமாதித்யவத்ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத்பரம்” திருக்கண்கள் தீக்ஷிதரென்கிறார். தீக்ஷைக்கு பத்நி வேணும் ஸம்ஸார ராத்ரியை நீக்கும் வ்யாபாரத்தில் பத்நியானரமையின் ஸாஹசர்யத்தை

த்வநியால் காட்டுகிறார். ப்ரஜைகளை சேதனரை ரக்ஷிப்பது தாயான தாமரையாளின் தாமரை முகத்தை மலரச் செய்கிறது. பகவத் கடாக்ஷம் அருணோதயமென்கிறார். அந்த அருணோதயத்தில் லக்ஷ்மியின் முககமலம் மலருகிறது. என் அஜ்ஞான இருளும் நீங்குகிறது. "கதா, கதா" என்று சொல் என்று த்வரையைக் காட்டுகிறார்: ஹரே! ஹரிஷ்யதி என்று சேர்த்தி அழகு.

मुनीन्द्र चित्तैक चकोर जीविका समस्त सन्तापचयापनोदिनी ।
महानिशीथे मम मानसे कदा स्फुरिष्यति त्वन्मुख चन्द्र
चन्द्रिका ॥

முநீந்த்ர சித்தைக சகோரஜீவிகா
ஸமஸ்தஸந்தாப சயாபநோதிநீ |
மஹாநிசீதே மம மாநஸே கதா
ஸ்புரிஷ்யதி த்வந்முகசந்த்ர
சந்த்ரிகா ‖ [7]

மஹாநிசீதே – நள்ளிரவான, மம மாநஸே – என் மனோகுஹையில், முநீந்த்ரசித்தைக சகோரஜீவிகா - முநிச்ரேஷ்டர்களின் மனமெனும் சகோர பக்ஷிகளை ஜீவிக்கச் செய்யும் ஒரே ஆஹாரமும், ஸமஸ்த ஸந்தாபசயாபநோதிநீ – ஸகல ஸந்தாபங்களையும் போக்குவதுமான, த்வந்முக சந்த்ர சந்த்ரிகா – உம்முடைய முகமாகிற சந்த்ரனுடைய சந்த்ரப்ரபை, கதா – என்று கொல், ஸ்புரிஷ்யதி – ப்ரகாசிக்கப் போகிறதோ ?

அஜ்ஞானயிருளைப்போக்குவது எப்பொழுது என்றார். அஜ்ஞானம் ஹ்ருதய குஹையிலடைந்துள்ளது. அஜ்ஞாந ராத்ரி என்றார் முன்பு. இங்கே மஹாராத்ரி என்கிறார்.

உம்முடைய முக சந்த்ரன் என்னுடைய ஹ்ருதயத்தில் ப்ர காசித்து இருளைப்போக்கி ஆஹ்லாதனம் செய்யவேணு மென்கிறார். சகோர பக்ஷிகள் சந்த்ரப்ரபையையே ஆஹார மாகப் பருகி ஜீவிக்குமென்று கவி ஸமயம். இந்த சந்த்ரி கையை முநீந்த்ரர்களுடைய சித்தம் சகோர பக்ஷிபோலப் பருகி ஜீவிக்குமென்கிறார். 'भक्तजनैकजीवितं' "பக்த ஜனைக ஜீவிதம்" என்றதை நினைக்கிறார். இந்த சந்த்ரிகை இவ ருக்குப் பருகுநீர். இந்த சந்த்ரிகை ஸமஸ்த தாபங்களையும் போக்குவது. ஸாமான்ய சந்த்ரனைப்போல் ஸ்வல்ப வெளி தாபத்தை மட்டும் போக்குவதல்ல. முநிகளின் மனங்கள் சகோர பக்ஷிகளைப்போல உம்முடைய முக சந்த்ர சந்த்ரி கையைப் பருகி ஜீவிக்கின்றனவென்று இங்கே ஆரம்பத் தில் பாடுகிறார். முடிவில் 59-ம் ச்லோகத்தில் முகுந்தமுக சந்த்ரனிடம் என் மனம் நீடூழி காலம் சகோர பக்ஷியைப் போல் ரஸிக்கட்டும் என்று பாடுகிறார். அங்கும் 'அமந்த மிளதிந்திரே" என்று ரமாமுக கமலத்தின் சேர்த்தியை பாடுகிறார். 'நக சந்த்ர சந்த்ரிகா" என்றோர் பாடம். அது "நகமணி சந்த்ரிகயா நிரஸ்ததாபே" என்ற சுகர்கா னத்தோடு சேரும்

सुग्रीवनाऽऽ पाण्डुर गण्डमण्डल प्रतिस्फुरत्कुण्डलताण्डवाद्भुतम् ।
गदाग्रज ! त्वन्मुखफुल्लपङ्कजं कदा मदक्ष्णो रतिथी भविष्यति॥

ஸுக்ரீவயாऽऽ பாண்டுர
 கண்ட மண்டல ப்ரதிஸ்புரத்
குண்டல தாண்டவாத்புதம் |
 கதாக்ரஜ! த்வந்முக
புல்ல பங்கஜம் கதாமதக்ஷ்ணோ
 ரதிதீப விஷ்யதி || [8]

கதாக்ரஜ – க்ருஷ்ண', ஸௌயௌவந, ஆபாண்டுர, கண்ட மண்டல, ப்ரதிஸ்புரத் குண்டலதாண்டவாத்புதம்– நல்ல யௌவனத்தால், நல்ல வெண்மையுள்ள கன்னமாகிய மண்டலத்தில், ப்ரதிபலிக்கும், கர்ண குண்டலத்தின் அற்புதமான நர்த்தன வட்டங்களோடு சோபிக்கும், த்வந்முக புல்ல பங்கஜம் – உம்முடைய முகமாகிய அலர்ந்த தாமரை, கதா – எப்பொழுது, மதக்ஷ்ணோ: – என் கண்களுக்கு, அதிதீபவிஷ்யதி – ப்ரியமாக விஷயமாகுமோ?

ஸ்தோத்திரத்திலுள்ள "तव पादपङ्कजं कदानु साक्षात्करवाणि चक्षुषा", "தவ பாதபங்கஜம் கதாநு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா" என்ற 3ம் ச்லோகமும், "विलंबिकुण्डल" விலம்பிகுண்டல" "मुखश्रियान्यक्कृत पूर्ण निर्मलामृतांशु बिम्बाम्बुरुहोज्ज्वलश्रियम्" "முகச்ரியா ந்யக்க்ருத பூர்ண நிர்மலாம்ருதாம்சு பிம்பாம்புருஹோஜ்வலச்ரியம்" "कोमलगण्डम्", "கோமள கண்டம்" என்ற பேலநுபவங்களும் கவி நெஞ்சிலோடுகின்றன. அதெல்லாம்கலந்து இங்கே ஒரு விசித்ராநுபவம். "ஸௌயௌவந" "ஸௌ" என்பதற்கு அசிந்த்ய திவ்யாத்புத நித்யமான யௌவனமென்றும் பொருள். "ஆபாண்டுர கண்டமண்டல:" வெண்சந்திர மண்டலம் போல கண்டமண்டலம் என்று மண்டல சப்தப்ரயோகத்தின் கருத்து. "நிர்மலாம்ருதாம்சுபிம்பம்" என்று ஸ்தோத்ரரத்ந பத்யத்தின் ப்ரதிபிம்பம். சந்த்ரபிம்பத்தோடு "அம்புருஹோஜ்வலச்ரியம்" என்று முகச்ரீவர்ணநத்திலங்கே சேர்த்ததைப்போல் இங்கும் "முகபுல்ல பங்கஜம்" என்று தாமரை ச்ரீயைச் சேர்க்கிறார். சந்த்ரன், தாமரை என்ற இரண்டு ஸஹஜ விரோதிகளும் இன்பமாகச் சேரும்முகம். "चन्द्रं गता पद्मगुणान् न भुङ्क्ते" "சந்த்ரம் கதா பத்மகுணாந்

ந புங்கதே" என்று காளிதாஸர் த்விஸம்ச்ரயமான ப்ரீதியை வர்ணித்தார். அதற்கடி "हेम समान वर्णं तस्याननं पद्म समान गन्धि" "ஹேம ஸமான வர்ணம் தஸ்யாநநம் பத்ம ஸமாந கந்தி" என்று பிராட்டிமுகமாக ஆதிகாவ்யம். "கதாக்ரஜ" ருக்மிணீ தன் ப்ரணய பத்திரிகையில் "गदाग्रज एत्य पाणिं गृह्णातु मे" "கதாக்ரஜ எத்ய பாணிம் க்ருஹ்ணாதுமே" என்று அழைத்த சப்தம். உம் திருமுகமண்டல ஸேவைக்கு அவளாசைபட்டதுபோல் என் ஆசை. ருக்மிணி கையைப் பிடித்து மார்பில் தரித்தது போல் எனக்கும் கை கொடுத்து என்னை மார்பில் தரிக்கவேணும். 'அதிதிரிவிஷ்டபதி" நீராக திடீரென்று என்னிடம் வந்து பசியோடு என்னை வாரிக்கொண்டு விழுங்கவேணும் "लोचनाभ्यां पिबन्निव" "லோசனுப்யாம் பிபந்நிவ" என்றதுபோல என் கண்கள் உம் திருமுகக்கமலத்தைப் பருகவேணும்.

सुरापगातुङ्ग तरङ्गचालितां सुरासुरानीक ललाट लालिताम् ।
कदा दधे देव दयामृतोदधे! भवत्पदाम्भोरुहधूलिधोरणीम् ॥

ஸுராபகா துங்கதரங்க சாலிதாம்
ஸுராஸுரா நீக லலாட லாளிதாம் |
கதா ததே தேவ தயாம்ருதோததே
பவத்பதாம் போருஹ தூளி தோரணீம் ॥
[9]

தயாம்ருதோததே! – தயாம்ருதக்கடலே!, தேவ – தேவனே!, ஸுராபகாதுங்க தரங்க சாலிதாம் – கங்கையின் உயர்ந்த அலைகளால் அசைக்கப்படுவதும், ஸுராஸுரா நீகலலாட லாளிதாம்–தேவாஸுரக கூட்டங்களின் நெற்றிகளால்போற்றி ஒத்திக்கொள்ளப்படுவதுமான, பவத்

பதாம் போருஹ தூளி தோரணீம் – உம் திருவடித்தாமரை யின் தூளிகளின் ஸந்தியை, கதா – என்று கொல், ததே – தரிப்பானோ ?

" दयासिन्धो बन्धो निरवधिक वात्सल्य जलधे " "தயா ஸிந்தோ பந்தோ நிரவதிகவாத்ஸல்ய ஜலதே " என்பதெல் லாம் நெஞ்சிலோடுகிறது. " தயாம்ருதக்கடலே " என்று அழைக்கிறார். கங்கை நீரலைகளால் சலிக்கும் திருவடித் தாமரை. ஸாமான்ய நீரிலுள்ள தாமரையல்ல. " ஸ்ரீமாத வாங்க்ரி ஜலஜத்வயம் " கங்கை நீர் சூழ்ந்தலைக்கப்பெற்ற தாமரை. நீரில் தாமரை உதிக்கும். உம் திருவடித் தாம ரையில் கங்கா ப்ரவாஹமுற்பத்தியாகிறது. உலகத்தைப் பரிசுத்தமாக்க கருணையால் உம் திருவடி பெருக்கும் நீர் திரு வடியிலுதித்து திருவடி தூளிகளையும் சேர்த்திழுத்துக் கொண்டு பூமண்டலத்தில் விழுந்து, பவித்ரபவித்ரமான அந்த தூளி ஸ்பர்சத்தை எல்லோர் சிரஸுக்குமளிப்போ மென்று கங்கைக்காசை. அச்யுதன் திருவடித் தாமரையை சலிக்கச் செய்யவியலாவிட்டாலும், அதன் தூளிகளை சலிக் கச் செய்துகொண்டு போகின்றன. தேவாஸுரர்கள் ப்ர ணாம் செய்கையில் நெற்றிகளில் அந்த தூளிகளை ஒற்றிக் கொள்கிறார்கள். த்ரிவிக்ரமனே! என்று கொல் என் சிர ஸ்ஸை அலங்கரிக்குமோ உம் தாமரைத் திருவடி என்றது போல் இங்கே அநுபவம். தூளியை தரிப்பது என்பதற்கு திருவடித் தாமரையை சிரஸில் தரிப்பது என்று கருத்து. கங்கை உத்பத்தியானது த்ரிவிக்ரமன் தாளில். அது தாவி வையமளந்ததுபோல் அதில் தோன்றிய கங்கையும் உலகத் தில் பாவியது. அதைப்போல தானும் "த்ரிஸ்ஸ்ரோதஸம் த்ரிபதகா " என்றாயிற்று. " த்ரிவிக்ரம " என்று ஆள வந்தாரழைத்ததில் இத்தனை கருத்துகள் த்வனிக்கின்றன வென்று இந்த ச்லோகத்தால் வ்யஞ்ஜநம்.

महाजवाश्छिन्नविवेकरश्मयो मदोद्धता देव मदक्षवाजिनः ।
हरे (अलं) समासाद्य तवाङ्घ्रिमन्दुरा मपास्तवेगा दधतां
सुशीलताम् ॥

மஹாஜவா: சிந்ந விவேக ரச்மயோ
மதோத்ததா தேவ! மதக்ஷவாஜிந: |
ஹரே (அலம்) ஸமாஸாத்ய
தவாங்க்ரிமந்துராம்
அபாஸ்தவேகா: தததாம் ஸுசீலதாம் ‖

தேவ - தேவனே, ஹரே - பகவானே!, மஹாஜவா: அதி வேகமாக ஓடுவதும், சிந்ந விவேக ரச்மய: - விவேகமென்னும் கடிவாளங்கள் அறுந்தவைகளும், மதோத்ததா: - திமிர் கொண்டு அடங்காதவைகளுமான, மத் அக்ஷ வாஜிந: - என்னுடைய இந்திரியங்களாகிற குதிரைகள், தவ - உம்முடைய, அங்க்ரி மந்துராம் - திருவடி எனும் கட்டுத்துறையை (அச்வாலயத்தை), ஸமாஸாத்ய - அடைந்து, (பொருந்திக் கட்டுண்டு) அபாஸ்த வேகா: - ஓட்டத்தை விட்டு சலிக்காமல், ஸுசீலதாம் - ஸாதுத்தனத்தை, தததாம் - வஹிக்கட்டும்.

"इन्द्रियाणि हयानाहुः" "இந்த்ரியாணி ஹயாநாஹு:" என்று இந்த்ரியங்கள் குதிரைகளென்று கடவல்லி கவி பாடிற்று. "दुष्टाश्वा इव सारथेः" "துஷ்டாச்வா இவ ஸாரதே:" என்றும் பாடிற்று. ஸாதுவான இந்த்ரியக் குதிரைகள் சேர வேண்டிய முடிவிடமான விஷ்ணு பதத்தைச் சேர்ப்பிக்கும். துஷ்ட இந்த்ரியக் குதிரைகள் அங்கே சேரக்கூடாமல் புறமே புறமே இழுத்துப்போம்.

விஷ்ணு பதம் என்பது பகவானுடைய பரமபத ஸ்தானத்தையும் சொல்லலாம். பரம ப்ராப்யமான அவரது திருவடியையும் சொல்லலாம். இங்கே அந்த ச்ருதியைத் திருவடி பரமாகக் கொள்ளுகிறார் போலும். 'மநம் கடிவாளம்' என்றது ச்ருதி. இங்கே விவேகம் கடிவாளமென்கிறார். விவேகத்தோடு கூடிய மனம் கடிவாளம். விவேகம் கூடாவிடில் மனமென்னும் கடிவாளம் அறுந்ததேயாகுமென்று கருத்து. கடிவாளத்தை யறுத்துக்கொண்டு அதனையும் சேர்த்து இழுத்துக்கொண்டு போகும் முரட்டுக் குதிரைகள். கடிவாளம் குதிரையை அடக்கி இழுக்காமல் கடிவாளம் அறுந்து இந்திரியக் குதிரை ரதத்தையும் ரதியையும் சேர்த்து மார்க்கம் தப்பியிழுத்தோடுகிறது. பல முரட்டுக் குதிரைகள் கடிவாளத்தை யறுத்துக்கொண்டு இழுத்தோடுகின்றன. 'பல சக்களத்திகள் பலவாறாக பதியை இழுத்து ஹிம்ஸிப்பது போல' என்று ஓர் வித வர்ணனம். அந்த வர்ணனம் ஸ்ரீ சுகருடையது. 'ஹரே' என்று குதிரைக்கும் பகவானுக்கும் பொருந்தும். குதிரை ஹரிகளின் முரட்டுத்திமிரை ஹரிப்பவர் ஹரி பகவான் என்று ரஸம். இந்த்ரியக் குதிரைகளை (ஹரிகளை) ஹரி அடக்குகிறார். மந்துரா என்பது குதிரை கட்டும் கொட்டம். அங்கே கட்டிவிட்டால் துஷ்டக் குதிரைகளும் அடங்கி சலிக்காமல் நிற்கும். உம் திருவடிகளின் அழகிலீடுபட்டு அங்கே நிச்சயமாக அடங்கி நிற்கும்.

पुरातनानां वचसामगोचरं महेशितारं पुरुषोत्तमं पतिम् ।
अपास्य तं त्वां निरपत्रपा सती सती मतिर्मे कथमन्यमेष्यति ॥

புராதநாநாம் வசஸாமகோசரம்
மஹேசிதாரம் புருஷோத்தமம் பதிம் |

அபாஸ்ய தம் த்வாம் நிரபத்ரபா ஸதீ
ஸதீ மதிர்மே கதமந்யமேஷ்யதி ॥

(ஸாஸ்வதீமே) என்று பாடாந்தரம்.

புராதனானாம் - பண்டை, வசஸாம் - (நான்) மறைகளுக்கும், அகோசரம் - எட்டாதவரும், மஹேசிதாரம் - ஈசர்களுக்குமீசனும், புருஷோத்தமம் - புருஷோத்தமனும், பதிம் - காந்தனுமாகிய தம் - ப்ரஸித்தமான, த்வாம் - உம்மை, அபாஸ்ய - தள்ளி, நிரபத்ரபா ஸதீ - வெட்கமில்லாமல், ஸதீ மே மதி: - பதிவ்ரதா வ்ரதம் கொண்ட என்னுடைய புத்தி, கதம் - எப்படி, அந்யம் - மற்றொருவ(புருஷ)னை, ஏஷ்யதி - செல்லும்.

'महेश हातुं तव पादपङ्कजं' 'மஹேச ஹாதும் தவ பாத பங்கஜம்' 'कः पुण्डरीकनयनः पुरुषोत्तमः कः' 'க: புண்டரீகநயன: புருஷோத்தம: க:' 'कवये निरपत्रपाय' 'கவயே நிரபத்ரபாய' 'मामलज्जम्' 'மாம் அலஜ்ஜம்' முதலிய ஸ்தோத்ர ரத்னபத்யங்கள் நெஞ்சிலோடுகின்றன. முன் ச்லோகத்தில் 'विषयांस्तेषु गोचरान्' 'விஷயாம்ஸ்தேஷு கோசரான்' என்கிற கடவல்லி உபநிஷத்து கவி நெஞ்சிலோடிற்று. இங்கு 'கோசர' என்ற பதம் புகுகிறது. 'மஹேச்வர' என்று கூப்பிட்டால் 'महेश्वरस्त्र्यम्बक एव नापरः' 'மஹேச்வரஸ்த்ர்யம்பக ஏவ நாபர:' என்ற காளிதாஸ ச்லோகத்தில் சொல்லியபடி ஈச்வரனைக் கூப்பிட்டதாகத் தோன்றிவிடும். அந்த ச்லோகத்தில் 'हरिर्यथैकः पुरुषोत्तमः स्मृतः' 'ஹரிர்யதைக: புருஷோத்தம: ஸ்ம்ருத:' என்பதை 'புருஷோத்தம க:' என்றவிடத்தில் ஆளவந்தார் நினைத்தது போல இங்கும்

இக்கவியும் நினைக்கிறார். அதே ச்லோகத்தில், மஹேச்வர சப்தம் ஈச்வரனொருவனையே சொல்லுமென்றிருப்பதால் அந்த சப்தத்தை விட்டுவிட்டு, 'மஹேச' என்று ஆளவந்தார் ப்ரயோகித்தார். புருஷோத்தம சப்தம் விஷ்ணுவுக்கு அஸாதாரணமென்பதற்கு காளிதாஸ ச்லோகத்தை ஸாக்ஷி கோருகையில் கூடவே மஹேச்வர சப்தம் ஈச்வரனுக்கு அஸாதாரணமென்பதும் வரும். இங்கு புருஷோத்தம சப்தத்தோடு 'மஹேசிதாரம்' என்று படித்திருப்பதற்கு இது கருத்து. என் மதி பதிவ்ரதை. யவன் புருஷ ஸூக்தம் பாடும் புருஷனோ, அவன் தான் விச்வத்திற்கும் பதி. அவன் தான் என் மதி என்னும் பெண்ணின் பதி. வெட்கமில்லாமல் மற்றோர் புருஷனை மதியாது என் ஸதீயான மதி என்கிறார். இங்கே, 'நிரபத்ரபா', '19-ல்' 'களிதத்ரபஸ்ய மே', 56-ல் 'நிஸ்த்ரப:'. ஆளவந்தார் ஸ்தோத்ரரத்தில் 'நிரபத்ராபாய:' என்று தொடங்கி, 47-ல் 'मामलज्जम्' 'மாமலஜ்ஜம்' என்று பாடியுள்ளது. 'ஸரஸ்வதீ மே' என்கிற பாடம் ஸ்தோத்ர ரத்நத்தின் மார்க்கத்திற்கு நன்கு பொருந்தும். 'கதமந்யதிச்சதி' என்பது போல, 'கதமந்யமேஷ்பதி.'

(11)

न जाग्रता स्वप्नगतेन वा मया समीहितं ते करुणालवादृते ।
गिरं मदीयां यदि वेत्सि तात्त्विकीं तदा जगन्नायक मामुरीकुरु ॥

ந ஜாக்ரதா ஸ்வப்நகதேந வா மயா
ஸமீஹிதம் தே கருணாலவாத்ருதே |
கிரம் மதீயாம் யதி வேத்ஸி தாத்விகீம்
ததா ஜகந்நாயக மாமுரீகுரு ||

ஜகந்நாயக! - உலக நாயகனே! ஜாக்ரதா - விழித்திருக்கும் போதாவது, ஸ்வப்நகதேந வா - ஸ்வப்நம் காணும்

போதாவது, தே - உம்முடைய, கருணாலவாத்ருதே - தயையின் திவலையன்றிக்கு. மயா - என்னால், ந ஸமீஹிதம் - ஒன்றும் செய்யப்படவில்லை. ஒரு ஆசையும் படவில்லை. மதீயாம் - என்னுடையதான. கிரம் - பேச்சை, தாத்விகீம் - உண்மை என்று, யதி வேத்ஸி - அறிவாயேல். ததா - அப்பொழுதே. மாம் - என்னை, உரீ குரு - அங்கீகரிக்க வேணும்.

உம்முடைய க்ருபையல்லாது நான் விழிப்பிலும், ஸ்வப்நத்திலும் ஒரு ஆசையும் படவில்லை. ஒரு செய்கையும் செய்யவில்லை. உம் அருளில்லாமல் நான் என்ன ப்ரவ்ருத்தி செய்யக்கூடும். என் வாயிலிருந்து வரும் ஆர்த்திப் பேச்சை எந்த க்ஷணத்தில் உண்மை என்று நீர் அறிகிறீரோ, என் வாய் திறக்கும் தத்க்ஷணத்தில் என்னை அங்கீகரித்து விட வேணும். இவ்வார்த்திப் பேச்சு என் வாயிலிருந்து உண்மையாக வருவது உம் அருளாலேயே என்பது கருத்து. 'निदानं तत्रापि स्वयम्' 'நிதாநம் தத்ராபி ஸ்வயம்'. உலக நாயகன் என் மதிக்கு நாயகன். (12)

अयि दीनतरं दयानिधे ! दुरवस्थं सकलैस्समुज्झितम् ।
अधुनापि न मां निभालयन् भजसे हा कथमश्मचित्तताम् ॥

அயி தீநதரம் தயாநிதே!
துரவஸ்தம் ஸகலைஸ்ஸமுஜ்ஜிதம் |
அதுநாபி ந மாம் நிபாலயந்
பஜஸே ஹா கதமச்ம சித்ததாம் ॥

அயி தயாநிதே! - அம்மா (ஓ) தயாநிதியே! ஸகலை: - எல்லோராலும், ஸமுஜ்ஜிதம் - கை விடப்பட்ட, தீநதரம் - மிகவும் சோச்யனாய், அனாதையாய், துரவஸ்தம் - பரமாபத்தையடைந்த, மாம் - என்னை, அதுநா அபி - இப்பொழு

தும், ந்ருபாலயர்-கண்ணெடுத்துப்பார்க்காமல், ஹா-ஐயோ, கதம் - எப்படி, அச்மசித்ததாம்-கல்நெஞ்சான தன்மையை, பஜஸே - வஹிக்கிறீர்.

முதல் 12-ச்லோகங்களின் வ்ருத்தம் வம்சஸ்தம். வம்சஸ்தவிதம் வைதாளீயம் என்றும் பெயர். வம்சம்—வேணு. கண்ணனுக்கு மிக ப்ரியம் அது. வேணுகானம் போல் மதுரமான பத்யங்கள். 'षाड्गुण्यप्रगुणा नीतिर्वंशस्थेन विराजते' 'ஷாட்குண்ய பரிபூர்ணனான வாஸுதேவனைத் துதிக்க ஏற்ற வ்ருத்தம். த்வாதசாக்ஷரக் கணக்கை யநுஸரித்து அந்த வ்ருத்தத்தில் 12- ச்லோகங்கள். இது முதல் 42- ச்லோகங்கள் வியோகினீ வ்ருத்தம். கண்ணனைச் சரணம் புகுந்தும் அவன் முகம் காட்டவில்லையே என்று விரஹத்தால் தவிப்பதற்கு ஏற்ற வ்ருத்தம். 'அஜவிலாபம், ரதிவிலாபம்' இரண்டும் இந்த வ்ருத்தம். ஸ்தோத்ர ரத்னத்தில், 'அபராத ஸஹஸ்ர பாஜநம்' என்று தொடங்கி 9-பத்யங்கள் இந்த வ்ருத்தம். கருணை ரஸத்திற்கு ஏற்றது. 'தீந' என்பது கார்ப்பண்யத்தைக் காட்டுவது. அதில் 'தரப்'பையும் சேர்த்தார். 'அபி' என்பது இரக்கத்தைத் காட்டும். மிக்க ப்ரியனான என்னைக் கைவிடலாமோ, என்று கருணமாய் அழைப்பது. 'தயாநிதே' தயை என்பது பால் போன்றது. கல்நெஞ்சிற்கு நேர் விரோதம். ஸமுஜ்ஜிதம் - விடுகையோடு கூடிய என்னை - விட்ட என்னை, 'ந்ருபாலயர்' சாந்தோக்யத்தில் ஸத்வித்யையில், 'ந்ருபாலயஸே' என்று ச்வேதகேதுவைப் பார்த்துத் தகப்பனார் ப்ரயோகித்த சப்தத்தை ப்ரயோகிக்கிறார், ஆலமரத்திலுள்ள சிறு விதையைக் கிள்ளச் சொல்லி, அதற்குள் என்ன பார்க்கிறாய் என்று கேட்டதற்கு, புத்ரன், 'அதற்குள் ஒன்றும் காணேன்' என்றான். அந்த விதைக்குள் இந்தப் பெரிய ஆலமரமிருக்கிறது. அது

ஸூக்ஷ்மமாய் இருப்பதால் நீ பார்க்கவில்லை. இது போல ப்ரஹ்மம் மிக ஸூக்ஷ்மமாய் ஸூக்ஷ்மப் பொருளுக்குள்ளுமிருக்கிறது. அது ஸூக்ஷ்மமாய் இருப்பதால் நீ பார்க்கவில்லை என்றார். 'ஸ ஏஷோ அணிமா' என்றார். "ப்ரஹ்மமாகிய உம்மை எங்கள் காண முடியாதது உசிதமே. விபச்சித்தும், ஸர்வஜ்ஞனும் ஸர்வசித்துமான நீர் என்னைக் காண்பது உமக்கும் அரிதோ' என்கிற பரிஹாஸத்தை உட்கொண்டு அந்த சப்தங்களை இங்கே ப்ரயோகிக்கும் ரஸம் மிகவழகு. எங்கள் மனம் கல்லா இருக்கலாம். உம் நெஞ்சம் அப்படியாகலாமோ? 'தாய் மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்றல்லவோ பழமொழி. (13)

सुमहान्ति जगन्ति बिभ्रतस्तव यो नाविरभून्मनागपि ।
स कथं परमाप्त ! देहिनां परमाणोर्मम धारणे श्रमः ॥

ஸுமஹாந்தி ஜகந்தி பிப்ரத:
தவ யோ நாவிரபூந் மநாகபி |
ஸ கதம் பரமாப்த! தேஹிநாம்
பரமாணோர் மம தாரணே ச்ரம: ||

தேஹிநாம்-தேஹமுடைய சேதநருக்கும், பரமாப்த! - அத்யந்த ஸுஹ்ருத்தானவரே! ஸுமஹாந்தி - மிகப் பெரிய, ஜகந்தி - உலகங்களை, பிப்ரத: - சுமக்கும், தவ - உமக்கு, மநாக் அபி - கொஞ்சம் கூட, ய: ச்ரம: - யாதொரு ச்ரமும், ந ஆவிரபூத் - உண்டாகவில்லையோ, பரமாணோ: மம - அதி ஸூக்ஷ்மமான அணுவிலுமணுவான என்னுடைய (என்னை), தாரணே - தாங்குதலில், கதம் - எப்படி, ஸ: ச்ரம: - அந்த ச்ரமமேற்படும்.

ஸத்வித்யை முன் ச்லோகத்தில் நெஞ்சிலோடிக்கொண்டிருக்கையில் 'ஸய ஏஷோ அணிமா' என்ற ச்ருதி நெஞ்சிலோடிற்று. ப்ரஹ்மத்தை', அணிமா அதி ஸூக்ஷ்மம்' என்றது. நீர் அணுவுமாவீர், எங்கும் வ்யாபிக்கும் விபுவுமாவீர், நானோ அணு மாத்ரமே. நான் விபுவல்ல. உலகங்களை அநாயாஸமாகத் தாங்கும் உமக்கு அணுவான என்னைத் தாங்குவது ச்ரமமோ? 'பரமாத்ம தேஹிந:' என்றோர் பாடம். விச்வத்திற்கு ஆத்மாவான உமக்கு விச்வம் சரீரம். நானும் உமக்கு சரீரம். உம் தேஹமாகிய உலகங்களை அநாயாஸமாகச் சுமக்கும் உமக்கு உம் தேஹமான இந்த அணுப்பொருளைத் தாங்குவதில் ச்ரமம் கூடுமோ? (14)

नितरां विनयेन पृच्छते सुविचार्योत्तरमत्र यच्छ मे ।
करितो गिरितोऽप्यहं गुरुः त्वरितो नोद्धरसे यदद्य मे ॥

நிதராம் விநயேந ப்ருச்சதே
ஸுவிசார்யோத்தர மத்ர யச்ச மே |
கரிதோ கிரிதோப்யஹம் குரு:
த்வரிதோ நோத்தரஸே யதத்ய மே ||

நிதராம் - மிகவும், விநயேந - வணக்கத்தோடு, ப்ருச்சதே - கேட்கும். மே - என் பொருட்டு, அத்ர - இக்கேள்விக்கு, ஸுவிசார்ய - நன்றாய் ஆலோசித்து, உத்தரம் - பதிலை, யச்ச - தாரும். அத்ய - இன்று, (இப்போதே) மாம் - என்னை, த்வரித: - பரபரப்புடன், யத் நோத்தரஸே - கை தூக்கி விடாமலிருக்கிறீரென்பதென்? அஹம் - நான் கரித: - யானையினும், கிரித: அபி - கோவர்த்தன மலையினும், குரு: - கனத்தவனோ?

'तेषामहं समुद्धर्ता मृत्युसंसार सागरात्' 'தேஷா மஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு ஸம்ஸார ஸாகராத்' என்ற கீதையில்

உம்முடைய உறுதி வார்த்தை. அணுவான என் ஆத்மாவைத் தரிப்பது கஷ்டமோ என்று கேட்டேன். தேஹமே ஆத்மா தேஹபரிமாணம் ஆத்மா என்று சிலர் சொல்லுவர். கீதையிலும் 'अथचैनं नित्यजातं नित्यं वामन्यसे मृतम्' 'அத சைநம் நித்ய ஜாதம் நித்யம் வா மந்யஸே ம்ருதம்' என்று பக்ஷாந்தரங்களையும் பேசி ஸமாதானம் சொல்லப்பட்டது: 'உன் தேஹத்தை நான் எப்படித்தூக்குவது?' என்று கேட்டாலும் கஜேந்திரனிலும் நான் கனமோ. கோவர்த்தன பர்வதத்திலும் நான் கனமோ என்று கேட்கிறார். 'திருமாலே கட்டுரையே' என்று ஆழ்வார் பதிலுரை கேட்டது போலக் கேட்கிறார். 'த்வரித;' த்வரைக்கே நமஸ்காரம் செய்வர். தன்விஷயமாக பகவானுடைய த்வரைக்கு ஆசைப்படுகிறார். (15)

न धनं न च राज्यसंपदं न हि विद्यामिदमेकमर्थये ।
मयि धेहि मनागपि प्रभो ! करुणाभङ्गितरङ्गितां दृशम् ॥

ந தநம் ந ச ராஜ்ய ஸம்பதம்
ந ஹி வித்யாமிதமேக மர்த்தயே |
மயி தேஹி மநாகபி ப்ரபோ!
கருணாபங்கிதரங்கிதாம் த்ருஶம் ||

ப்ரபோ - ஓ ப்ரபுவே!, தநம் - செல்வத்தை, ந ஆர்த்தயே - ப்ரார்த்தியேன். ராஜ்ய ஸம்பதம் ச - ராஜ்யைச்வர்யத்தையும், ந அர்த்தயே - ப்ரார்த்தியேன். வித்யாம்-வித்யையும், ந ஹி அர்த்தயே - கோறேன். இதம் ஏகமேவ அர்த்தயே - இதொன்றைத் தான் கோறுவேன். (அது யாதெனில்) மநாக் அபி-திணையேனும, மயி-என்னிடம், கரு

ஞாபங்கிதரங்கிதாம் - தயையினலைத்தலோடு கூடிய, த்ருசம் - த்ருஷ்டியை தேஹி - வைத்தருள வேணும்.

செல்வம் வேண்டேன். அரசு வேண்டேன். கல்வி யும் வேண்டேன். உம் க்ருபா கடாக்ஷமொன்று தான் வேணும். இதொன்றே தானடியேன் செய்யும் விண்ணப்ப மென்கிறார். 'घनकरुणारसौघभरितां परितापहरां नयन महच्छटां मयि तरङ्गय रङ्गपते' 'கநகருணா ரஸௌக பரிதாம் பரிதாபஹராம் நயந மஹச்சடாம் மயி தரங்கய ரங்கபதே' என்பதை நினைக்க வேணும். 'आज्ञां ख्यातिं धनमनुचरानाधि राज्यादिकं वा' 'ஆஜ்ஞாம் க்யாதிம் தநமநுசராநாதி ராஜ்யாதிகம் வா' என்ற தயாசதக ச்லோகத்தையும் நினைக்க வேணும் 'न देहं न प्राणान्न च सुखं' 'ந தேஹம் ந ப்ராணாந் நசஸுகம்" என்கிற ச்லோகத்தின் ப்ரகாரம் ஒருவிதம். (16)

अयमत्यधमोऽपि निर्गुणो दयनीयो भवता दयानिधे! ।
वमतां फणिनां विषानलं किमु नानन्दयिताऽपि चन्दनः ॥

அயமத்யதமோ²பி நிர்குணோ
தயநீயோ பவதா தயாநிதே! |
வமதாம் பணிநாம் விஷாநலம்
கிமு நாநந்தயிதாபி சந்தந: |

தயாநிதே! - கருணைக்கடலே! அயம் - இந்த, நிர்குண: - குணமற்றவன், அத்யதம: அபி - மிகவும் கடையோனு யினும், தவ - உமக்கு, தயநீய: - தயைக்குப் பாத்திரமா வேன். விஷாநலம் - விஷ நெருப்பை, வமதாம் - கக்கு கின்ற, பணிநாம் அபி - ஸர்ப்பங்களுக்கும், சந்தந: சந்தந

வ்ருக்ஷமானது, ந ஆநந்தயிதா கிமு - ஆநந்தத்தை பளிக்க வில்லையா?

'अमर्यादः क्षुद्रः —पापिष्ठः' 'அமர்யாத: க்ஷுத்ர:— பாபிஷ்ட:' 'निहीनाचारोऽहं' 'நிஹீநாசாரோऽஹம்' என்பது போல அத்யந்தமேனென்றும், நிர்குணனென்றும், ஸ்வாபகர்ஷாநுஸந்தாநம். 'दयनीयस्तव नाथ दुर्लभः' 'தயநீயஸ்தவ நாத! துர்லப:' 'महते त्वं दयनीयवांश्च' 'மத்ருதே த்வம் தயநீயவாந் ந ச' என்ற ஸ்தோத்ர ரத்ந பத்யச் சொற்கள் நெஞ்சிலோடுகின்றன. 'नतेऽनु कम्प्यः' 'நதேऽநு கம்ப்ய:' என்று தொடங்கி, 'तवानुकम्प्यः' 'தவாநுகம்ப்ய:' என்று முடிவிலும் அங்கு 'தயநீயன்' என்பதின் பர்யாய சப்தம் ப்ரயோகிக்கப் பட்டது. இங்கே 30-ம் ச்லோகத்திலும் 'தயநீய: க்ருபணயவ கேவலம்' என்று பாடுகிறார். ஸர்ப்பம் போல் என் வாயிலிருந்து நான் விஷத்தைக் கக்கினலென்ன? நீர் ஹரிசந்தநரல்லவோ. 'सुखयति निजच्छायादायी स्वयं हरिचन्दनः' 'ஸுகயதி நிஜச்சாயா தாயீ ஸ்வயம் ஹரிசந்தந:' 'मोदेत साधुरपि वृश्चिकसर्पहत्या' 'மோதேத ஸாதுரபி வ்ருச்சிக ஸர்பஹத்யா' என்றார் ப்ரஹலாதர். தேளையும் பாம்பையும் கொன்றால் ஸாதுவும் ஸந்தோஷப்படுவார் என்றார். அப்பொல்லாத ஸர்ப்பத்திற்கும் சந்தந வ்ருக்ஷம் நிழல் தந்து இடம் தந்து ஆநந்தபடுத்துகிறது. 'यदि वा रावणस्स्वयं' யதி வா ராவணஸ் ஸ்வயம்' என்னும் ஹரி சந்தந வ்ருக்ஷம், தண்டகாதபோவந ஜங்கம பாரிஜாதம். 'கிமு நாநந்தயிதா' 'एषह्येवानन्दयाति' 'ஏஷஹ்யேவாநந்தயாதி' என்கிற ஆநந்தமய ச்ருதியை நினைவூட்டுகிறார். ஆனந்த மயனாகிய உம் கரு

னைக்கு விஷயமாகிவிட்டால், 'किमहं पापमकरवं ' கிமஹம் பாபமகரவம்' (பாவியேன் என்ன பாபம் செய்தேன்) என்று தபிக்க வேண்டியதேயில்லை. 'पापिष्ठः क्षत्रबन्धुश्च' 'பாபிஷ்ட: க்ஷத்ரபந்து: ச" என்பதை 'அதிஅதயோZபி' என்பது நினைவூட்டுகிறது.

(17)

क्षुधितस्य न हि त्रपास्ति मे प्रतिरथ्यं प्रतिगृह्णतः कणान् ।
अकलङ्क यशस्करं न ते भवदीयोऽपि यदन्यमृच्छति ॥

க்ஷுதிதஸ்ய ந ஹி த்ரபாஸ்தி மே
ப்ரதிரத்யம் ப்ரதிக்ருஹ்ணத: கணாந் |
அகலங்க! யசஸ்கரம் ந தே
பவதீயோZபி யதந்யம் ருச்சதி ॥

க்ஷுதிதஸ்ய - பசியால் வருந்தும், மே - எனக்கு, ப்ரதி ரத்யம் - தெருக்கள்தோறும், கணாந் - ஸ்வல்ப சோற்றுப் பருக்கைகளை, ப்ரதிக்ருஹ்ணத: - யாசித்துக் கொள்வதில், த்ரபா - வெட்கம், நாஸ்தி ஹி - இல்லை என்பது ப்ரஸித்தம். அகளங்க! - மாசற்ற சோதியே!, பவதீய: அபி - உம்மைச் சேர்ந்தவனாயிருந்த போதிலும், அந்யம் ருச்சதி யத் - பிறனிடம் சென்று நெருங்குகிறானென்பது, ந தே யசஸ்கரம் - உம்முடைய யசஸ்ஸுக்குச் சேராது. உமக்குக் கீர்த்தி தராது.

अभूतपूर्वं मम भावि किं वा सर्वं सहे मे सहजं हि दुःखम् । किन्तु त्वदग्रे शरणागतानां पराभवो नाथ नतेऽनुरूपः "அபூதபூர்வம் மம பாவி கிம் வா ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி துக்கம் | கிந்து த்வதக்ரே சரணாகதாநாம் பராபவோ நாத நதேZநுரூப:" என்ற ஆளவந்தார் ச்லோகத்திற்கு இது

ப்ரதிபிம்பமாகும். பசி மிகுந்த ப்ராணபத்தாயிருந்தால் தாழ்ந்தவர் வீட்டிலும் அந்நத்தை இரந்து புஜிக்கலாம். பசி முதலிய ஆபத்துக்களால் வருந்தும் நான் தெருத்தெருவாகச் சென்று அஸாதுக்களிடமும் பிச்சை எடுத்துண்ணலாம். ஆபத்திற்கு விலக்கில்லை. 'यं कञ्चित्पुरुषाधमं कतिपयग्रामेशमल्पार्थदं सेवायै मृगयामहे' 'யம் கஞ்சித் புருஷாதமம் கதிபயக்ராமேச மல்பார்த்ததம் ஸேவாயை ம்ருகயாமஹே' அதம ப்ரபுக்களை ஸேவித்து நாங்கள் சோகிக்கத் தக்கவர்களாயினும் எங்களுக்கு அது ஸஹஜம். ஆபத்துக்குத் தோஷமில்லை. நாங்கள் வெட்கம் கூடப் படவேண்டியதில்லை. 'அமலன்' என்றபடி களங்கமற்ற சோதியாகிய உமக்கல்லவோ, 'உம் ஆச்ரிதனாகிய எனக்கும் பிறரையேகும்படியான துர்தசை வந்ததே' என்ற மாசு ஒட்டிக்கொள்ளும். அது உமக்குத் தகாதல்லவா. (18)

नितरां नरकेऽपि सीदतः किमु हीनं गलितत्रपस्य मे ।
भगवन्कुरु सूक्ष्ममीक्षणं परतस्त्वां जनता किमालपेत् ॥

நிதராம் நரகேऽபி ஸீதத:
குமு ஹீநம் களிதத்ரபஸ்ய மே |
பகவந் குரு ஸூக்ஷ்மமீக்ஷணம்
பரதஸ்த்வாம் ஜநதா கிமாலபேத் ||

நரகே - நரகத்தில், நிதராம் ஸீதத: அபி - மிக்க வருந்தினாலும், களிதத்ரபஸ்ய மே - வெட்கம் கெட்ட எனக்கு, கிமு ஹீநம் - என்ன குறைவு ஏற்படும். பகவந்-ஷாட்குண்ய பரிபூர்ணனே!, ஸூக்ஷ்மம் ஈக்ஷணம் - கொஞ்சம் ஸூக்ஷ்மமான த்ருஷ்டியை, குரு- செலுத்திப் பாரும். பரத: - புறம்பே, த்வாம் - உம்மை, ஜநதா - ஜநக்கூட்டம், கிம் ஆலபேத் - என்ன பேசும்?

வெர்நகரங்களில் என்னைத் தள்ளித் துக்கப்படச் செய் தாலென்ன ? வெட்கமென்பதே என்னை விட்டுவிட்டது. எனக்கு அதனாலென்ன அவமானம்? என்ன வெட்கம்? எனக்கு நரக துக்கம் ஸஹஜம் தானே. என் ஸஹஜ ஸ்திதிக்குப் புதிதாக என்ன குறைவு வந்துவிடும். 'பகவர்' ஷாட்குண்யத்தில் ஜ்நாநமல்லவோ முதல் குணம். கண் ணையும் காதையும் மூடிக்கொள்ளக்கூடாது, 'திச: ச்ரோத் ரம்' எங்கும் பரந்த திக்குகளே உம் செவி. நீரும் எங்கும் வ்யாபித்துள்ளவர். 'ஸஹஸ்ராக்ஷ:' பல்லாயிரங் கண்கள். ஸர்வ ஸாக்ஷிகளான சந்த்ர ஸூர்யர்கள் உம் கண்கள். உம் மைப் பற்றி ஜநக்கூட்டங்களென்ன பேசுகிறார்களென்ப தைக் கவனிக்க வேணும். ஆச்ரிதர்களைக் கைவிட்டதாகத் தானே வம்பு பேசுவார்கள். 'புரத:' என்பதற்கு எதிர் "பரத: என்பது. (19)

नरके निजकर्मकल्पिताः भजतो मे महतीरपि व्यथाः ।
इदमेकमसह्यमीक्षकाः यदनाथं निगदन्ति मां विभो! ॥

நரகே நிஜகர்ம கல்பிதா:
பஜதோ மே மஹதீரபி வ்யதா: |
இதமேகமஸஹ்ய மீக்ஷகா:
யதநாதம் நிகதந்தி மாம் விபோ! ||

நரகே - நரகத்தில், நிஜகர்ம கல்பிதா: - எங்கள் சொந் தச்செய்கைகளால் செய்விக்கப்பட்ட, மஹதீ: வ்யதா:-மிகக் கொடிய துக்கங்களை, பஜத: அபி மே - இடைவிடாமல் அநுபவித்துப் போகுமெனக்கும், இதமேகம்-இதொன்றே, அஸஹ்யம்- ஸஹிக்க மாளாதது, (அது யாதெனில்)விபோ - என் ப்ரபுவே!, ஈக்ஷகா: - பார்ப்பவர்கள், மாம் -என்னை, அநாதம் - நாதனில்லாதவன் (என்று) நிகதந்தி யத் - பேசு வாரென்பதே.

'உம்மன்றியில் மற்றோர் நாதனையுடையவனல்லேன்' 'நதஹம் த்வத்ருதே ந நாதவான்' என்று ஆளவந்தார் பத்யம். நீரும் என்னைத் தள்ளிவிட்டால் நான் அநாதனாகி விட வேணுமோ? என் ப்ரபுவாகிய நீரிருக்கையில் என்னை அநாதனென்று பார்ப்பவரெல்லாம் சொன்னால் உம்மையல்லவோ அவமதிப்பதாகும். 'ஈக்ஷகா:' என்பதற்கு 'பரீக்ஷகரான சான்றோர்' என்றும் பொருள் கொள்ளலாம். விவேகியான பெரியாரும் உம்மை யாச்ரயித்தும் நான் வெங்கரகங்களில் படும் துயரங்களைப் பார்த்து, இவன் அநாதனைப் ரக்ஷகரின்றி வருந்துகிறானே என்பர். 'நான் அநாதன்' என்றால் என் ப்ரபுவான என் நாதனான நீரில்லை (அஸத்) என்று பேசுவதாகும், 'ஸத்' என்றும், 'ஓரேஸத்' என்றும் வேதங்கள் (நிகதங்கள்) உத்கோஷிக்கும் உம்மை 'இல்லை' என்று பெரியோர் பேசினால் அதனிலும் கொடியது எனக்கு வேறுண்டோ. 'அவஜாநந்தி மாம் மூடா:' என்று கீதையில் பாடினீர். மூடர்களின் அவமதிப்பைக் கவனிக்கவேண்டியதில்லை. சான்றோர் அவமதிப்பைக் கவனிக்காமலிருக்கலாமோ? அந்த அவமதிப்புக் காரணத்தை உடனே நீக்கவேணும். என்னை அவர்கள் 'ஸநாதன்' 'நாதவான்' என்று பேசும்படி நீர் உடனே செய்ய வேணும்: 'நிகதந்தி' என்பது ச்ருதி வார்த்தைகள் பேசுவதைச் சொல்லும். சொல்லுபவையெல்லாம் சுருதியாம் என்றபடி பெரியோர் பேச்சுக்கள் ச்ருதி போன்றவையாகுமென்றும் ரஸம். 'क्रीडार्थमपि यत् ब्रूयुः' 'க்ரீடார்த்தமபி யத் ப்ரூயு:' அவர்கள் பரிஹாஸப் பேச்சுக்களும் ப்ரமாண வசனம் போல ஆதரிக்கத் தக்கவை. நான் நரகங்களில் படும் துயரங்களெல்லாம் எனக்கு ஸஹ்யமே. என் நாதன் விபுவாக எங்கும் ஸநாதனாக அவ்யயனாக பரந்து நிறைந்திருக்கை

யில், அவனில்லை என்று பொருள் படும்படி என்னை அநாதன் என்று பிறர் பேசும் சொல் எனக்கு அத்யந்தம் அஸஹ்யமென்கிறார். நான் படும் நரகங்கள் நான் ஸம்பாதித்தவை. என்னால் ஆர்ஜிதம். என் ஸ்ருஷ்டி. உலகம் உம் ஸ்ருஷ்டி. 'வ்யதா: பஜத:' வென் நரகத் துயர்களை இடைவிடாமல் பஜிக்கிறேன். உம்மைப் பஜிப்பதில்லை என்றால். 'விபோ' எங்கும் நித்யமாயுள்ள உம்மை இல்லை என்று மறுப்பது போல் பேசுவாரே. (20)

मृगदन्तिमुखान् मया सह प्रतिरुद्धान् भवजालबन्धनात् ।
तव मामपहाय मुञ्चतः करुणा किं न भिनत्ति मानसम् ॥

ம்ருகதந்தி முகாந் மயா ஸஹ
ப்ரதிருத்தாந் பவஜால பந்தநாத் |
தவ மாமபஹாய முஞ்சத :
கருணா கிம் ந பிநத்தி மாநஸம் ॥

மயா ஸஹ - என்னோடு கூட, ப்ரதிருத்தாந் - சிறையிலடைக்கப்பட்ட, ம்ருக தந்திமுகாந் - ம்ருகங்களான யானை முதலியவற்றை, பவஜாலபந்தநாத் - ஸம்ஸார மென்னும் வலைக்கட்டிலிருந்து, மாம் அபஹாய - என்னை ஒருவனை மட்டும் தவிர்த்து மற்றவைகளை யெல்லாம், முஞ்சத: - விடுவிக்கும், தவ - உம்முடைய, மாநஸம் - மனதை, கருணா - தயை, கிம் ந பிநத்தி - ஏன் ஓடிய (மாற)ச் செய்யவில்லை.

இந்த ஸம்ஸாரச் சிறையில் என்னோடுகூட யானை (கஜேந்திரர்) முதலிய ம்ருகங்களும் வைக்கப்பட்டிருந்தன. யானையை விடுவித்து விட்டீர். पशुर्मनुष्यः पक्षी वा ये च वैष्णव संश्रयाः 'பசுர்மநுஷ்ய: பக்ஷீவா யேச வைஷ்ணவ ஸம்ச்ரயா:'

என்றபடி எத்தனையோ ம்ருகங்களும் பசுக்களும் கட்டு அவிழ்ந்து முக்தி பெற்றன. பசுவிற்கும், பக்ஷிக்கும் நடுவிலுள்ள என்னை மட்டும் தானு இன்னும் மோசனம் செய்யாமல் தளைகயவேணும்? உம் கல்நெஞ்சம் கருணையால் கரையாதோ? "मातङ्गमानुष भिदा न विशेषहेतुः" "மாதங்கமாநுஷ பிதா ந விசேஷ ஹேது:". "समोऽहं सर्वभूतेषु" "ஸமோऽஹம் ஸர்வபூதேஷு" என்பவர், யானை என்றும், மநுஷ்யனென்றும் பேதத்தைப் பாராட்டலாமோ? 'எல்லா ப்ராணிகளுக்கும் நான் பொது, ஸமம்' என்று உம் தோகானம். (21)

निरुपाधि जनार्तिहारिणं भगवंस्त्वामवगत्य तत्त्वतः ।
कृतपुण्यचयावहेलनं कथमब्जेक्षण! मामुपेक्षसे ॥

நிருபாதி ஜநார்த்தி ஹாரிணம்
பகவந் த்வாமவகத்ய தத்வத: |
க்ருத புண்ய சயாவஹேளநம்
கதமப்ஜேக்ஷண! மாமுபேக்ஷஸே ॥

அப்ஜேக்ஷண! - தாமரைக் கண்ணனே! பகவந் - பகவானே!, நிருபாதி ஜநார்த்தி ஹாரிணம் - யாதொரு ப்ரயோஜனத்தையும் (ஹேதுவையும்) அபேக்ஷியாமல் நிராகவே ஜனங்களுடைய ஆர்த்தியைத் தீர்ப்பவனென்று, த்வாம் - உம்மை, தத்வத: - உண்மையாக, அவகத்ய - அறிந்து கொண்டு, க்ருதபுண்ய சயாவஹேளநம் - புண்யத் திரள்களைத் தேடாமல் அவமதி செய்த, மாம் - என்னை, கதம் உபேக்ஷஸே - எப்படி உபேக்ஷை செய்கிறீர்.

"पुण्यस्य फलमिच्छन्ति पुण्यं नेच्छन्ति मानवाः" "புண்ய ஸ்ய பலமிச்சந்தி புண்யம் நேச்சந்தி மாநவா:" புண்ய பலத்திற்கு ஆசைப்படுகிறார்கள். புண்யம் செய்ய ஆசைப் படுவதில்லை. ஏன் நீ ஸுக்ருதம் செய்யக்கூடாது. கொஞ் சம் ஸுக்ருதம் செய்திருந்தால், அதடியாக உன்னிடம் க்ருபை பண்ணலாமென்கிறீரோ, தத்வஞ்ஞான மல்லவோ என்னைப் புண்ய ஸம்பத்தைத் தேடாமல் அதை அநாதரிக் கச் செய்ததென்கிறார். என்ன தத்வஜ்ஞாநம்? நீர் அவ் யாஜபந்து, ஸ்வாபாவிக க்ருபாவான், அகாரணஸுஹ் ருத், என்று உம் விஷயமான தத்வஞ்ஞானமே என்னைப் புண்யச் செய்கையை யநாதரிக்கச் செய்தது. இப்படி தத் வஜ்ஞாநத்தாலே மறந்துபோன என்மீது இரக்கம் செய்ய வேண்டாவோ?' புண்யம் செய்யவில்லை என்று என்னைத் தள்ளலாமோ? 'தாமரைக் கண்ணனே' ஸ்வாபாவிக தயை யினால் என்றும் குளிர்ந்து செவ்வரியோடி மலர்ந்த திருக் கண்களையுடையவனே! (புண்யாஸ) என்றும் பாடம். (22)

सततं निगमेषु शृण्वता वरद! त्वां पतितानुपावनम् ।
पुरु पापमुपास्यतेऽनिशं त्वयि विश्वासधिया मया विभो! ॥

ஸததம் நிகமேஷு ச்ருண்வதா
வரத! த்வாம் பதிதாநுபாவநம் |
புரு பாபமுபாஸ்யதேऽநிசம்
த்வயி விச்வாஸதியா மயா விபோ! ॥

வரத! - எந்த வரமும் கொடுக்கும் பெருமானே!, விபோ - ப்ரபுவே! நிகமேஷு - வேதங்களில், த்வாம் - உம்மை, பதிதாநுபாவநம் - பதிதரான பாபிஷ்டரைப் பாவ நம் செய்பவரென்றும், ஸததம் - ஓயாமல், ச்ருண்வதா - கேழ்க்கப்பெற்ற, மயா - என்னாலே, த்வயி - உம்மிடம்

(உம் ஸ்வபாவத்தில், உம் பதிதபாவந சக்தியில்), விச்வாஸ தியா - நம்பிக்கையால், அஹிசம் - அல்லும் பகலும், புரு பாபம் - மிகுந்த பாபம், உபாஸ்யதே - நெருங்கி விரும்பி ஆச்ரயிக்கப்படுகிறது.

புண்ய ஸம்பத்தைத் தேடாதிருந்தது போகட்டும். அதிகப் பாபச்செய்கைகளைச் செய்யாமலிருக்கலாகாதோ என்று கேட்பீரோ, அதற்கும் உம்மிடம் மஹாவிச்வாஸம் தான் காரணமென்கிறோம். ஓயாமல் என் காதில் உபநிஷத்துக்கள் விழுந்து கொண்டிருக்கும். உம்மை நெருங்கி உம்மிடம் எம் ஆவி உள்கலங்கால் எங்கள் பிழைகளெல்லாம் தீயினில்தூசாகுமென்று சாந்தோக்யோபநிஷத்து ஓதுகின்றது. அப்படியே மற்ற உபநிஷத்துகளும் ஓதுகின்றன. காதால் கேட்பதுமல்லாமல், தூக்கத்தில் உம்மைக் கெட்டியாக அணைத்திருக்குங்கால் பாபங்கள் தீண்டுவதில்லை, துக்கமணுகுவதில்லைஎன்று ச்ருதி யோதுவதின் உண்மையைப் ப்ரத்யக்ஷமாக அநுபவிக்கிறோம். "ஐயோ என்ன பாபம்செய்து விட்டேன் என்ற தாபம் உண்டாகிறதில்லை உம்மை உபாஸித்து நெருங்கியவருக்கு" என்று தைத்திரீய மோது கிறது. "பவித்ராணாம் பவித்ரம் ய:", "பாவந: ஸர்வ லோகாநாம் த்வமேவ ரகுநந்தந" என்ற மஹர்ஷிகளின் பாட்டுகளைக்கேட்டு நம்பினேன். 'சுத்தி தரும் பொருள் களுக்கு சுத்தி தருபவர் யவரோ அவர்' என்று பீஷ்மர் ஸஹஸ்ரநாமத்தில். 'ஓ ராகவ! எல்லா உலகையும் பரி சுத்தமாக்குபவர் நீரே என்று சபரீ. "நிகமேஷு" என்பது நிகமஸம்மிதஸூக்ருதோக்திகளான ராமாயணாதிகளையும் சொல்லும். 'புருபாபம் உபாஸ்யதே மயா" நீர் என்னால் உபாஸிக்கப்படுகிறதில்லை. உம்மை, "विग्रहवान्धर्मः" 'விக்ரஹவாந் தர்ம:' என்று 'தர்மமூர்த்தி' என்பர். உமக்குநேர்

எதிர்த்தட்டான அதர்மத்தையே இடைவிடாமல் உபாஸித்தேனே என்று நோவுபடுகிறார். 'பதிதோத்தாரகன்' என்ற உம் திருநாமம் பாபம் செய்யக்கூடாதென்கிற பயத்தைப் போக்கி விட்டது என்று மேலே 37-ல் பாடுகிறார். ச்ருதிகளின் ஸததச்ரவணத்தால் இது வந்ததென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். (23)

सुकृतं न कृतं पुरा कदाप्यथ सर्वं कृतमेव दुष्कृतम् ।
अधुना गलितह्रिया मया भगवंस्त्वां प्रति किं निगद्यताम् ॥

ஸுக்ருதம் ந க்ருதம் புரா கதாபி
அத ஸர்வம் க்ருதமேவ துஷ்க்ருதம் |
அதுநா களிதஹ்ரியா மயா
பகவந் த்வாம் ப்ரதி கிம் நிகத்யதாம் ‖

மயா - என்னாலே, புரா - இதற்கு முன்பு, கதாபி - ஒருக்காலும், ஸுக்ருதம் - புண்யம், ந க்ருதம் - செய்யப்படவேயில்லை. அத - மேலும், ஸர்வம் துஷ்க்ருதம் - எல்லாப் பாபமும், க்ருதமேவ - செய்யவே செய்யப்பட்டது. அதுநா-இப்பொழுது, களிதஹ்ரியா, வெட்கம் நழுவின, மயா - என்னால், பகவந் - பகவானே!, த்வாம் ப்ரதி - உம்மிடம், கிம் நிகத்யதாம் - என்ன சொல்லக் கூடியதுளது.

"ந நிந்திதம் கர்ம" என்ற ஸ்தோத்ர ரத்நத்தின் 23-ம் பத்யமும், அதற்கு முந்திய "ந தர்மநிஷ்டோஸ்மி" என்கிற பத்யமும் 3-ச்லோகங்களாக நெஞ்சிலோடுகின்றன. புண்யமில்லை என்கிறாரிங்கே 22-ல், கொடிய பாபங்களைக் கூசாமல் செய்தேன் என்கிறாரிங்கே 23-ல். அவ்விரண்டையும் சேர்த்து இந்த பத்யத்தில் பாடுகிறார். தனக்கு மார்க்கதர்சியான மூலக்ரந்தத்தின் 22, 23 பத்யங்களிலுள்ளதை இங்கேயும் அதே இலக்கமிட்ட 22-23 பத்யங்களில் பாடு

வது கவனிக்கத் தக்கது. "அனுகூலங்களில்லை என்று வெறுக்க வேண்டா. உள்ள யோக்யதையையும் அழிக்க வற்றான நிஷித்தாநுஷ்டானங்களில்லையாகில் நன்மைகளை யுண்டாக்கிப் புருஷார்த்தத்தையும் தருகிறோம் என்று பகவதபிப்ராயமாகக் (கொண்டு), ப்ரதிகூலங்களாலே பூர்ணன் என்கிறார்" என்று 23-ம் பத்யத்திற்குப் பிள்ளையருளிய அவதாரிகை இங்கும் 23-ம் பத்யத்திற்குச் சேரும். 'ந-ந' என்று இரண்டு "இல்லை" சப்தங்களை வைத்து 'ஒன்று கூட பாக்கி இல்லை, எல்லாப் பாபங்களும் செய்யப்பட்டன' என்று அங்கு கூறப்பட்டது. "ஸர்வமபி துஷ்க்ருதம் க்ருதமேவ" என்று இங்கே பாடும் க்ரமம். அங்கே "இப்பொழுது பாபங்களெல்லாம் கஷ்டங்களைப் பயனாகக் கொடுக்கும் காலத்தில் உம் முன்னிலையில் வேறு கதியற்று அழுகிறேன்" என்று பாடப்பட்டது. இங்கே, ''உம் முன்னே நான் என்ன பேச்சுச் சொல்ல இடமிருக்கிறது" என்கிறார். 'தவாக்ரே' என்பதும், 'த்வாம் ப்ரதி' என்பது மொன்றே. 'அழுகிறேன்' என்பதற்கு 'பேச்சு ஒன்றும் பேசுவதற்கு விதியில்லாமல் உருப்படியில்லாமல் ரோதனம் மட்டும் செய்கிறேன். பேச்சான அழுகையில்லை. ஊமையழுகை" என்று ரஸிக்கத் தகுந்ததென்று இங்கே கவி வ்யஞ்ஜனம் செய்கிறார் போலும். பேசுவதற்கு வாயில்லை. அவ்யக்த சப்தமாக அழ மட்டும் வாயுண்டு. உருப்படியில்லாமல் தேம்பித் தேம்பி யழுகை மட்டுமே. (24)

मदकाम विमोहमत्सराः रिपवस्त्वत्पुर एव विह्वलम् ।
धृतशार्ङ्गगदारिनन्दक! प्रतिकर्षन्ति कथं न लज्जसे ॥

மத காம விமோஹ மத்ஸரா:
ரிபவஸ்த்வத்புர ஏவ விஹ்வலம் |

த்ருத சார்ங்ககதாரிநந்தக!
ப்ரதிகர்ஷந்தி கதம் ந லஜ்ஜஸே ॥

த்ருத சார்ங்க கதா அரி நந்தக ! - சார்ங்கமென்னும் வில்லு, கதை சக்ரம், நந்தகமென்னும் கத்தி சக்கிரம் இந்த ஆயுதங்களை ஏந்திக் கொண்டு ஆச்ரிதரைப் பயமில்லாமல் மகிழச் செய்யும் க்ருஷ்ண பகவானே!, மத காம விமோஹ மத்ஸரா; - அஹங்கார மதம், காமம், மோஹம், மாத்ஸர்யம் - ஆகிய, ரிபவ: - சத்ருருக்கள், த்வத் புர ஏவ- உம் முன்பே, விஹ்வலம், பலாத்காரமாய் என்னைத் தம் வசமாக்கி, ப்ரதி கர்ஷந்தி - உம்மிடமிருந்து அகற்றி இழுத்துப் போகின்றன. கதம் ந லஜ்ஜஸே - நீர் ஏன் வெட்கப்படவில்லை, உமக்கே வெட்கமாயில்லையா?

'வெட்கங்கெட்டு நான் உம்முன்னிலையில் என்ன பேசக்கூடும்' என்றார் நான் வெட்கம் கெட்டாலும், என் திண்டாட்டத்தைப் பார்த்து நீர் வெட்கப்பட வேண்டாமோ/ என்கிறார். "கிந்து த்வதக்ரே சரணாகதாநாம் பராபவோ நாத ந தேZநுரூப:' என்று ஸ்தோத்ர ரத்நத்திலுள்ளதற்கு இது பொருளென்று விளக்குகிறார். உம்மைச் சரணமடைந்தவருக்கு உம்மிடத்திலேயே அவமானம் வருவது உமக்குப் பொருந்துவதல்ல' என்பதற்கு 'என் அவமானம் உம்மதாகும். நான் வெட்கப்படாவிட்டாலும் நீ வெட்பட வேண்டி வரும்" என்று கருத்து. 'த்வதக்ரே பராபவ;' என்று அந்வயமென்பதை, ''த்வத்புர ஏவ ப்ரதி கர்ஷந்தி" என்று காட்டுகிறார். "உடைமை நோவு படுவது உடையவனுக்கு இழிவன்றோ" என்று பிள்ளை வ்யாக்யானம். 'த்வதக்ரே' என்பதற்கு, ''ஸர்வத்ர ஸந்நிஹிதரான தேவர் முன்பே" என்று அவர் வ்யாக்யாநம்: ப்ரதி கர்ஷந்தி - தூர இழுத்துக்கொண்டு போகின்றன. க்ருஷ்ணன்

ஆகிய நீ தான் இழுப்பதில் கைக்காரனென்று ப்ரஸித்தம். க்ருஷ்ணனிடமிருந்து என்னை பலாத்காரமாய் இழுத்துப் போகின்றனவே. உம்மிலும் அதற்குப் பலமோ. க்ருஷ்ணனிலும் வலிய கர்ஷகங்களோ. "சார்ங்க கதாக்யுதாயுதம்" என்று அவதார காலத்திலேயே ஆயுதங்களோடு அவதரித்ததைச் சுகர் வர்ணித்ததை யநுஸரிக்கிறார். "அரி" என்பது சக்ரம். அரங்களையுடையது. சுகர் வைத்த க்ரமத்தை யநுஸரிக்கிறார். "அரிநந்தக" என்பதில் ரஸமுண்டு. 'உம்மாச்ரிதனாகிய என்னுடைய சத்ருக்களை நீர் தகையாமல் அவர்களுக்கும் இடங்கொடுத்து ஸந்தோஷப்படுத்துகிறீரோ" என்று ஒரே எசலும் த்வனிக்கும். (25)

अयि गर्तमुखे गतः शिशुः पथिकेनापि निवार्यते जवात् ।
जनकेन पतन् भवार्णवे न निवार्यो भवता कथं विभो ॥

அயி கர்த்தமுகே கத: சிசு:
பதிகேநாபி நிவார்யதே ஜவாத் |
ஜநகேந பதந் பவார்ணவே
ந நிவார்யோ பவதா கதம் விபோ! ||

அயி - அந்தோ, கர்த்த முகே கத: - பள்ளமான குழியினருகே சென்று அதில் விழப் போவதாயுள்ள, சிசு:- குழந்தை, பதிகேந அபி - ஸம்பந்தலேசமில்லாத வழிப் போக்கனால் கூட, ஜவாத் - பரபரப்போடு வேகமாக, நிவார்யதே - தடுக்கப்பட்டு காக்கப்படுகிறது. விபோ - எங்கும் நிறைந்த ப்ரபுவே! பவார்ணவே - ஸம்ஸார ஸமுத்ரத்தில், பதந் - விழும் (அடியேன்) ஜநகேந - தகப்பனான, பவதா - உம்மாலே, கதம் ந நிவார்யதே - எப்படித் தடுத்துக் காப்பாற்றப்படாமலிருக்கலாம்?

"த்வதீயஸ்த்வத்ப்ருத்யஸ்த்வ பரிஜநஸ்த்வத்கதிரஹம்" என்று ஸம்பந்தங்களை இது வரையில் பேசி வந்தார். "பிதா த்வம் மாதா த்வம்" என்றபடி கூடல் துவக்கைச் சொல்லி மன்றாடுகிறார். என்னைப் பெற்ற தகப்பனல்லவோ. 'பிதா அஹமஸ்ய ஜகத:' என்று நீர் பாடவில்லையோ. ஒரு சிசு ஓர் சிறு பள்ளத்தில் விழும்படி அருகே சென்றால் வழிப் போக்கரும் கூக்குரலிட்டு பாந்து ஓடி குழந்தையை விழாமல் காப்பாற்றுவாரே. நான் ஸம்ஸார ஸமுத்ரத்தில் விழுந்து தத்தளிக்கிறேன். 'ஆவாரார் துணை என்று அலை நீர் கடலிலழுந்தும் நாவாய் போல்'. தகப்பனாகிய நீர் எங்கும் நிறம்பினவராய்ப் பார்த்துக் கொண்டிருந்தும் நீர் ஸர்வ சக்தராயிருந்தும் என்னைக் காப்பாற்றாமலிருக்கலாமோ? (26)

सुकृतप्रिय ! मान्यथाऽस्तु ते सुकृतिभ्यस्सुखदस्य सुप्रथा ।
अपि पापमबिभ्रतस्तु मां तव विश्वंभरनाम दुर्लभम् ॥

ஸுக்ருத ப்ரிய! மாந்யதாஸ்து தே
ஸுக்ருதிப்யஸ்ஸுகதஸ்ய ஸுப்ரதா ।
அபி பாபமபிப்ரதஸ்து மாம்
தவ விச்வம்பர நாம துர்லபம் ॥

ஸுக்ருத ப்ரிய! - தர்மத்தையே ப்ரியமாகக் கொண்டவரே, ஸுக்ருதிப்ய: -புண்ய சீலருக்கு, ஸுகதஸ்ய-ஸுகத்தைக் கொடுப்பவரென்ற, தே - உம்முடைய, ஸுப்ரதா-நல்ல யசஸு, மா அந்யதா அஸ்து - மாறாமல் அப்படியே இருக்கட்டும். பாபம் மாம் அபி - பாபியான என்னையும், அபிப்ரத: தவ - நீர் பரிக்காமல் போனால், விச்வம் பர நாம- விச்வத்தையும் பரிக்கிறவரென்றும் திருநாமம், தவ - துர்லபம் து - அரிதாய் விடுமே.

'தர்மத்தை ஸ்தாபிக்கவே அவதரிக்கிறேன்' என்று பாடுகிறீர். வேதவித்துக்களும், அத்யாத்மஜ்ஞானமுடையவரும், 'மஹாத்மாவான க்ருஷ்ணனே ஸநாதநதர்ம'மென்று பணிப்பர். ஸுக்ருதிகளுக்கு நீர் ஸுகம் தருபவர் என்கிற ப்ரஸித்தியை நீர் என்னளவும் மாற்றவேண்டாம். தர்மசீலரை வேண்டியமட்டும் பரணம் செய்யும். பாபியான என்னையும் நீர் பரிக்காவிட்டால் 'விச்வம்பரர்' என்ற உம்முடைய ப்ரஸித்தமான பிருதமாகிய திருநாமம் உமக்கு துர்லபமாகிவிடுமே. உம் பெயருக்குக் குறைவு வாராதோ. "விச்வம் பிபர்த்தி புவநஸ்ய நாபி:" என்ற வேதவாக்யம் பொய்யாகலாமோ? (27)

वचनैः परुषैरिह प्रभो ! यदि रोषं समुपागतोऽसि मे ।
मुखरं कृतकोटिकल्मषं करुणाब्धे! जगतोऽपसारय ॥

வசநை: பருஷைரிஹ ப்ரபோ!
யதி ரோஷம் ஸமுபாகதோZஸி மே |
முகரம் க்ருதகோடிகல்மஷம்
கருணாப்தே! ஜகதோZபஸாரய ॥

ப்ரபோ - ப்ரபுவே, இஹ - இங்கே, மே - என்னுடைய, பருஷை: - கடுமையான, வசநை: - சொற்களாலே, ரோஷம் - கோபத்தை, யதி ஸமுபாகதோZஸி - நீர் அதிகமாக அடைந்தால், க்ருதகோடிகல்மஷம் - கோடிக்கணக்கான அபராதங்களைச் செய்தவனும், முகரம் - அதிகப்ரஸங்கியாக சப்தித்துக்கொண்டிருக்குமிவனை, கருணாப்தே - தயாஸாகரமே, ஜகத: - ப்ராக்ருதிமண்டலத்திலிருந்து, அபஸாரய - வெளிப்படுத்திவிடும்.

பாபியை எப்படி பரிப்பது. 'ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ' (என் ஆஜ்ஞையை மீறுகிறவன் எனக்குத் த்ரோஹம் செய்தவனாவான்) என்றல்லவோ எனக்கு ரோஷம் வரும் என்று க்ருஷ்ணன் கேட்பதாகக்கொண்டு பதில் கூறுகிறார். ராஜ த்ரோஹீ என்று உமக்கு ரோஷமே ஸம்பூர்ணமாக வரட்டும். அந்த ரோஷத்தால் என்னை உம் ப்ராக்ருதிமண்டலத்திலிருந்து, உம் லீலாவிபூதியிலிருந்து அப்புறப்படுத்திவிடுமே. மரணதண்டனையோ எனக்கு உம்மாலும் விதிக்க முடியாது. உம்முடைய நித்யேச்சையால் நானும் நித்யன். 'ந ம்ரியதே விபச்சித்' என்று நீரே பாடியுள்ளீர். மரணத்திற்கு அடுத்தது நாட்டிலிருந்து விரட்டித் தீவாந்திரத்திற்கு அனுப்பிவிடுவது. இந்த ப்ராக்ருதி மண்டலத்திலிருந்தே என்னை விலக்கிவிடுமென்று ரஸமாகப் பாடுகிறார். 'அபராத ஸஹஸ்ரபாஜநம்' என்பதின் ஸ்தாநத்திலிங்கே 'க்ருத கோடி கல்மஷம்'. 'பதிதம் பீமபவார்ணவோதரே' என்பதை யநுஸரித்து 'பதந் பவார்ணவே' என்று 26-ல் பாடினார். அந்த ச்லோகம் இங்கும் கவி நெஞ்சிலோடுகிறது. 'ஆத்ம ஸாத்குரு' என்பதையே சமத்காரமாக, 'ப்ராக்ருதிக்கு அப்பால் தள்ளிவிடும்' என்கிறார். 'தமஸ: பரஸ்தாத்'. 'உம் கோபம் என் பாக்யம்' என்று ரஸம். 'மீகோப நா பாக்யம்' என்பர் தெலுங்கர். (28)

यदि वीक्ष्य ददासि मत्कृतिं न मयैव प्रतिगृह्यते तदा ।
अथ चेन्निजमाशयं प्रभो ! परितुष्टः शिरसा वहामि तत् ॥

யதி வீக்ஷ்ய ததாஸி மத்க்ருதிம்
ந மயைவ ப்ரதி க்ருஹ்யதே ததா |
அத சேந்நிஜமாசயம் ப்ரபோ !
பரிதுஷ்ட: சிரஸா வஹாமி தத் ||

மத்க்ருதிம் - என் செய்கையை, வீக்ஷ்ய - பார்த்து, அதற்குத் தக்கபடி, யதி ததாஸீ - நீர் எனக்குக் கொடுப் பதானுல், ததா - அப்பொழுது, மயா - என்னால் (அது) ந ப்ரதிக்ருஹ்யதே ஏவ - பெற்றுக் கொள்ளப்படவே மாட் டாது. அத - அந்த வழியை விட்டுவிட்டு, ப்ரபோ - என் ப்ரபுவே - நிஜம் ஆசயம் - உம் ஸ்வபாவமான மனோ தர் மத்தை (பார்த்து அதை பநுஸரித்து) (ததாஸி) சேத் - கொடுப்பீரேயானால், பரிதுஷ்ட: - பூர்ண ஸந்தோஷத் தோடு, சிரஸா - தலையால், தத் - அதை, வஹாமி - பெற்றுக்கொண்டு தாங்குவேன்.

"என்னை ஏமாற்றப்பார்க்கிறீர். பாபம் செய்த உமக்கு தண்டனை விதிக்கவேண்டியதை மாற்றி ப்ரக்ருதிக்கப்பால் கூடத்தி மோக்ஷம் கொடுக்கச் சொல்லுகிறீரே. நான் ஏமாந்து போகமாட்டேன். உம் செய்கையைப் பார்த்து அதற்குத் தக்கபடி பலன்களைக் கொடுப்பேன்" என்று பக வதபிப்ராயமாகக் கொண்டு பதில் கூறுகிறார்.

பலம் கொடுப்பதென்பதற்கு வாங்கிக் கொள்ளுகிற வன் வேணும். கொள்ளுகிறவனில்லாமல் கொடுப்பதென் பதே ஸித்திக்காது. 'கொள்வாரிலாமற் கொடுப்பவர் களுமில்லை' என்றார் கம்பர் உம்முடைய அயோத்யா பட்ட ணத்தின் வர்ணனமாகிய நகர படலத்தில். "दातृ प्रति गृही- तृभ्यां सर्वार्थाः प्रभवन्तिहि" "தாத்ரு ப்ரதி க்ருஹீத்ருப்யாம் ஸர்வார்த்தா: ப்ரபவந்தி ஹி" என்று வஸிஷ்டரால் ஜநக ரைப் பார்த்து நீர் ஸீதையை மணம் புரியுமுத்ஸவத்தில் கூறினர். என் யோக்யதையைப் பார்த்து அதற்குத் தக்க படி நீர் பலமளித்தால் அது துக்கரூபமாகத்தானே இருக் கும். நீர் கொடுக்கும் துக்க பலன்களை நான் பெற்றுக்

கொள்ள மாட்டேனென்று மறுதளித்து விடுவேன். நான் பெற்றுக் கொள்ளாமல் உம்முடைய பலதானம் எப்படி ஸித்திக்கும். உம் திருவுள்ளதனைப் பார்த்து அதை யநுஸரித்து நீரோது கொடுத்தாலும் அதை நான் தலையால் பெற்றுக்கொள்ளுகிறேன். தலையால் தாங்குகிறேன். உம் திருவுள்ளம் ஸ்வபாவமாக தயை நிரம்பியது. என் பாபங்களைப் பார்த்து நீர் அதை யநுஸரித்துப் பலன் தருவதைத் தள்ளிவிட்டால் உம் திருவுள்ளம் சீதள ஸ்வபாவமானதால் அதைப் பார்த்துக் கொடுக்கும் பலம் நல்லதாகவே இருக்கும். (29)

पतितोऽप्यतिदुर्गतोऽपि सन्नकृतज्ञो निखिलागसां पदम् ।
भवदीय इतीरयं स्त्वया दयनीयस्त्रपयैव केवलम् ॥

பதிதோऽப்யதி துர்கதோऽபிஸந்
அக்ருதக்ஞோ நிகிலாகஸாம் பதம் ।
பவதீய இதீரயந் த்வயா
தயநீயஸ்த்ரபயைவ கேவலம் ॥

பதித: அபி - பதிதனுயிருந்தாலும், அக்ருதஜ்ஞ: அபி - செய் நன்றி மறப்பவனுயிருப்பினும், நிகிலாகஸாம் பதம் அபி - ஸர்வ விதமான குற்றங்களுக்கு மிருப்பிடமாயினும், அதி துர்கத: - மிகவும் ஆபத்தசையிலிருப்பவனுகிய (நான்), பவதீய: இதி - உம்மைச் சேர்ந்தவன் என்று, ஈரயந் - சொல்லிக் கொள்கிற சொல்லிக் கொள்ளும் காரணத்தை இட்டு) த்வயா - உம்மாலே, கேவலம் த்ரபயைவ - வெட்கப்படுகிறேன் என்பதைக்கொண்டே, தயநீய: - க்ருபை செய்யப்படத் தகுந்தவன். "க்ருபயைவ" என்று பாடமிருக்கலாம். "க்ருபயா கேவலமாத்மஸாத் குரு", என்பதற்குப் பொருந்தும்.

'பவதீய இதீரயந்' உம்மைச் சேர்ந்தவன் 'தவாஸ்மி' என்று சொல்லை (சப்தத்தை)க் கொண்டே என்னிடம் தயை புரியவேணும். "பாபீய ஸோபி சரணாகதி சப்தபாஜ:" என்று ஆழ்வான் பாடியபடி. 'ததாபீத்தம் ரூபம் வசநமவலம்ப்யாபிக்ருபயா த்வமேவ' என்ற ஸ்தோத்ர ரத்ந ச்லோகத்தின் கருத்தை விவரிக்கிறார் 'க்ருதஜ்ஞ:' என்று பெருமாளையும், 'க்ருதக்ந:' என்று தம்மையும் ஸ்தோத்ர ரத்நத்தில் பேசினார். இங்கே 'அக்ருதஜ்ஞ:' என்கிறார். நான் அக்ருதஜ்ஞனாயினும் நீர் க்ருதஜ்ஞரல்லவோ. 'பவதீயன்' என்று நான் ஒரு சொல் சொல்லுவது போதாதோ என்னிடம் தயவு செய்ய க்ருதஜ்ஞராகிய உமக்கு என்று கருத்து. 'அபராத ஸஹஸ்ர பாஜநம்' என்பதையும், 'அசுபஸ்யாஸ்பதமபி" என்பதையும் 'கிலாகஸாம்' என்பதால் காட்டுகிறார். 'அகதிம்' என்பதை 'அதி தூர்கத:' என்பதால் காட்டுகிறார். 'க்ருபயைவ கேவலம்' என்ற பாடமழகு. "த்ரபயைவ" என்றிருந்தாலுமழகே. வெட்கம் என்பது எனக்கும் கொஞ்சமிருக்கிறதென்ற காரணத்தைக் கொண்டே என்மீது தயவு செய்யவேணும். அல்லது உம்மைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளும் நான் கஷ்டப்படுவது உமக்கு அவமானமென்று நினைத்தாவது என்மீது தயவு செய்யவேணும். (30)

सुकृतप्रकृतौ जने त्वया कृतया किं कृपया कृपानिधे।
यदि मादृशि सा विधीयते तव कीर्तिर्वद कीदृशी तदा ॥

ஸுக்ருதப்ரக்ருதௌ ஜநே த்வயா
க்ருதயா கிம் க்ருபயா க்ருபாநிதே! |
யதி மாத்ருசி ஸா விதீயதே
தவ கீர்திர்வத கீத்ருசீ ததா ॥

க்ருபாநிதே - தயாநிதியே, ஸுக்ருத ப்ரக்ருதௌ - புண்ய சீலரான, ஜநே - ஜநத்தினிடத்தில், த்வயா க்ருதயா க்ருபயா - உம்மாலே செய்யப்படும் க்ருபையால், கிம் - என்ன பெருமை? மாத்ருசி - என் போன்றவனிடம், ஸா - அந்த க்ருபை, விதீயதேயதி - செய்யப்பட்டால், ததா - அப்பொழுது, தவ கீர்த்தி: - உம்முடைய கீர்த்தியானது, கீத்ருசீ - எப்படி இருக்கும். வத - சொல்லும்.

"उपकारिषु यस्साधुः साधुत्वे तस्य को गुणः। अपकारिषु यः साधुः स साधुः सद्भिरुच्यते॥" (உபகாரிஷு ய: ஸாது; ஸாதுத்வே தஸ்யகோ குண: | அபகாரிஷு ய: ஸாது: ஸ ஸாது: ஸத்பி ருச்யதே) என்பர். உபகாரிகளிடத்தில் நல்லவராயிருப்பதால் என்ன நன்மையுளது. அபகாரிகள் விஷயத்திலும் யார் நல்லவரோ, அவரைத் தான் நல்லவரென்று ஸாதுக்கள் புகழ்வர். 'மாத்ருசி' உம் தயைக்கு நான் அநுத்தமமான பாத்ரம். நான் ஸகிலாகஸாம் பதமாக இருந்தாலென்ன. உம் க்ஷமைக்கு விஷயமாகாத குற்றமென்ன உளது. சொல்லும். 'वद किमपदमागस्तस्य तेऽस्ति क्षमायाः ('வத கிம பதமாகஸ்தஸ்ய தேஸ்தி க்ஷமாயா:' என்று ஆளவந்தார் கேட்டது போல 'வத' என்கிறார். 'பவதீய:' என்பதற்கு 'त्वदीयस्त्वद्भृत्यस्तव परिजनस्त्वद्गति रहं' (த்வதீயஸ்தவத் ப்ருத்யஸ்தவ பரிஜநஸ்த்வக்கதி ரஹம்) என்று கருத்து. (31)

अयि शैशवलालितः शिशुः प्रतिबुद्धो जनकेन ताड्यते।
न कदापि च लालितस्त्वया किमु ताड्यो भगवन्कुकर्मभिः॥

அயி சைசவலாலித: சிசு:
ப்ரதிபுத்தோ ஜநகேந தாட்யதே |

ந கதாபி ச லாலிதஸ்த்வயா
கிமு தாட்யோ பகவந் குகர்மபி: ॥

அயி - அம்மா! சைசவலாலித: - குழந்தைப் பருவத்தில் செல்வமாகப் போற்றி வளர்க்கப்பட்ட, சிசு:-குழந்தை, ப்ரதிபுத்த: - நினைவு தெரிந்து வயது வந்த பிறகு, ஜநகேந - தகப்பனால், தாட்யதே - (குற்றம் செய்கையில்) அடிக்கப் படுகிறான், த்வயா உம்மால், கதாபி - ஒருக்காலும், ந லாலித: - நான் அருமையாகப் போற்றப்படவில்லை. பகவந் - பகவானே!, குகர்மபி: - கெட்ட செய்கைகளையிட்டு, தாட்ய: கிமு - நான் அடிபடத் தக்கவனோ?

'பிதா த்வம்' என்கிற ஸ்தோத்ர ரத்ந ச்லோகம் நெஞ்சிலோடுகிறது. நீர் எனக்குப் பிதாவா? அல்லவா? அல்லவென்று நீர் சொல்ல முடியாது. "பிதாஹமஸ்ய ஜகத:" என்று கீதையில் பாடியுள்ளீர். உம் பிதா காணம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. தகப்பனாயிருப்பவர் தங்கள் பிள்ளைகளைத் தண்டிப்பரோ? நினைவு தெரிந்த பிள்ளைகளைக் குற்றங்களுக்காக அடிக்கவே யடிப்பரென்று நீர் பதில் சொன்னால், அந்தப்பிள்ளைகளைக் குழந்தை பர்வத்தில் சீராட்டிச் செல்வமாய் வளர்க்கிறார்களே, அந்தமாதிரி என்னைக் காவது என்னைச் சீராட்டி வளர்த்திருக்கிறீரா? ஸ்வல்பக்ஷணமாவது நீர் என்னைச் சீராட்டி இருந்தால் அப்பொழுதே என் ஸம்ஸாரம் தொலைந்திருக்குமே. ஒரு நாளுமென்னைச் சீராட்டாத தகப்பனான நீர் உம் புத்ரனாகிய என்னைக் குற்றங்களுக்காக எப்படி தண்டிக்கலாம்? (32)

अहमेव हि दोषदूषितः भगवंस्त्वां समुपालभे मुधा ।
रमणीविरहज्वरज्वलन्नमृतांशुं कुमतिर्विनिन्दति ॥

அஹமேவ ஹி தோஷ தூஷிதோ
பகவந்ஸ்த்வாம் ஸமுபாலபே முதா |
ரமணீ விரஹஜ்வரஜ்வலந்
அம்ருதாம்சும் குமதிர் விநிந்ததி ||

பகவந் - ஓ பகவானே!, அஹமேவ - நானே, தோஷ தூஷித: - தோஷங்களால் துஷ்டனாய் இருந்து கொண்டு, த்வாம் - ஷாட் குண்ய பரிபூர்ணராய் நிர்தோஷராய் பகவானாகிய உம்மை, முதா - வீணே, அகாரணமாய், ஸமுபாலபே - பலமாகக் குற்றம் சொல்லித் தூஷிக்கிறேன். ரமணீ விரஹஜ்வர ஜ்வலந் - தன் காந்தையின் பிரிவால் வந்த ஜ்வரத்தால் தபிக்கும், குமதி: - மதி கேடன், அம்ருதாம்சும் - அம்ருத கிரணங்களையுடைய சந்திரனை, விநிந்ததி-மிகவும் திட்டுகிறான்.

என்னை 'பகவான்' என்று கூப்பிடுகிறீரே. 'பகவந் குசர்மயி;' என்று பாடினீரே. 'பகவான்' என்னும் சப்தத்திற்கு அர்த்தம் தெரியாதோ? 'विनाहेयै र्गुणादिभिः' (விநாஹேயை: குணாதிபி:) கெட்ட குணமே இல்லாத, நிர்தோஷமானவரல்லவோ பகவான். இப்படி உனக்கு இது நன்றாய்த் தெரிந்திருந்தும் என்னை இப்படி விஸ்தாரமாக தூஷிக்லாமோ? என்று' பகவான் கேட்பதாகக் கொண்டு பதில் கூறுகிறார். நீர் நிர்த்தோஷரும் ஸமஸ்த கல்யாண குணைகதியுமான பகவானே. "பகவந்" என்று இங்கும் திரும்பிக் கூப்பிடுவதால், "பகவான்" என்பதை உறுதிப் படுத்துகிறார். நிர்தோஷராய் இருப்பவரை ஏனிப்படித் தூஷிக்கிறீரென்பீரோ, நான் தோஷ தூஷிதனாய் இருப்பது தான் காரணம். என்னுடைய கொடிய கர்மநோய்களால் எனக்கு ஜந்நி ஜ்வரம் முட்டிட்டுப்போய்

அவஸ்தை பொறுக்காமல் புத்தி தடுமாறி நிர்தோஷரான உம்மீது என்னுடைய கஷ்டங்களுக்குக் காரணத்தைப் பொய்யாகச் சுமத்தி உம்மைத் தூஷிக்கிறேன். இது எது போலவென்றால், தன்னுடைய ப்ரிய காந்தையின் பிரிவால் தாபமுண்டாகி விரஹஜ்வரம் முட்டிட்டுப் போயிருக்கும் காமி அம்ருதகலைகளோடு கூடிய பூர்ண சந்திரனை விஸ்தாரமாகத் தூஷிக்கிறான். "शीतरश्मित्वमिन्दोः" (சீதரச்மித்வமிந்தோ: அயதார்த்தம்) என்று பாடுகிறான் ஓர் தார்மிகனான அரசன். (33)

करुणाकर! दुर्दशाकुलं पतितालम्बन! पापपञ्जरम् ।
अमृताम्बुनिधे! महाज्वरं नहि जह्याः जगदीश जातु माम् ॥

கருணாகர! துர்தசாகுலம்
பதிதாலம்பந! பாப பஞ்ஜரம் |
அம்ருதாம்புநிதே! மஹாஜ்வரம்
நஹி ஜஹ்யா: ஜகதீச! ஜாது மாம் ||

கருணாகர - அருட்கடலே, துர்தசாகுலம் - கடுமையான ஆபத்தினால் வருந்தும், மாம் - என்னை, பதிதாலம்பந! - பதிதருக்குக் கதியானவரே, ஸ்பர்ச மாத்ரத்தால் பதிதரைப் பாவனமாக்குபவரே, பாப பஞ்ஜரம் - பாபங்களடைபட்டிருக்கும் கூடாகிய (என்னை), அம்ருதாம்புநிதே - அமுதக் கடலே, மஹா ஜ்வரம் - கொடிய தாப ஜ்வரத்தால் தபிக்கும் (என்னை, ஜகதீச - உலகத்திற்கு உடையவனான ஈசனே, ஜாது - ஒருக்காலும், நஹி ஜஹ்யா:- நீர் கை விடலாகாது.

"तदहं त्वदृते न नाथवान् मदृते त्वं दयनीयवान्न च। विधिनिर्मितमेतदन्वयं भगवन् पालय मास्मजीहपः" (ததஹம் த்வத்ருதே

ந நாதவான் மத்ருதே த்வம் தயநீயவாந் நச | விதி நிர்மித மேதத்வயம் பகவந் பாலய மாஸ்ம ஜீஹப:) என்றஸ்தோத்ரரத்ந ச்லோகம் நெஞ்சிலோடுகிறது. 'ஜகதீச' என்பதால் அந்த ச்லோகப் பொருளின் வ்யஞ்ஜகம். ஈசேசிதவ்ய ஸம்பந்தத்திற்கேற்ற ந்யாயத்தை நீர் பாலநம் செய்ய வேணும். விடவே கூடாது. 'மாஸ்ம ஜீஹப:' என்பதையநுஸரித்து "நஹி ஜஹ்யா ஜகதீச ஜாது" என்று பாடுகிறார். 'நஜாது ஹீயதே' முதலியதும் நெஞ்சிலோடுகிறது. "நஜாது மாது: சரணௌ ஜிஹாஸதி." அறியாத நான் உம்மைவிட நினைத்தாலும் ஸம்பந்தத்தை அறிந்த நீரென்னை விடலாகாது. நீர் அகிலஹேய ப்ரத்யநீகர். உம்மைச் சேர்ந்தவர்களின் பாபங்களை யகற்றுவதே உம் ஸ்வபாவம். நீர் அப்ரதிபடரான காவலர். உம் காவலில் சோர்வு கூடாது. நான் என்ன தவறினுலென்ன? என்னிடமுள்ள ஹேயங்களுக்கு ப்ரதிபடமான குணங்கள் உம்மிடமில்லையோ. என் துர்தசை மிக்கக் கொடியதே. அதைப் போக்கும் கருணாகரரில்லவோ நீர். நான் எல்லாப் பாபங்களையுமடைத்த கூடாயிருந்தாலென்ன? நீர் பதிதரான பாபிஷ்டர்களுக்கும் ஆச்ரயணீயரல்லவோ? 'பஞ்ஜரம்' (கூடு) என்பதால் பாபங்களெல்லாம் என்னைவிட்டு வெளியே போகாமல் என்னிடம் குடி கொண்டிருக்கின்றன. கூண்டில் அடைத்த கிளிகளைப் போலக் கொஞ்ச நேரம் வெளியில் போனாலும் உடனே திரும்பித் தன்னிடமே வந்துவிடுமென்று ரஸம். கிளியை வெளியே விடுவதும் புறப்பே சற்று ஸஞ்சரிக்கவே. தன் பாபங்கள் வெளியே ஸஞ்சரிக்கச் சற்று வெளியே விடுவது. கிளிகளை வளர்ப்பது போல நான் பாபங்களை அருமையாக வளர்க்கிறேன். எனக்குப் பாப விஷ ஜ்வரம் தலைமண்டி இருந்தாலென்ன. நீர் என் ஜ்வரத்தைச் சமநம் செய்யும் அமுதக் கடலல்லவோ. நீர் 'ஸமஸ்த கல்யாண

குணமருதோதி:'. "ந ஜஹீஹி ஜாதுபாம்" என்று இங்கே 36-ம ச்லோகத்திலும் பாடுகிறார். 'ஜஹிஹி ஜஹீஹி ஜஹா ஹி" என்றார் பட்டி. (34)

कटुजल्पनमल्पकस्य मे न हि ते कल्पयतु क्रुधं विभो! ।
कुपितातुरबालभाषितं किमु (नहि) गृह्णन्ति मनाङ्महाशयाः ॥

கடுஜல்பநமல்பகஸ்ய மே
ந ஹி தே கல்பயது க்ருதம் விபோ |
குபிதாதுரபால பாஷிதம் கிமு (நஹி)
க்ருஹ்ணந்தி மநாங் மஹாசயா: ||

விபோ! - என் ப்ரபுவே, அல்பகஸ்ய மே - மிகவும் அல்பனான என்னுடைய, கடுஜல்பநம் - கடுஞ்சொற் பேத்தில், தே - உமக்கு க்ருதம் - கோபத்தை, நஹி கல்பயது - உண்டு பண்ணவே வேண்டாம். (கல்பிக்க வேண்டாம்) மஹாசயா: - கம்பீர மனமுடையார், குபிதாதுரபால பாஷிதம் - கோப வெறி கொண்டவர், ஜ்வரம் முதலிய வ்யாதி பீடிதர், சிறுவர்கள், இவர்களுடைய பேச்சுக்களை, மநாக்- கொஞ்சமேனும், க்ருஹ்ணந்தி கிமு - மனதில் வாங்குவரோ. (நஹி க்ருஹ்ணந்தி - மனதில் வாங்கமாட்டாரே.)

'அல்பகஸ்ய மே' அல்பனிலும் அல்பன் நான். 'க' என்னும் ப்ரத்யத்திற்கு அல்பமென்று பொருள். இரக்கப்பட வேண்டியதையும் குறிக்கும். "அநுகம்பாயாம்". "க்ருதம் ந கல்பயது" என்பது மிக்க ரஸம். உமக்குக் கோபமென்பது உண்மையாக வராது. கோபத்தை நீர் கல்பித்துக் கொள்வதே, பாவனை செய்வதே, நடிப்பதே. அந்தக் கல்பனையும் வேண்டாம். குபிதன், ஆதுரன், பாலன், என்பதிலொன்றென்றே போதும். என்னிடம் மூன்றும் சேர்ந்துளது.

குபித-கோபத்திலும் கொடிய வெறி வேறில்லை. கோப ஜ்வரமென்பர். அறியாக் குழந்தையின் திட்டைப் பெரியோர் மனதில் வாங்குவரோ. அதனால் புண் படுவரோ? (35)

भुजगाहित कल्पितध्वज! स्फुरदाशाभुजगालिवेल्लितम् ।
जटिलज्वरकुञ्जराङ्कुश! ज्वरजुष्टं न जहीहि जातु माम् ॥

புஜகாஹித கல்பிதத்வஜ!
ஸ்புரதாசா புஜகாலிவேல்லிதம் |
ஜடிலஜ்வர குஞ்ஜராங்குச!
ஜ்வரஜுஷ்டம் ந ஜஹீஹி ஜாது மாம்।

புஜகாஹித கல்பிதத்வஜ!-உம் படுக்கையான பாம்புக்கு விரோதியான கருடனைத் த்வஜமாகக் கொண்டவரே!, ஸ்புரதாசாபுஜகாலிவேல்லிதம்-துடித்தோங்குமாசைகளாகிய ஸர்ப்பங்களின் கூட்டங்களால் சூழப்பட்டு நடுங்கும், ஜடிலஜ்வரகுஞ்ஜராங்குச! - அடர்ந்த ஜ்வரமெனும் யானையையடக்கும் மாவட்டியானவரே!, ஜ்வரஜுஷ்டம் - ஜ்வரத்தோடு கூடிய, மாம் - என்னை, ந ஜாது ஜஹீஹி - ஒருக்காலும் கைவிடக் கூடாது.

39-ல் கண்ணனை வர்ணிக்கப் போகிறார். ஸ்தோத்ர ரத்நத்தில், "கதா புந: சங்கரதாங்க கல்பகத்வஜாரவிந்தாங்குச" என்று 31-ல் தொடங்கி "அசிந்த்ய திவ்யாத்புத" என்ற 35-ம் ச்லோகம் வரையில் பகவானை வர்ணிப்பது போல, அந்த வர்ணநத்திலுள்ள, 'த்வஜாங்குச', "ஸ்புரத்" 'அநந்த போகி.' (சேஷன், த்வஜமான 'கருத்மான்" முதலியவையெல்லாம் இங்கே புகுகின்றன. புஜகத்திற்கு விரோதி கருடன், கருடக் கொடியோனாகிய உமக்கு ஆசா ஸர்ப்பங்கள் சூழ்ந்தவென்னை அந்த ஸர்ப்பங்களிலிருந்து காப்பாற்றுவது ச்ரமமோ? ஸஹஜ விரோதிகளான கருடனும் பாம்

பும் விரோதத்தை விடும்படியான சாந்திக் கடலான யோகிச்வரரல்லவோ நீர். என்னிடமுள்ள ஆசீ விஷமான ஆசா ஸர்ப்பங்களை யடக்கிச் சமநம் செய்ய நீர் சமரஸ நிதி யல்லவோ. "சாந்தி ஸம்ருத்தம்" என்று உம்மை மாண்டூக்யம் வர்ணித்தது. (36)

न वदामि न दुष्कृतं मया कृतमित्युक्तिमिमां तु मे शृणु ।
मम भीतिमनीनशद्विभो! पतितोद्धारकनाम तावकम् ॥

ந வதாமி ந துஷ்க்ருதம் மயா
க்ருதமித்யுக்திமிமாம் து மே ச்ருணு |
மம பீதிமநீநசத் விபோ!
பதிதோத்தாரகநாம தாவகம் ||

மயா - என்னால், துஷ்க்ருதம் - கெட்ட செய்கை, ந க்ருதமிதி - செய்யப்படவில்லை என்று, ந வதாமி - நான் சொல்லவில்லை. மே - என்னுடைய, இமாம் உக்திம் து - இந்தப் பேச்சை மட்டும், ச்ருணு - கேளும். விபோ - ப்ரபுவே! தாவகம் - உம்முடையதான, பதிதோத்தாரக நாம - பதிதர்களையும் கை தூக்கி விடுபவரென்கிற திருநாமம், மம பீதிம் - என்னுடைய பயத்தை, அநீநசத் - நாசம் செய்து விட்டது.

'ந ந' என்று இரண்டு நிஷேதங்களைச் சேர்த்துப் பாடும் ஸ்தோத்ர ரத்ந ரீதியை யநுஸரிக்கிறார். "ச்ருணு விஜ்ஞாபநமேகம்" "யாது சததா விநாசம் தத் ஸத்யம் மது மதந விஜ்ஞாபநமிதம்" என்பதெல்லாம் நெஞ்சிலோடுகின்றன. ஒரோர் ப்ரகாரமாக இங்கே புகுகிறது. நான் பாபம் செய்யவில்லை என்று பொய் பேசமாட்டேன். ஸத்யமாகவே இந்த விஜ்ஞாபநம் செய்கிறேன். இதைக் கேட்டருளும். "சததா விநாசம் யாது" என்றது ஒரு வழியாக

'அநீசத்' என்று புகுந்து கொண்டது. 'க த்யஜேயம் கதஞ்சந, தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்' என்ற உம்முடைய அபயப்ரதாநம் என் பாப பயத்தைப் போக்கிவிட்டது. நான் நிர்பயனாகிவிட்டேன். (37)

अपि शर्वपितामहादिभिर्भजनीयः पुरुषोत्तमो हि यः ।
तमुपालभमानमुद्धतं धिगिमं मां धिगिमां धियं च मे ॥

அபி ஶர்வபிதாமஹாதிபி:
பஜநீய: புருஷோத்தமோ ஹி ய: |
தமுபாலபமாநமுத்ததம்
திகிமம் மாம் திகிமாம் தியம் ச மே ||

ய:-யவன், சர்வபிதாமஹாதிபி: - ஈச்வரன் ப்ரஹ்மா முதலியவராலும், பஜநீய: - ப்ரீதியோடு பஜிக்கத் தக்க, புருஷோத்தமோஹி - எல்லாப் புருஷரிலுமுத்தமமான புருஷோத்தமரோ, தம் - அவரை, உத்ததம் - உச்சாவசமாக (இப்படி உபாலபமாநம் - தூஷித்துக் கோபிக்கும், இமம் மாம் - இந்த என்னை, திக் - சீச்சீ. (சுட வேணும்). இமாம் ச மே தியம் - இந்த என் புத்தியையும், திக் - சுடவேணும்.

"சக்யோ ந மாதுமபி சர்வபிதாமஹாத்யை:" என்று தொடக்கத்திலும், "சிதிசிவஸநகாத்யைர்த்யாது மத்யந்த தூரம்" என்று முடிவிலும் பாடிய ஸ்தோத்ர ரத்நத்தை அநுஸரிப்பது மிக ஸ்பஷ்டம். கண்ணனுடைய ஸ்வரூப ரூப குணங்களைப் பல ச்லோகங்களாலநுபவித்துக் கண்ணனைப் பஜநம் செய்து, நித்யம் பஜிப்பதற்கநுகூலமாக தம் ஹ்ருதயத்தில் ஸர்வதா அப்படியே ஸேவை ஸாதிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார். கண்ணனை ஆனந்தமாக பஜநம் செய்யும் பல ச்லோகங்களின் தொடக்கத்தில்

இப்படிக் கண்ணனுடைய பரத்வத்தைப் பேசி, முடிவிலும் 52-ம் ச்லோகத்தில் "விதி சர்வமுகாமரஸ்புரந் மகுடோரங்கித்ரமணி ப்ரபா குலம்" என்று திருவடியில் சர்வ பிதாமஹாதிகளின் கிரீட ரத்நங்கள் ஜ்வலிப்பதை வர்ணிக்கிறார். ஸ்தோத்ர ரத்நத்தில் போல உபக்ரமோப ஸம்ஹாரங்களிலிப்படி வர்ணிப்பதால், இங்கும் பஜந காதைகள் உபக்ரமோப ஸம்ஹாரங்களில் அதே சப்தங்களை உபயோகித்து பரதேவதா தத்வஜ்ஞாநத்தோடு பஜநம் செய்ய வேணுமென்ற க்ரமத்தை விளக்குகிறார். 'புருஷோத்தம: க:' என்று ஸ்தோத்ர ரத்நத்தில் கேழ்வியாகக் கேட்டதை இங்கே ப்ரஸித்தமாக 'யவன் புருஷோத்தமனே' என்று முதலிலேயே பாடி ஸர்வஸ்மாத் பரத்வத்தை விளக்குகிறார். முன்பு 11-ம் ச்லோகத்திலும் 'புருஷோத்தமம் பதிம்' என்று பாடினார். "திகசுசிமவிநீதம் நிர்தயம் மாமலஜ்ஜம் .... விதி சிவஸநகாத்யைர் த்யாதுமத்யந்த தூரம்" என்ற ச்லோகத்தை இங்கே யநுஸரிப்பது ஸ்பஷ்டம். இங்கே தனக்குக் கண்ணனைப் பஜநம் செய்யும் வழியை யாசித்துக் காட்டும் விச்வாசார்யரான விதி சிவ முகர்களைத் தம் பஜநத்தின் தொடக்கத்தில் கீர்த்தநம் செய்கிறார். ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நம் செய்தார் நான் ஸ்தோத்ரம் செய்யாமலிருந்தாலும் குற்றமில்லை. நானிப்படித் திட்டுகிறேனே. என்னிலும் கொடியருளரோ? (38)

अथ सर्वमिदं मयोज्झितं भवतोऽन्यत्र हि किञ्चिदर्थये ।
मम मानसगोचरीभवत्वरविन्दाक्ष! तवाद्भुतं वपुः ॥

அத ஸர்வமிதம் மயோஜ்ஜிதம்
பவதோऽந்யத்ர ஹி கிஞ்சிதர்த்தயே ।
மம மாநஸகோசரீ பவது
அரவிந்தாக்ஷ! தவாத்புதம் வபு: ॥

அத - மங்களமுண்டாகுக. அல்லது 'இனி', ஸர்வமிதம் - இதெல்லாம், மயா - என்னால், உஜ்ஜிதம் - விட்டுத் தொலைக்கப்பட்டது. பவத: - உம்மிடமிருந்து, அந்யத் கிஞ்சித்- மற்றொன்றையும், ந அர்த்தயே - வேண்டேன். (இதொன்றையே வேண்டுகிறேன்) அரவிந்தாக்ஷ! - தாமரைக் கண்ணனே, தவ - உம்முடைய, அத்புதம் - அத்புதமான, வபு: - விக்ரஹம், மம - என்னுடைய,மானஸகோசரீ பவது - மனதிற்கு விஷயமாகட்டும்.

எனித்தனை போராடுகிறீர். உமக்கென்ன வேணும்? அதைச் சொல்லலாகாதாவென்று கண்ணன் கேட்பதாகக் கொண்டு பதில் கூறுகிறார். இனி இதையெல்லாம் விட்டுவிட்டேன் ஸ்வாமீ. மற்றொன்றையும் நான் உம்மிடம் வேண்டேன். ஈதொன்றே வேண்டுபவன். (அதென்னவென்றால்) தாமரைக் கண்ணனுகிய உம்முடைய அத்புதமான திவ்ய மங்கள விக்ரஹம் என் மனதில் ஸேவை ஸாதித்துக் கொண்டேயிருக்க வேணும். அகலக் கூடாது. 'அத' என்பது சப்தத்வநி மாத்ரத்தால் மங்களத்தைச் சொல்லும். அதுமாங்களிகமான சப்தம். 'இனி மேல்' 'பின்பு' என்ற பொருளையும் கொடுக்கும். 'பவத: அந்யத் கஹி கிஞ்சித் அர்த்தயே' என்பதற்கு 'உம்மைத் தவிர மற்றொன்றையும் நான் வேண்டேன்' என்றும் ரஸப் பொருள் கிடைக்கிறது. அப்படிப் பொருள் கொண்டால் பெருமாள் ஸ்வரூபம் இவர் மனதிற்கு விஷயமாவது அரிதென்று ஆக்ஷேபிக்க, சுபாச்ரயமான திவ்ய மங்கள விக்ரஹம் என் கண்ணுக்கு விஷயமாகட்டுமென்று ப்ரார்த்திக்கிறதாகக் கொள்ளலாம். இங்கே த்யானம் செய்யப் போகிறார். ஸ்வரூப த்யானம் துர்லபம். திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கொண்டு த்யானம் செய்வது ஸுலபம். கண்

ணன் த்பாகத்தை 'அத' என்கிற மங்கள சப்தத்தோடு தொடங்குகிறார். 'அத்புதம்' என்பதால் "தமத்புதம்" என்கிற சுகரின் அநுபவத்தை நினைக்கிறார். 'அப்புஜேக்ஷணம்' என்று அங்குள்ளதை 'அரவிந்தாக்ஷ' என்று பேசுகிறார். பெருமாள் செய்யும் தாமதத்தை இவர் ஸஹிக்கக் கூடவில்லை. உடனே ஸேவை வேணும். ஸதா ஸேவை வேணுமென்று த்வரிக்கிறார். "நாகச்சஸ்யரவிந்தாக்ஷ: நாஹம் வேத்ம்யத்ர காரணம்" 'கண்ணன் வரவில்லையே' என்று ருக்மணீ தபித்த ச்லோகத்தை நினைத்து அவதார ச்லோக பதத்தையும் மாற்றி 'அரவிந்தாக்ஷ' என்று கூப்பிடுகிறார். உம்மை மணம் புரிவதில் ருக்மிணியினுசையைப் போல உம்மைக் காண என்னுசை என்று ஸூசிக்கிறார்.

(39)

हरिनीलमयावनीतले वरवृन्दाविपिने विलासिनि ।
मणिमण्डपमध्यविस्फुरद्विबुधक्ष्मारुहमूलमाश्रितम् ॥

ஹரிநீல மயாவநீதலே
வரப்ருந்தாவிபிநே விலாஸிநி |
மணிமண்டப மத்யவிஸ்புரத்
விபுத க்ஷ்மாருஹ மூலமாச்ரிதம் ||

ஹரிநீல மயாவநீதலே-இந்திர நீல மணிக்கல் மயமான பூதலத்தில், விலாஸிநி-சோபையுடைய, வரப்ருந்தா விபிநே-உத்க்ருஷ்டமான ப்ருந்தாவனத்தில், மணி மண்டப-மணி மண்டபத்தின், மத்ய-நடுவில், ஸ்புரத்-விளங்கும், விபுத க்ஷ்மாருஹ - தேவ வ்ருக்ஷமான பாரிஜாதத்தின், மூலம் - அடியை, ஆச்ரிதம் - ஆச்ரயித்திருக்கும், வபு: - திருமேனி மம - என்னுடைய, மாநஸ கோசரீ பவது - மனதிற்கு

விஷயமாகட்டும்' (இங்கிருந்து 52-ம் ச்லோகம் வரையில் ஒவ்வொரு ச்லோகத்தையும் இப்படியே 39-ம் ச்லோகத்திலிருக்கும் 'வபு:' என்பதற்கு விசேஷணமாக அந்வயித்துக் கொள்ள வேணும்.)

ஸ்தோத்ர ரத்நத்தில் போல இங்கும் 15-ச்லோகங்களால், 15 கலைகளால் பூர்ணமாகும் பூர்ண சந்திரன் அஜ்ஞாந விருளை யகற்றிக் கொண்டு கலை கலையாகப் பூர்ணமாக ஆவிர்ப்பவிப்பது போல் ஹ்ருதயாகாசத்தில் விக்ரஹத்தின் ஸம்பூர்ணமான ஆவிர்பாவம் சொல்லப்படுகிறது. ப்ருந்தாவனத்தில் சில குஞ்ஜங்களில் இன்றைக்கும் கண்ணன் ஸேவை ஸாதிக்கிறானென்பர். 'ஹரிநீல சிலாவிபங்க நீலா' என்று கோபால விம்சதியில் கோபாலன் திருமேனி காந்தி யநுபவிக்கப்பட்டது. அங்கே இந்த்ர நீலக்கல் மேனி உவமை இங்கு ஸைக உவமை கண்ணன் திருமேனிக்கு அநுருபமான ஆஸநம். 'பிப்ரத்பிந்ந ஸ்படிகருசிரே புண்டரீகே நிஷண்ண:" என்று ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவரின் ஆஸநத் தாமரையின் வர்ணனம். அங்கு வெள்ளைப் பளிங்குக் கல் வெண்டாமரைக்கு உபமானம். சுத்த ஸ்படிக மணி பூப்ருத்ப்ரதிபடரான வெள்ளைப் பரிமுகருக்கேற்ற ஆஸநம். 'வரபுண்டரீகே பத்தாஸந:' என்று கோபால விம்சதி. 'ப்ருந்தாரண்யம்' 'ப்ருந்தாவநம் நாம' என்று ஸ்ரீ பாகவதம். (40)

शिखिपिञ्छ महामणिस्फुरन्मुकुटा कुञ्चितकान्त कुन्तलम् ।
कमनीयतरालकावली भ्रमण भ्राजिललाट सुन्दरम् ॥

சிகிபிஞ்ச்ச மஹாமணிஸ்புரந்
முகுடா குஞ்சித காந்த குந்தலம் |
கமநீயதராலகாவளீ
ப்ரமணப்ராஜி லலாட ஸுந்தரம் ||

சிகிபிஞ்ச்ச - மயில் தோகை, மஹாமணி - அழகிய மணி இவற்றால், ஸ்புரத் - விளங்கும், முகுட - கிரீடம் (தலையாபரணம்), ஆகுஞ்சித - சுருண்ட, காந்த - அழகிய, குந்தலம் - கேசம், இவற்றோடு கூடியதும், கமநீயதர - மிக வுமழகான, அலகாவளீ - கேசங்களின், ப்ரமண - சுற்றி விழுவதால், ப்ராஜி - சோபிக்கும், லலாட ஸுந்தரம் - நெற்றியழகோடு கூடியதும்.

திருமுடி முதல் திருவடி வரையிலநுபவிக்கிறார். அழகிலீடுபட்டவர் திருமுடி முதல் வர்ணிப்பர். 'ஸ்புரத் கிரீட' என்று ஸ்தோத்ர ரத்நம். 'இங்க ஸ்புரந் முகுட' என்று. 'லலாட பர்யந்த விலம்பிதாளகம்' என்று ஸ்தோத்ர ரத்நம். இங்கே 'அளகாவளி ப்ரமண ப்ராஜி லலாட ஸுந்தரம்' என்று. கேசவன் என்னும் கண்ணன் திருநாமத்திற்கு 'ப்ரசஸ்தமான கேசமுடையவன்' என்றும் பொருள். (41)

शरदिन्दु सहोदराननं दलदम्भोज पलाशलोचनम् ।
अरुणाधरकान्ति दन्तुरस्फुटदन्तांशु विकासिताम्बरम् ॥

சரதிந்து ஸஹோதராநநம்
தலதம்போஜ பலாசலோசநம் |
அருணாதரகாந்திதந்துர
ஸ்புடதந்தாம்சு விகாஸிதாம்பரம் ||

சரதிந்து ஸஹோதராநநம் - சரத் கால சந்த்ரன் போன்ற முகத்தோடும், தளத் அம்போஜ பலாச லோசநம் - அப்பொழுதலரும் தாமரை தளம் போன்ற திருக் கண்களோடும், அருணாதர காந்திதந்துர - சிவந்த திருப்பவழத்தின் காந்தியோடு மின்னும், ஸ்புட - வெண்மையான, தந்தாம்சு - பற்களின் காந்திகளால், விகாஸித - பரவி வெண்மையாக்கப்பட்ட, அம்பரம் - ஆகாசத்தோடும் கூடிய, வஸ்த்ரத்தோடும் கூடிய, வபு: -

"முகச்ரியாங்யக் க்ருக பூர்ண நிர்மலாம்ருதாம்சுபிம் பாம்புருஹோஜ்வலச்ரியம்' என்றும், 'ப்ரபுத்த முக்தாம் புஜ சாருலோசநம்" என்றும் ஸ்தோத்ர ரத்நம். இங்கே முன் பாதி அது போன்றது. (42)

दरपाण्डुरगण्ड मण्डल प्रतिसर्पत्कमनीय कुण्डलम् ।
मणिमौक्तिकमञ्जुमञ्जरी महनीयद्युतिरञ्जित श्रुति ॥

தரபாண்டுர கண்ட மண்டல
ப்ரதி ஸர்பத் கமநீய குண்டலம் |
மணிமௌக்திக மஞ்ஜூமஞ்ஜரீ
மஹநீயத்யுதி ரஞ்ஜித ச்ருதி ॥

தர - கொஞ்சம், பாண்டுர - வெண்மையான, கண்ட மண்டல - கன்னத்தில், ப்ரதி ஸர்பத் - பரவி விளங்கும், கமநீய குண்டலம் அழகிய குண்டலத்தோடும், மணிமௌக்திக - முத்து மணி, மஞ்ஜூ மஞ்ஜரீ - அழகிய பூங்கொத்து இவற்றின், மஹநீயத்யுதி - சிறந்த காந்திகளால், ரஞ்ஜித ச்ருதி - சோபிக்கும் காதோடும் கூடிய, வபு:-

"கோமள கண்டம்" என்று ஸ்தோத்ர ரத்நம். ப்ருந்தாவன சஞ்சாரனுக்கேற்றபடி பூங்கொத்து காதில் ஆபரணமாயுள்ளது. (43)

पृथुवर्तुल मौक्तिकावली सुषुमावेल्लित कान्तकन्धरम् ।
हरिनीलगिरिद्युतिद्रुहा कमलामन्दिरवक्षसाञ्चितम् ॥

ப்ருது வர்த்துள மௌக்திகாவளீ
ஸூஷமாவேல்லித காந்த கந்தரம் |
ஹரி நீலகிரித்யுதி த்ருஹா
கமலா மந்திர வக்ஷஸாஞ்சிதம் ॥

ப்ருது - பெரிதும், வர்த்துள-வட்டமுமான, மௌக்திகாவளீ - முத்தா ஹாரத்தின், ஸௌஷமா - காந்திகள், வேல்லித - அலேப்பதால், காந்த - அழகிய, கந்தரம்-கழுத்தோடும், ஹரி நீலகிரி - இந்த்ர நீலமலேயோடு, த்ருஹா - போட்டி போடும், கமலா மந்திரவக்ஷஸா-லக்ஷ்மியின் வாஸக்ருஹமான திருமார்பால், அஞ்சிதம் - சோபிப்பதுமான, வபு.

'உதக்ரபீநாம்ஸ விலம்பி குண்டலாளகாவளீ பந்துர கம்புகந்தரம்' என்று ஸ்தோத்ர ரத்நம். 'பந்துரம்' என்பதற்கு 'காந்தம்' என்று பொருள். இங்கே 'காந்தகந்தரம்' என்று. "முரபிதுரோ மந்திராமிந்திராம் தாம்" என்று ஸ்ரீ சங்கராசாரியார் லக்ஷ்மியை "முராரியின் திருமார்பை மந்திரமாக உடைய இந்திரை" என்று வர்ணித்தார். அது போல் இங்கே 'கமலா மந்திரமான திருமார்பு' என்று வர்ணநம். (44)

चरणाब्जनखावलम्बिनीं भुजगाकार भुजान्तरागताम् ।
निबिडाभ्रमिव क्षणप्रभां वहदुत्फुल्लवनामलस्रजम् ॥

சரணுப்ஜ நகாவலம்பிநீம்
புஜகாகார புஜாந்தராகதாம் |
நிபிடாப்ரமிவ க்ஷணப்ரபாம்
வஹதுத்புல்ல வநாமல ஸ்ரஜம் ||

சரணுப்ஜநகாவலம்பிநீம்- தாமரைத் திருவடியின் நகங்கள் பர்யந்தம் தொங்கிக் கொண்டிருப்பதும், நிபிடாப்ரம்- கனமான மேகத்தை, க்ஷண ப்ரபாமிவ - மின்னலடைந்தது போல, புஜகாகாரபுஜாந்தராகதாம் - புஜகம் போன்ற புஜங்களின் நடுவான நீலத்திருமார்பையடைந்திருப்பதுமான, உத்புல்லவநாமலஸ்ரஜம்- அலர்ந்த சுத்தமான வன மாலையை, வஹத் - தரிப்பதுமான, வபு:

திருமார்பில் தரிக்கப்பட்ட மாலை திருவடி வரை பர்யந்தம் சென்று திருவடியில் விழுகிறது போலும். பெருமான் திருத்தோள்களிலேற்றிக் கொள்ளும் சங்கு சக்ரங்கள் திருவடியில் ரேகைகளாகப் புகுந்து அங்கேயே ஒட்டிக் கொள்வது போன்றதது. வனமாலை நீலத்திருமார்பில் மின்னற் கொடியைப் போல் ப்ரகாசிக்கின்றது. 'வஹத்' என்ற பாடமுசிதம். திருமார்பில் வனமாலையைத் தரிக்கும் திருமேனி. "சபலாமநுசாயிநீ மிவோ த்வஹதுத்புல்லவநாமலஸ்ரஜம்" என்று பாடாந்தரம் காட்டப்பட்டுள்ளது. 'லஸத்துளஸ்யா வநமாலயோ ஜ்வலம்' 'சகர்த்த யஸ்யா பவநம் புஜாந்தரம்' என்ற ஸ்தோத்ர ரத்னத்தை யநுஸரிக்கிறார். திருமார்பில் பிராட்டியும் வனமாலையும் சேர்ந்தநுபவம். பிராட்டி ஓர் மின்னற்கொடி. (45)

मणिकङ्कणकान्तिमांसलं दरफुल्लाम्बुज सुन्दरद्युति ।
पतितोद्धरणे दृढव्रतं कमनीयं करयोर्युगं दधत् ॥

மணி கங்கண காந்திமாம்ஸலம்
தரபுல்லாம்புஜ ஸுந்தரத்யுதி |
பதிதோத்தரணே த்ருடவ்ரதம்
கமநீயம் கரயோர்யுகம் ததத் ॥

மணி கங்கணகாந்தி மாம்ஸளம் - ரத்ந கங்கணங்களின் காந்திகள் மிகப்பரவியதும், தரபுல்லாம்புஜ ஸுந்தரத்யுதி - கொஞ்சம் மலர்ந்த தாமரையினழகிய சோபையுடையதும், பதிதோத்தரணே - பதிதர்களைக் கை தூக்கி விடுவதை த்ருடமான வ்ரதமாகக் கொண்டதும், கமநீயம் - மனதைக் கவருவதுமான, கரயோர்யுகம் - திருக்கைகளின் த்வந்த்வத்தை, ததத் - தரிப்பதுமான, வபு:

"சகாஸதம் ஜ்யாகிண கர்கசை: சுபை: சதுர்பிராஜாநு விலம்பிபுர்புஜை:" என்று ஸ்தோத்ரரத்நத்தில் சதுர்புஜங்களின் வர்ணனம். அங்கே ஸ்ரீ வைகுண்டப் பெருமாளின் வர்ணனம். கம்ஸ வதத்திற்குப் பிறகு கண்ணனுக்கு சதுர்புஜாவிர்பாவம். இங்கே கோகுல கோபாலனை அனுபவிக்கிறார். ஆகையால் "காரயோர்யுகம்" என்கிறார். "பாஹும் புஜகபோகாபம்" என்று ராமனை ருஷி வர்ணித்ததையும் நினைத்து "புஜகாகாரபுஜம்" என்று முன் ச்லோகத்தில் வர்ணித்தார். "ஹஸ்தாவலம்பநம் ஹ்யேக:" கைகொடுத்து கைதூக்கி விடுகிறவர் ஜநார்த்தநர். 46)

वररत्नमयाङ्गुलीयकावलिशोभामिलिताङ्गुलीगणः ।
मुहुराकलितेन वेणुना वशयत्प्राणभृतां मनःश्रुतीः ॥

வரரத்நமயாங்குலீயகா
வலிசோபா மிலிதாங்குலீ கணை: |
முஹுராகலிதேந வேணுநா
வசயத் ப்ராண ப்ருதாம் மன: ச்ருதீ: ||

வரரத்ந - உத்க்ருஷ்ட ரத்நங்களிழைத்த, அங்குலீயகாவளீ - பலமோதிரங்களின், சோபாமிளித - காந்திகளோடு கூடிய, அங்குளீகணை: - பல விரல்களாலே, முஹு: - அடிக்கடி, ஆகலிதேந - வாசிக்கப்பட்ட, வேணுநா - புல்லாங்குழலால், ப்ராணப்ருதாம் - ப்ராணிகளுடைய, மந: ச்ருதீ: - மனஸ்ஸுகளையும், செவிகளையும், வசயத் - வசப்படுத்துவதுமான, வபு:

விரல்களில் மோதிரங்களின் ரத்ந காந்திகளும், விரல்கள் போல சோபிக்கின்றன. அனேக விரல் கூட்டங்கள் சேர்ந்ததுபோலிருக்கின்றது. இருக்கும் விரல்களோடும்

காந்திசுடரான பலவிரல்களோடும் சேர்ந்து குழலை வாசிப்பது போலிருக்கிறது. ஐந்து விரல்களால் மட்டும் வாசிப்பது போலில்லை. கோபீகணங்களின் மனங்களைக் கவருவதற்குப் பல விரல்களைச் சேர்த்துக்கொண்டு வாசிப்பது போலிருக்கிறது. "ப்ராணப்ருதாம்" எல்லா ப்ராணிகளுடைய. கோக்கள், புஜகங்கள் முதலியனவும் வசமாயின. "ஸ்வே ஸ்ருக்விணீ ரஸநயா லிலிஹுர்புஜங்கா:" என்று அதிமாநுஷஸ்தவம். "ப்ருந்தம் ப்ருந்தமாக கோகுலத்தில் காளைகளும், மான்களும், பசுக்களும் வேணுவாத்யத்தால் மனம் அபஹரிக்கப்பட்டு கடித்த புற்கபளங்களோடு காது தூக்கி அசையாமல் நிற்க நித்ரை பெற்று சித்திரத்திலெழுதியவை போலிருந்தன' என்றார் சுகர். (47)

उदरद्युतिनिम्नगोच्चलल्लहरीरूपकरोमराजिकम् ।
पशुपालविलासिनीलसन्नयनाकर्षणनाभिनिम्नितम् ॥

உதரத்யுதிநிம்நகோச்சலத்
லஹரீரூபகரோமராஜிகம் |
பசுபாலவிலாஸிநீலஸந்
நயநாகர்ஷணநாபிநிம்நிதம் ॥

உதரத்யுதி - திருவயிற்றின் சோதியின், நிம்நகோச்சலத் - வெள்ளத்திலலைக்கும், லஹரீரூபக - அலைகளோ என்று தோன்றும், ரோமராஜிகம் - ரோமவரிசையையுடையதும், பசுபாலவிலாஸிநீ - ஆய்ச்சியுவதிகளின், லஸந்நயநாகர்ஷண - அழகிய கண்களையிழுத்துச் சொருகும், நாபிநிம்நிதம்-நாபிப்பள்ளத்தை (ச்சுழலை) யுடையதும் ஆன, வபு:-

'நிம்நநாபிம்' என்ற ஸ்தோத்ரரத்நவர்ணநம் நெஞ்சிலோடுகிறது. 'ஆவர்த்த இவ கங்காயா:' என்கிறபடியே ஸௌந்தர்ய வெள்ளம் சுழித்தாற்போலேயிருக்கிற திருநா

பிலையுடையவன். 'நந்தன்மதலைக்கு நன்று அழகியவுந்தி' என்னக்கடவதிறே' என்று பிள்ளையருளியது. கோபயுவதிகளின் கண்களைச் சுழற்றியிழுத்துத் தன் ஆழத்தில் சொருகும் நாபிச்சுழல். க்ருஷ்ணனுடைய நாபிச்சுழல் அவர்களின் கண்களை யாகர்ஷிக்கிறது. 'நவரோமராஜி:' என்று நாபிக்கு மேலேயுள்ள ரோமராஜி திருவயிற்றின் சோதி வெள்ளமிரங்கியோடி வரும் வாய்க்காலோவென்று அநுபவிக்கும்படியிருக்கிறது. 'காந்த்யம்ப: பூரபூர்ணமும் கடுமையான அலைகள் போன்ற வளித்ரயங்களோடு விளங்குவதும் கம்பீராகாரமான நாபியின் பெரும் சுழலழகு பொருந்திய தாமோதரோதரமெனுமழகுக் கடலில் என் சித்தமத்ஸ்யம் நீடூழி காலம் விஹரிக்க வேணும்" என்று ஸ்ரீசங்கருடைய ஹரி பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம். (48)

कनकद्रव गौरमम्बरं दधतोरुद्वितयेन सुन्दरम् ।
उदयन्मणिनूपुरप्रभा सरणिश्रेणि जटालजानुकम् ॥

கநக த்ரவ கௌரமம்பரம்
தததோருத்விதயேந ஸுந்தரம் |
உதயந்மணி நூபுர ப்ரபா
ஸரணி ச்ரேணி ஜடாலஜாநுகம் ॥

கநகத்ரவ - தங்கத்தை உருக்கிவிட்டது போன்ற, கௌரம் - அம்பரம் - பீதாம்பரத்தை, தததா - தரிக்கிற, ஊருத்விதயேந - திருத்துடையிரண்டால், ஸுந்தரம்-அழகியதும், உதயந் மணிநூபுர ப்ரபா ஸரணிச்ரேணி - ரத்னச் சிலம்புகளின் காந்திக் குவியல்கள், ஜடாலஜாநுகம் - சடைபோல் மண்டியுள்ள ஜாநுக்களையுடையதுமான, வபு:-

"த்ரிபுவநகமநம் தமால வர்ணம் ரவிகர கௌர வராம் பரம் ததாநே! வபுரளக குலாவ்ருதாநநாப்ஜம் விஜய ஸகே ரதிரஸ்து மேऽநவத்யா' என்று பீஷ்மர்-உத்தராயண புண்ய காலத்தில் கூட்டை விடுகையில் கண்ணனை ஸேவித்துக் கொண்டே பாடிய முதல் த்யாந ச்லோகம். "மூவுலகங்களின் மனதைக் கவருவதும், பால ஸூர்ய கிரணங்கள் போன்ற பீதாம்பரத்தைத் தரிப்பதும், அளக பாரங்கள் விழுந்து பரவி மறைக்கப்பட்டுள்ள தாமரைத் திருமுகத்தையுடையதுமான திருமேனியைச் சுமக்கும் விஜய ஸகனிடம் எனக்கு சுத்தமான ரதி பெருகவேணும்" என்று ப்ரார்த்தித்தார். அங்கே 'வபு: ததாநே' என்று பல விசேஷணங்களால் வர்ணிக்கப்பட்ட அழகுடைய திருமேனியைத் தரித்தவரிடம் என்னாசை பெருக வேணும்" என்றார். இங்கேயுள்ள த்யாந ச்லோகங்களிலும் 'உம்முடைய அத்புதமான வபுஸ், 'கமநீயம் கரயோர்யுகம் ததத்,' (மனதைக் கவரும் திருக்கைகளைத் தரித்துக்கொண்டு) 'கநகத்ரவ கௌரமம்பரம் தததோருத்விதயேந ஸுந்தரம்' (உருக்கிவிட்ட தங்கம் போல ஜ்வலிக்கும் பீதாம்பரத்தைத்தரித்த திருத்துடையழகோடு கூடியதும்) (50-ல்) 'தததா ஜாங்கிகதாம லௌகிகீம்' த்ரிஜகந் மநோஜ்ஞயே மூர்த்திநா வரஜங்காயுகளேந சோபிதம்' (லோகோத்தரமான வேகத்தையுடைய சிறந்த முழங்கால் த்வயத்தோடு மூவுலகுமாசையுடன் தொழுமழகோடு விளங்குவதும்) (52-ல்) பதயோர்யுகம் ததத்' ('கழலிணையை வஹிப்பதுமான') (53-ல்) 'வபுரீத்ருசமீச தாவகம் ஹ்ருதயாலம்பநமஸ்து மே ஸதா' இத்தகைய உபமுடைய வபுஸ் என் ஹ்ருதயத்திற்கு ஸதா த்யாநதர்சந விஷயமாக இருக்க வேணுமென்றும் பாடுகிறார். பீஷ்மர் த்யாநத்தின் முதல் ச்லோகத்தின் ரீதி நெஞ்சிலோடிக் கொண்டேயிருப்பது ஸ்பஷ்டம். 'வபுஸை'

(திருமேனியை) அவர் பக்தமனோரஞ்ஜநத்திற்காக தரிக்கிறார். வபுஸ் (திருமேனி) பக்த மநோ ரஞ்ஜநத்திற்காக பீதாம் பராதிகளைத் தரிக்கிறது. 'நடன்போல பற்பல வேஷங்களைத் தரித்து விஹரித்துக் கொண்டு மற்றொன்றையும் நினையாத அநந்யபாவர்களுக்கு அத்புத ரஸத்தைப் போஷிக்கிறீர்" என்று யாதவாப்யுதயம். கோபிகைகளை மோஹிப்பதில் திவ்ய பீதாம்பரம் முக்யமான ஸாமக்ரீ. ஜனங்களின் கண் களையும் புத்தியையும் மோஹிக்கச் செய்யும் இந்த்ர ஜாலக் காரர் பீதாம்பரங்களை இன்றைக்கும் தரிப்பார். பீதாம்ப ரக்காரர்கள் என்று அவர்களுக்குப் பெயர். "கௌஷளமாச் லிஷ்டம் கிமபி" என்று ஊருத்வந்த்வத்தை த்யாக ஸோபா நம் அநுபவித்தது. திருத்துடைகளினழகு பீதாம்பரத்தைக் காதலுடன் அணையச் செய்ததோ என்று அநுபவம். 'விரா ஜமானோஜ்வல பீத வாஸஸம் ஸ்மிதாதஸீ ஸூநஸமாமல ச்சவிம்" என்று ஸ்தோத்ர ரத்நாநுபவம். 'திருநிறத்திற்கும் பரபாகமானவழகு. "மாஹாரஜநம் வாஸ:" என்கிற ஸ்வ ரூபத்தாலே வந்த ஔஜ்வல்யம். "உடையார்ந்த வாடை" என்று திருவரை பூத்தாப் போலே இருக்கிற அழகு" என்று பிள்ளை அநுபவம். ஜாநுக்களில் நூபுர ரத்நங்களி லிருந்து காந்திக் குவியல்கள் சடையாக மண்டியிட்டுள்ளன. (49)

अरिगीर्ण गजेन्द्रगोपने दधता जाङ्घिकतामलौकिकीम् ।
त्रिजगन्महनीयमूर्तिना वरजङ्घायुगलेन शोभितम् ॥

அரிகீர்ண கஜேந்த்ர கோபநே
  தததா ஜாங்கிகதாமலௌகிகீம் |
த்ரிஜகந்மஹநீய மூர்த்திநா
  வரஜங்கா யுகளேந சோபிதம் ||

அரிகீர்ண கஜேந்த்ர கோபநே - சத்ருவான முதலை யால் கவரப்பட்ட கஜேந்த்ரனை ரக்ஷிப்பதில், அஸௌகிகம் - லோகத்தை அதிக்ரமித்த, ஜாங்கிகதாம் - முழங்கால் வேக வலுவை, தததா - உடையதும், த்ரிஜகந் மஹநீய மூர்த்திநா - மூவுலகும் பூஜிக்கும் வடிவுடையதுமான, ஜங்காயுகளேந - முழங்காலிணையால், சோபிதம் - அலங்கரிக்கப்பட்டதுமான, வபு: -

"காலே தூத்யத்ருத தாகதிம்" என்று ஸ்லோபாகம் ஜங்கையை யநுபவித்தது. வேகத்திற்கு முழங்கால் வலு வேணும். கஜேந்த்ரனை ரக்ஷிப்பதற்காக ஓடி வந்த ஓட்டத்திலும் மிக்க வேகமுண்டோ? லோகாதீதமான அந்த முழங்கால் வேகத்திலீடுபடாதவருண்டோ? ஏனத்தனை த்வரை பகவானுடைய முழங்கால்களுக்கென்றால், பக்தருடைய முழங்கால் முதலையால் கவ்வப்பட்டது. முதலை விழுங்கக் கவ்வின பக்தன் முழங்காலை மீட்க பகவானுடைய முழங்கால்கள் த்வரித்தன. ஸஜாதியாபிமானம் பலமானது. கருடனல்லவோ வாஹனமாக த்வரையோடு பகவானைச் சுமந்தோடி வந்தார் என்று ஆக்ஷேபம் வரும். 'உக்ஷா தக்ஷாந்தகஸ்ய' என்று கருட பஞ்சசத் ச்லோகத்தில் அது வர்ணிக்கப்பட்டது. 'ஆகர்ஷந் த்விஜராஜமபி' என்றபடி பக்ஷி ராஜனையும் பெருமாள் முழங்கால்கள் இழுத்துக் கொண்டு வந்தன. கருடனையும் தாமிழுத்துக்கொண்டாவது வருவதேன், ஜங்கை போதாதோ? தாம் மட்டும் ஓடி வரலாகாதோ? 'கருடாரூடராக திக்குகளெல்லாம் பக்தர்களுக்கு ஸேவை ஸாதித்து அவர்களாசைகளைப் பூரணம் செய்வதற்காக கருட வாஹநராய் வந்தது" என்று தேவநாயக பஞ்சாசத்தில் " आहुः श्रुतिं विबुधनायक तावकीनामाशागण प्रसत्र-हेतुमधीतवेदाः। आकर्णिते तदियमार्तरवे प्रजाना माशाः प्रसाधयितु-

मादिशति स्वयं त्वाम् ॥" என்று பாடியபடி கஜேந்த்ராழ்வாரைக் காக்க ஓடி வரும் ஸம்ப்ரமத்தை மஹர்ஷிகள் தேவர்கள் முதலியவர்கள் அநுபவிக்கையில் கருட வாஹநாகத் திக்குகளிலெல்லாம் ஓடி வந்து ஸேவை ஸாதித்து அவர்களுடைய ஆசையைப் பூரிக்கவும், இந்த அவஸரத்தில் தாம் வாஹநமாயிருந்து தம்முடைய வேக சக்தியையெல்லாம் காட்டித் தாம் பணி செய்யவேணுமென்ற கருடாழ்வார் ஆசையையும் பூர்த்தி செய்வதற்காகவும், கஜேந்த்ராழ்வானுக்கும், அவர் திருவடியை விடாமல் உடும்புப் பிடிபோல் பிடித்துக் கொண்டு, அவர் என்ன உதறினும் விடாத பிடியாய் க்ராஹித்திருந்த கந்தர்வ முதலைக்கும் கருட வாஹநாக ஸேவை ஸாதிக்கவும் ஆக பலவித ப்ரயோஜநங்களை உத்தேசித்து கருடாரூடராய் ஓடி வந்தது போலும். கருடன் வேகத்திலும் த்ருப்தி இல்லாமல் முழந்தாள்கள் பல்கால் கருடன் மீது உரைந்து தம் சக்தியையும் சேர்த்துக் கொண்டு தள்ளிக் கொண்டு வருகின்றன. ஓடத்தைத் துடுப்பால் தள்ளுவது போல ஆகாய ஸமுத்ரத்தில் பரக்கும் கருடனென்னும் ஓடத்தை ஜங்கைகளாகிய துடுப்புகள் தள்ளிக்கொண்டு வருகின்றன. கஜேந்த்ரனுக்கு மோக்ஷமளிக்க ஓடி வர உதவியது ஜங்கைகள். அதனாலே ;'जङ्घां दृष्ट्वा जनन पदवीजांघिकत्वं जहाति'' என்று தர்சன மாத்ரத்தால் மோக்ஷம் தருவதாக ஸேவாபாரம் அநுபவித்தது. "அரி கீர்ண கஜேந்த்ர" என்பது முழு கஜேந்த்ரத் திருமேனிக்கு ஒவ்வாது. கவ்வியது முழங்கால் மட்டுமே. "गज आकर्षते तीरे नक्र आकर्षते जले'' என்று பாடினார்கள் ருஷிகள். இப்படி ஆகர்ஷண ஸந்தர்ப்பத்தில் பெருமாளும் ஓர் ஆகர்ஷணம் செய்தார். த்விஜ ராஜனை ஆகர்ஷித்தாரென்று ரஸம். "க்ருதேச ப்ரதி கர்த்தவ்யம்" என்பது ஸநாதந தர்மம். (50)

कुलिशाङ्कुशकम्बुवारिज ध्वज चक्राद्यभिरामलक्ष्मणा ।
अरुणारुणकोमलत्विषा कमनीयेन तलेन राजितम् ॥

குலிசாங்குச கம்புவாரிஜ
த்வஜ சக்ராத்யபி ராம லக்ஷ்மணா |
அருணாருண கோமலத்விஷா
கமநீயேந தலேந ராஜிதம் ॥

குலிச - வஜ்ரப், அங்குச - மாவெட்டி, கம்பு-சங்கம், வாரிஜ - தாமரை, த்வஜ - கொடி, சக்ர - சக்ரம், ஆதி - முதலிய, அபிராம - அழகிய, லக்ஷ்மணா-ரேகைகள் படிந்ததும், அருணாருண கோமலத்விஷா - அருணனைப் போல செவ்விய அழகிய சுடரோடு, கமநீயேந - மனதைக் கவரும், தலேந - பாத மூலத்தால் (உள்ளங்காலால்) விராஜிதம் - விளங்குவதுமான, வபு: -

திருவடிக்கு வருகையில் ஸ்தோத்ர ரத்நத்தின் அத்புத வர்ணனமான ‘சங்கரதாங்க கல்பக த்வஜாரவிந்தாங்குச வஜ்ர லாஞ்சநம், த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜ த்வயம்” என்ற ச்லோகம் கவி நெஞ்சிலோடுகிறது அங்கே திருவடி முதல் அநுபவமாதலால் த்யாநாரம்பத்திலேயேயுள்ளது. இங்கே முடிவில் வருகிறது. “லாஞ்சநம்” என்பது இங்கே ‘லக்ஷ்ம’ என்றது. ‘என் தலைக்காபரணமாக சங்க சக்ராதி லக்ஷணங்களாலேயே லிகிதமாயுள்ளதை” என்று பிள்ளை. “பாத விலச்சினை வைத்தான் என்று நம் தலையில் சேஷத்வ முத்ரையான திருவடி முத்ரைவைப்பதையிட்டு “லாஞ்சநம்’ என்று ப்ரயோகித்தது. “சரணபங்கஜேநாங்கிதம” என்று இந்த த்ரிவிக்ரமன்தாள் முத்ரை விழச்செய்யும் க்ருபையில் தயாசதக மீடுபட்டது- பாத ([illegible]) தல முத்ரைகள் தலைத்தலத்தில் விழ வேணுமென்றாசை. (51)

विधिशर्वमुखामरस्फुरन्मकुटोन्निद्रमणि प्रभाकुलम् ।
नख चन्द्रमयूख मूर्छिताखिलतापं पदयोर्युगं दधत् ॥

விதிசர்வ முகாமரஸ்புரந்
மகுடோந்நித்ர மணி ப்ரபாகுலம் |
நக சந்த்ர மயூகமூர்ச்சிதா
கிலதாபம் பதயோர்யுகம் ததத் ||

விதி - ப்ரஹ்மா, சர்வ, ஈச்வரர், முக- முதலிய, அமர- தேவர்களுடைய, ஸ்புரந்மகுட - ஜ்வலிக்கும் கிரீடங்களின், உந்நித்ர மணி ப்ரபா - பரவிய ரத்ந காந்திகளால், ஆகுலம்- நிரம்பியதும், நக - திருவடி விரல் நகங்களாகிய, சந்த்ர - சந்த்ரனுடைய, மயூக - கிரணங்களால், மூர்ச்சித - போக்கடிக்கப்பட்ட, அகில தாபம் - ஸகல தாபங்களையுடையதும், (ஸகல தாபங்களையும் போக்குவதுமான) வபு:-

த்யாநத்தை ஆரம்பிக்கையில் சர்வபிதாமஹாதிகளால் 'பஜநீயர்' என்று பாடியுளது போல, த்யாநம் முடிவிலும் "விதிசர்வமுகாமர" என்று பாடுகிறார். ஸ்தோத்ரரத்நத்தில் ஸ்தோத்ரத் தொடக்கத்தில் "அபி சர்வபிதாமஹாத்யை:" என்றும், முடிவிலும் "விதி சிவஸநகாத்யை:" என்றும் பாடிய ரீதியை யநுஸரிப்பது ஸ்பஷ்டம். சுடராடி 'நக சந்த்ரிகயா நிரஸ்ததாபே' என்று சுகரநுபவித்ததை நினைத்து, 'நக சந்த்ரமயூக மூர்ச்சிதாகிலதாபம்' என்கிறார். ஸ்தோத்ர ரத்நத்தில் 29-ல் 'உதீர்ண ஸம்ஸாரதவாசுசுக்ஷணிம் க்ஷணேந நிர்வாப்ய' என்று பாடிய திருவடியின் ஸமஸ்த தாபஹரமான ப்ரபாவத்தை நினைக்கிறார். தாபத்தை மூர்ச்சிக்கும்படி, மூச்சுவிட முடியாமல் செய்யும்படி, தாபம் நம்மை மூர்ச்சிக்கச் செய்வதைத்தள்ளித் தாபத்தையே மூர்ச்சிக்கும்படி செய்கிறது. (52)

सरतस्सरणौ सतो बहिः स्वपतो वा लपतो गृहान्तरे ।
वपुरीदृशमीश! तावकं हृदयालम्बनमस्तु मे सदा ॥

ஸரத: ஸரணௌ ஸதோ பஹி:
ஸ்வபதோ வா லபதோ க்ருஹாந்தரே |
வபுரீத்ருசமீச! தாவகம்
ஹ்ருதயாலம்பநமஸ்து மே ஸதா ॥

ஸரணௌ - வழியில், ஸரத: - நடந்து கொண்டிருந்தாலும், பஹி: ஸத; - வெளியே இருந்தாலும், க்ருஹாந்தரே - வீட்டிற்குள், ஸ்வபத: - தூங்கிக் கொண்டிருந்தாலும், ஆலபதோவா - பேசிக்கொண்டிருந்தாலும், ஈச! - என் ஸ்வாமியே!, தாவகம் - உம்முடையதான, ஈத்ருசம் - இப்படி என்னால் வர்ணிக்கப்பட்ட, வபு: - திருமேனி, ஸதா - ஸர்வ காலத்திலும், மே - என்னுடைய, ஹ்ருதயாலம்பநம் - மனதிற்கு த்யாந விஷயமாக, அஸ்து - இருக்க வேணும்.

திருமேனி வர்ணநத்தை 15-ச்லோகங்களால் செய்து த்யாநத்தை உபஸம்ஹாரம் செய்கிறார். அழகுக்கடலான உம்முடைய இத்தகைய திருமேனி ஸர்வ காலமும் என் மனதிற்கு இன்ப விஷயமாக நீங்காமலிருக்கவேணும். என் நெஞ்சத்தில் கோவில் கொண்டு நித்யவாஸம் செய்து கொண்டு ஸர்வ காலமும் ஸேவை தர வேணுமென்கிறார். "உட்கார்ந்து கொண்டிருக்கும் போதும், நடந்த கொண்டிருந்த போதும், நின்று கொண்டிருந்த போதும், சயநித்துக் கொண்டிருந்த போதும், நீங்காமல் ஹ்ருஷீகேசனை நினைத்துக் கொண்டு ஜகத்தை தந்மயமாக கம்ஸன் பார்த்தான்" என்று சுகர் கம்ஸனை வர்ணித்தார். "த்வேஷத்

தால் நீங்காமல் நினைக்கும் கண்டாகர்ண சிசுபாலருக்கும் மோக்ஷமளித்த அந்த விஷ்ணுவுக்கு நமஸ்காரம் ” என்றார் மதுஸூதநஸரஸ்வதீ அத்வைத ஸித்தியின் முடிவில். “ காண்பனவும் கேட்பனவும் மற்றொன்றன்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல் பாண் பெருமாள் ”. “ யத்ர நாந்யத்பச்யதி நாந்யத்ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா ” என்று பூமவித்யையில் காட்டிய ஐகாந்திக நித்ய நிரதிசயஸுகாநுபவமான திருமேனி யநுபவத்தை ப்ரார்த்திக்கிறார். உம் திருமேனி என் ஹ்ருதயத்தைப் பிடித்துக் கொண்டு விடாமலிருக்கவேணும். அற்புதமாக என் மனதில் ஸாக்ஷாத்காரத்தைத் தரவேணும். தூக்கத்திலும் உம்மையே என் மனம் த்யாநம் செய்யவேணும். தூக்கமும் ஸாலம்பநஸமாதியாக இருக்க வேணும். ஸ்தோத்ர ரத்நத்தில் “பக்தஜநைகஜீவிதம்” என்று த்யாந ச்லோகங்களின் முடிவில் பாடி, அடுத்த 46-ல், “ ஐகாந்திகநித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத ஜீவித: ” என்றுப் பல ப்ரார்த்தனை செய்வது போல, இங்கும் இந்த ச்லோகத்தில் திருமேனியின் ஸததமான ஸேவையை ப்ரார்த்தித்து, அடுத்த ச்லோகத்திலும், ‘ நிரந்தரமாக நீங்காமல், நீலமேக எழில் கோவலன் என்னைக் கண்ணினாலும் ஸநாதனாகச்செய்ய வேணும் ’ என்று ப்ரார்த்திக்கிறார். 46-ல் ஸ்தோத்ர ரத்நத்திலுள்ள ‘ஐகாந்திகநித்ய’ என்பதை இந்த ச்லோகத்தில் விவரித்து விட்டு அங்கு போலிங்கும் அடுத்த ச்லோகத்தில் ‘ஸநாத’ சப்தத்தை ப்ரயோகித்து, “ நயநேநாபி ஸநாதயேத் விபு: ” என்று பாடுகிறார். ஸ்தோத்ரரத்நத்தின் ரீதியையே நிரந்தரமாக அநுஸரிப்பது ஸ்பஷ்டம். அங்கே 46-ல் உள்ள நிரந்தர சப்தத்தையே இங்கும் 54-ல் வைத்துப் பாடுகிறார். (53)

नवनीरदनीलिमद्युतिर्नमनीयो निगमैर्निरन्तरम् ।
निरये निपतन्तमाशु मां नयनेनापि सनाथयेद्विभुः ॥

நவநீரத நீலிமத்யுதி:
நமநீயோ நிகமைர் நிரந்தரம் |
நிரயே நிபதந்தமாசு மாம்
நயநேநாபி ஸநாதயேத் விபு: ||

நவநீரத - நீருண்ட மேகம் போல், நீலிமத்யுதி: - நீல நன்மேனியுடையவரும், நிகமை: - வேதங்களாலும், நிரந்தரம்: - இடைவிடாமல், நமநீய: - நமஸ்கரிக்கப்படும் பெருமையுடையவருமான, விபு: - ஸர்வஸ்வாமியான ப்ரபு, நிரயே - நரகத்தில், நிபதந்தம் - விழும், மாம் - என்னை, நயநேநாபி - கண்ணினாலும், ஸநாதயேத் - நாதவானாக, அநாதனாகாமல் செய்ய வேணும்.

ஆநந்தமயவித்யையில், அல்பமேனும் பகவத் த்யாநத்தில் அந்தரத்தை (விச்சேதத்தை)ச் செய்தால் பயத்தையடைந்தவனாவான். நிரந்தரமான த்யாந ஸித்தியில் அபயத்தைப் பெறுவானென்று தித்திரி பக்ஷிகள் பாடின. ரஸஸ்வரூபனான ஆநந்தமயக்ருஷ்ணனை நிரந்தரம் த்யாநம் செய்யப் பெற்று அந்த ரஸலாபத்தால் 'ஆநந்தி'யாகவாசை. 58-ல் 'க்ருஷ்ண' என்னும் திருநாமத்தின் அக்ஷரங்கள் (வர்ணங்கள்) இரண்டே நிரதிசய ஸுகந்தரும் ரஸாயநமென்று பாடப் போகிறார். இங்கே முன் ச்லோகத்தில், 'முடிவில்லதோரெழில் நீலமேனி ஐயோ நிறை கொண்டது என் நெஞ்சினையே' என்றது போல கண்ணனுடைய அத்புதமான திருமேனி தன் நெஞ்சினை நிறைகொண்டு அங்கே நீங்காமல் விஷயமாக வேணுமென்றார். இங்கே என்னுள்ளம் கவர்ந்ததோடு என் கண்களையும் ஸநாதமாக ஸபலமாகச்

செய்து " என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே " என்றபடி கண்கள்முன்பும் ஸதா காக்ஷி தந்தருள வேணுமென்கிறார். 'விபு:' என்பதற்கு எங்கும் என் கண் முன் ஸர்வ காலமும் நிறைந்திருக்க வேணுமென் பது கருத்து. 'வேதங்களால் நிரந்தரம் நமஸ்கரிக்கப்படு பவன்' என் மனதை ஸாலம்பநமாக ஸநாதமாகச் செய்தது போதாது. என் கண்ணையும் ஸநாதமாகச் செய்ய வேணும். கண்ணனைக் கண்டு கொண்டே யிராத கண் அநாதை, பேதை. கண்ணனைக் காண்பதே கண் பெற்றதின் பயன். 'நிரந்தரம்' என்று பாடியவுடனே 'நிரயே நிபதந்தம்' என்று பாடுவது ரஸம். த்யாநத்தில் அந்தரம் - விச்சேதம் வருவது தான் வித்வானுக்குப் பயமென்றது தைத்திரீயோ பநிஷத்து. " உம்மோடு கூடி இருப்பதே மோக்ஷம், உம்மை விட்டகலுவதே நிரயம் (நரகம்) " என்றாள் ஸீதைப் பிராட்டி. உம் த்யாநத்தில் விச்சேதம் வருவது தான் நிர யம் என்பதை நிரய சப்தத்தால் விளக்குகிறார். (54)

प्रणिपत्य हरे! भवन्तमद्धा विनिबद्धाञ्जलिरेकमेव याचे ।
जनुरस्तु कुले कृषीवलानामपि गोविन्दपदारविन्दभावः ॥

ப்ரணிபத்ய ஹரே! பவந்தமத்தா
விநிபத்தாஞ்ஜலிரேகமேவ யாசே |
ஜநுரஸ்து குலே க்ருஷீவலாநாம்
அபி கோவிந்தபதாரவிந்த பாவ: ||

ஹரே! - ஆர்த்தியை ஹரி (போக்கடி) ப்பவரே, பவந்தம் - உம்மை, ப்ரணிபத்ய - ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, விநிபத்தாஞ்ஜலி: - கூப்பியகைகளோடு, அத்தா - உண்மையாக, ஏகமேவ - ஒன்றை மட்டும், யாசே - யாசிக் கிறேன், க்ருஷீவலாநாம் - உழுகிறவர்களுடைய, குலே

அபி - குலத்திலும், ஜநு : அஸ்து - பிறப்பு ஏற்படட்டும், கோவிந்த பதாரவிந்தபாவ : அஸ்து - கோவிந்தன் தாமரைக் கழலிணையில் காதல் (மட்டும் ஸ்திரந்தாம்) இருக்க வேணும்.

மோக்ஷமிப்போது கொடேன், இன்னும் ஜந்மங்கள் தந்தே தீருவேன் என்றீராகில், உழவு வ்ருத்தியுள்ளவர் குலத்தில் பிறந்தாலும் ஸம்மதமே. கோவிந்தன் திருவடிகளில் மட்டும் காதல் இருக்கவேணுமென்கிறார். 'அபி கோவிந்த பதாரவிந்தபாவ:' என்பதற்கு, 'கோவிந்தன் கழலிணைகளில் காதலிருக்குமாயின்' என்று மந்வயித்துப் பொருள் கொள்ளலாம். "वृन्दावने किमपि गुल्मलतौषधीनाम्' "ப்ருந்தாவநேகிமபி குல்மலதௌஷதீநாம்" என்று உத்தவர் ஆசைப்பட்டார். 'எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனுமாவேனே' என்று, 'ஊனேறில்' குலசேகராழ்வார் ஆசைப்பட்டார். मुकुन्द मूर्ध्ना प्रणिपत्य याचे भवन्तमेकान्तमियन्तमर्थम् । अविस्मृतिस्त्वच्चरणारविन्दे भवे भवे मेऽस्तु भवत्प्रसादात् ॥" "முகுந்த மூர்த்நா ப்ரணிபத்ய யாசே பவந்தமேகாந்தமியந்தமர்த்தம், அவிஸ்ம்ருதி: த்வச்சரணாரவிந்தே பவே பவே மேऽஸ்து பவத்ப்ரஸாதாத்" என்ற முகுந்தமாலை போலிங்கேயநுபவம். 'भावो नान्यत्र गच्छति' பாவோ நாந்யத்ர கச்சதி" என்ற திருவடியின் (அநுமானின்) நீங்காத காதலைப் போன்ற காதல் ஆசை. (55)

वाचा निर्मलया सुधामधुरया यां नाथ शिक्षामदाः
तां स्वप्नेऽपि न संस्मराम्यहमहंभावावृतो निस्त्रपः ।
इत्यागःशतशालिनं पुनरपि स्वीयेषु मां बिभ्रतः
त्वत्तो नास्ति दयानिधिर्यदुपते मत्तो न मत्तः परः ॥

வாசா நிர்மலயா ஸுதாமதுரயா
யாம் நாத சிக்ஷாமதா:
தாம் ஸ்வப்நேऽபி ந ஸம்ஸ்மராம்யஹமஹம்
பாவாவ்ருதோ நிஸ்த்ரப: |
இத்யாக: சதசாலிநம் புநரபி
ஸ்வீயேஷு மாம் பிப்ரத:
த்வத்தோ நாஸ்தி தயா நிதிர்
யதுபதே மத்தோ ந மத்த: பர: ||

நாத - நாதனே !, ஸுதாமதுரயா - அமுதிலுமினி தாய், (அமுதம்போலினியதாய்) நிர்மலயா - மாசற்ற, வாசா - வாக்காகிற, (வாக்கினால்) யாம் சிக்ஷாம் - எந்த உபதேசத்தை, (அப்யாஸத்தை - படிப்பை) அதா: - (எனக்கு) தந்தீரோ, தாம் - அதை, அஹம்பாவாவ்ருத: - அஹங்கார விருளால் மூடப்பட்டு, நிஸ்த்ரப: - வெட்கங்கெட்டவனான, அஹம் - நான், ஸ்வப்நே அபி - ஸ்வப்நத்திலும், ந ஸம்ஸ்மராமி-நினைப்பதில்லை. இதி - இப்படி, ஆக: சதசாலிநம்-நூற்றுக்கணக்கான அபராதங்களையுடைய, மாம் - என்னை, புநரபி - மறுபடியும், ஸ்வீயேஷு - உம்மைச் சேர்ந்தவர்கள் கோஷ்டியில், பிப்ரத: - வைத்துக் கொண்டு தாங்கும், த்வத்த: பர:-உம்மைக் காட்டிலும் பெரிய, யதுபதே! - யதுநாதனே, தயாநிதி: - கருணைக்கடல், நாஸ்தி - இல்லை. மத்த: - ஏன்னிலும், பர: - மேற்பட்ட, மத்த: - மதம் பிடித்தவன், நாஸ்தி - இல்லை.

த்யாக ச்லோகங்கள் முடிந்தன. ஸ்தோத்ரமும் முடிவடைகிறது. இந்த ஸ்தோத்ரத்தின் வாக்கும் பொருள்களும் அம்ருதம் போல இனிப்புத்தான். எனக்கே தித்திக்கிறது. தோஷமற்றதே. நிர்மலமே. ஆனால் இந்த

மதுரவாகர்த்தங்களையளித்தவன் மதுராதிபதி. 'அவன் மதுர மதுரன்' என்று கடைசியான 60-ம் ச்லோகத்தில் கூறப்போகிறார். இந்த மதுர வாக்கை எனக்கு சிக்ஷை தந்தது (பயிற்சி செய்து வைத்தது) இதை பாடிய நீரே. ஸ்தோத்ர ரத்நத்தின் முடிவில் 59-ல் "த்வமேவைவம்பூதம் தரணிதர மே சிக்ஷய மந:" 'என் மனதை நீர் தான் சிக்ஷித்து உபதேசித்துத் திருத்தித்தந்து பயிற்சி செய்து தரவேணும்' என்று ப்ரார்த்தித்தார். இவர் வாக்கை சிக்ஷித்துத் தந்ததைப் பாடுகிறார். கோபாலன் வாக்குகளுக்குப் பாலகன். வாக்கை ரக்ஷித்து குற்றமன்றிக் காப்பாற்றுபவன். 'மதுராதி பதே: அகிலம் மதுரம்' என்று வல்லபாசார்யர் க்ருஷ்ணனுடைய ஸர்வதோமாதுர்யத்தில் ஈடுபட்டார். 'யதுபதே', 'மதுராதிபதே', 'அபேதே த்ருதீயா' அந்த ப்ரயோகத்தில் ஸ்வாரஸ்யமுண்டு. நீரெனக்கு வாக்கின் சிக்ஷை பயின்று வைக்கும் பொழுது உம்முடைய சொற்களின் மாதுர்யத்தை என் சொல்லுவது. உம் மதுர வாக்குகளால் எனக்கு மதுர வாக்கின் சிக்ஷை செய்தீர். 'நிஸ்த்ரப:' ஸ்தோத்ர ரத்நத்தில் 'நிஸ்த்ரபனென கவிக்கு, என்று தம்மை நிந்தித்துக்கொண்டார் முடிவிலும் 'நிர்பயம் மாம் அலஜ்ஜம்" என்று தம்மை நிந்தித்தார். அதுபோல இங்கும் முதலில் போல முடிவிலும் 'நிஸ்த்ரப:' என்கிறார். எப்படி வெட்கமின்மை. வெட்கத்திற்கு என்ன காரணம். பாடினது நீர். பாடிவைத்தது நீர். மாயக்கவியாய் வந்து என் நெஞ்சம் உயிரும் உள்கலந்து நின்றீர். தானே யானென்பானாகி தன்னைத் தானே துதித்து எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதேயாகி நின்றொழிந்தீர். கவிதையில் நீர் கற்பித்த சிக்ஷை என்பதை அடியோடு மறந்து அஹம்பாவம் பிச்சேறி என் துதி என் மதுரவாக்கு என்று நீர் அறியச் சொல்லிக்கொள்ளுகிறேன். ஸர்வஜ்ஞ

ரான உம்முன்னிலையில் உம்முடையதை என்னுடையதென்று நான் சொல்லிக்கொள்ள வெட்கப்படவேண்டாவோ. தெரியாத பிறரை ஏமாற்றலாம். ஸர்வஜ்ஞனான உம்மையே ஏமாற்றப் பார்ப்பது வெட்கமின்மையே. இந்த ச்லோகத்தின் மாதுர்யம் ஒன்றே போதும் இக்கவியை மஹாகவி என்று புகழ. 'எனதென் பதென் யானென்பதென்' என்று ஆழ்வாரைப்போல கைவாங்கி 'நான்' என்பதை விட்டு, 'தானேயானென்பானானார்' என்று நிர்ணயித்து அவருள் புகுந்தொடுங்குவதே யுக்தம். 'அவனென்னாகி நின்றொழிந்தான். इमां वै विष्णुलहरीं जगन्नाथेन निर्मितां । यः पठेत्तस्य सर्वत्र जायन्ते जय सम्पदः ॥ "இமாம் வை விஷ்ணுலஹரீம் ஜகந்நாதேந நிர்மிதாம் | ய படேத் தஸ்ய ஸர்வத்ர ஜாயந்தே ஜய ஸம்பத: ||' என்று பல மாத்ருகையில் ஒன்றில் மட்டிலுள்ளது. ஜகந்நாத நிர்மிதாமென்று நிஸ்த்ரபனாய்ச் சொல்லுகிறேன். உலக நாயகனான ஜகந்நாதனான கண்ணனால் நிர்மிதமென்பது தத்வம். இரண்டும் பொருள்பட 'ஜகந்நாதேந நிர்மிதாம்' என்றது. (56)

पातालं व्रज याहि वा सुरपुरीमारोह मेरोः शिरः
पारावारपरम्परां तर तथाप्याशा न शान्ता तव ।
आधिव्याधिजरापराहत यदि क्षेमं निजं वाञ्छसि
श्रीकृष्णेतिरसायनं रसय रे शून्यैः किमन्यैः श्रमैः ॥

பாதாளம் வ்ரஜ யாஹி வா
ஸுரபுரீ மாரோஹ மேரோ: சிர:
பாராவார பரம்பராம் தர
ததாப்யாசா ந சாந்தா தவ |

ஆதி வ்யாதி ஜரா பராஹத யதி
க்ஷேமம் நிஜம் வாஞ்சஸி
ஸ்ரீக்ருஷ்ணேதி ரஸாயநம் ரஸய ரே
சூந்யை: கிமந்யை: ச்ரமை: ||

(மனமே) பாதாளம் - பாதாளத்திற்கு, வ்ரஜ - செல், ஸௌரபுரீம்வா - அல்லது தேவலோகத்திற்கு, யாஹி - செல், மேரோ: சிர:-மேருபர்வதத்தினுடைய சிகரத்தில், ஆரோஹண, பாராவார பரம்பராம் - கடல்களின் பரம்பரையை, தர - கட, ததாபி - இத்தனை செய்தும், தவ - உனது, ஆசா - ந சாந்தா - அடங்கவில்லை. ஆதி - மனோவ்யாகுலங்களாலும், வ்யாதி - நோய்களாலும், ஜரா - கிழத்தனத்தாலும், பராஹத - பீடிக்கப்படும். ரே - ஓ நெஞ்சமே, நிஜம் - உன் ஸ்வந்த, க்ஷேமம் க்ஷேமத்தை, யதி வாஞ்சஸி - நீ விரும்புவாயாகில், ஸ்ரீக்ருஷ்ணேதி - ஸ்ரீக்ருஷ்ண என்ற, ரஸாயநம் - ரஸாயனத்தை, ரஸய - ஆஸ்வாதித்து இன்புறு. சூந்யை: - சூன்யங்களான, பயனற்ற, அந்யை: - மற்ற, ச்ரமை:-ச்ரமங்களால், கிம் - ஆவதென்?

“उत्पतन्नपिचाकाशं विशन्नपि रसातलम् । अटन्नपि महीं कृत्स्नां”, (உத்பதந் அபிசாகாசம் விசந்நபி ரஸாதலம், அடந்நபி மஹீம் க்ருத்ஸ்நாம்’) எங்கே சுற்றிச் சுழன்றோடினுலென்ன.

‘ त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः ’

(த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத:) மனம் எங்கே சுற்றிஓடினுலும் எல்லாவற்றையும் விட்டு “மாமேகம் சரணம் வ்ரஜ’ என்று கண்ணனையே சரண் புகுந்தால்தான் நிர்வாண பரமமான சாந்தி ஸித்திக்கும். ‘மாம் ஏகம் சரணம் வ்ரஜ’ என்றுர் க்ருஷ்ணன். ‘க்ருஷ்ண’ என்னும் வர்ணத்வயத் திருநாமத்தையே சரணம் புகு என்கிருர் இவர்.

'நாமோச்சாரண பேஷஜாத் நச்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்" என்று அறுதியிட்ட ப்ரபாவமுடைய திருநாமத்தால் தீரும் ரோகங்களில் ஸம்ஸார ரோகமும் சேர்ந்ததே. பாபரோகமும் சேர்ந்ததே. முகுந்த மாலையில் "ப்ரஸ்ருதி மரணவ்யாதே: சிகித்ஸாமிமாம் யோகஜ்ஞா: ஸமுதாஹரந்தி முநயோ யாம் யாஜ்ஞ்யவல்க்யாதய:, அந்தர்ஜ்யோதி ரமேயமேக மம்ருதம் க்ருஷ்ணாக்யமாபீயதாம் தத் பீதம்பரமௌஷதம் விதநுதே நிர்வாணமாத்யந்திகம்" என்று பாடியது கவி நெஞ்சிலோடுகிறது. அடுத்த ச்லோகத்தில் இதெல்லாம் ஸ்பஷ்டம். (57)

वज्रं पापमहीभृतां भवगदोद्रेकस्य सिद्धौषधम्
मिथ्याज्ञान निशाविशालतमसस्तिग्मांशुबिम्बोदयः ।
क्रूरक्लेशमहीरुहामुरुतरज्वालाजटालः शिखी
द्वारं निर्वृतिसद्मनो विजयते कृष्णेति वर्णद्वयम् ॥

வஜ்ரம் பாபமஹீப்ருதாம்
பவகதோத்ரேகஸ்ய ஸித்தௌஷதம்
மித்யாஜ்ஞாந நிசாவிசாலதமஸ:
திக்மாம்சு பிம்போதய: |
க்ரூரக்லேசமஹீருஹா
முருதரஜ்வாலா ஜடால: சிகீ
த்வாரம் நிர்வ்ருதி ஸத்மநோ
விஜயதே க்ருஷ்ணேதி வர்ணத்வயம் ||

க்ருஷ்ண இதி வர்ணத்வயம் - க்ருஷ்ண என்னும் அக்ஷரஜோடி, பாபமஹீப்ருதாம் = மலைகளான பாபங்களின்

(சிறகறச் செய்யும்), வஜ்ரம் - வஜ்ராயுதமாயும், பவக தோத்ரேகஸ்ய - ஸம்ஸார நோயின் ஓங்குதலை, (நிவ்ருத்தி செய்யும்) ஸித்தௌஷதம் - ஸித்த மருந்தாயும், மித்யாஜ்ஞாந - பொய்ஜ்ஞாநமென்னும், நிசா - இருளின், விசால தமஸ: - பெரிய இருட்டைப் போக்கும், திக்மாம்சுபிம்ப போதய: - ஸூர்ய மண்டலத்தின் உதயமாயும், க்ரூர - கொடுமையான, க்லேச மஹீருஹாம் - க்லேசவ்ருக்ஷங்களை (பஸ்மம் செய்யும்) உருதர ஜ்வாலா ஜடால: - மிகப்பெரிய ஜ்வாலைகள் மண்டிய, சிகி - நெருப்பாயும், நிர்வ்ருதி ஸத்மந: - பேரின்பத்திற்கு இருப்பிடமான பரம பதத்திற்குள் நுழைவிக்கும், த்வாரம் - வாசலாயுமிருந்து கொண்டு, விஜயதே - மேல்மேலும் உத்கர்ஷத்தோடு விளங்குகிறது.

'என் மனமே! எனக்கு நீ உண்மையே சொல்ல வேணும். ஸம்ஸாரத்தில் கோடி கோடி ஜன்மங்களில் நீ சுற்றாத இடமில்லை. க்ருஷ்ண என்ற இரண்டு அக்ஷரங்களின் மாதுர்யத்தை நீ எங்கேனும் கண்டதுண்டோ? என்று ஒரு ச்லோகத்திலிவர் கேட்கிறார். அது போலிங்கும் இந்த இரண்டெழுத்துகள் எல்லாத்துயர்களையும் தீர்ப்பதென்கிறார். மலைபோன்ற பாபங்கள் நம்மை ஸம்ஸாரத்தில் பிறக்கும்படி செய்கின்றன. பாபமலைகளின் பக்ஷங்களை இந்த்ரன் வஜ்ராயுதம்போல் ஒடித்து விடுகின்றன. பாபப்பாறைகளை வெட்டித் தூளியாக்குகின்றன. ஸம்ஸார நோயைத் தீர்க்கும் ஸித்தமருந்து. அஜ்ஞாந விருளைப் போக்கும் ஸூர்யோதயம். ஆரம்பத்தில் 5-ம் ச்லோகத்தில், 'உம்முடைய கடாக்ஷாருணோதயம்' என்றுகொல் என் அஜ்ஞாந ராத்ரியைப் போக்கும் என்று பாடினார். இங்கே முடிவில் அந்த ஸூர்யோதயம் திருநாமத்தினாலேயே ஸித்திப்பதை யநுபவிக்கிறார். க்லேசங்கள் மரங்கள்

போல சாகோபசாகமாக வளர்ந்திருக்கின்றன. அவற்றை பஸ்மம் செய்கிற அக்னி. 'ஜ்ஞாநாக்னி கர்மங்களை யெல்லாம் கொளுத்தி சாம்பலாக்கும்' என்று பாடினார் க்ருஷ்ணன். இவர் க்ருஷ்ண நாமமே அதைச் செய்யுமென்றிங்கே பாடுகிறார். இதுவே மோக்ஷத்வாரம். பரமபத வாசல். (58)

विशालविषयाटवीवलयलग्नदावानल-
प्रसृत्वरशिखावली विगलितं मदीयं मनः ।
अमन्दमिलदिन्दिरे निखिलमाधुरीमन्दिरे
मुकुन्दमुखचन्दिरे चिरमिदं चकोरायताम् ॥

விசால விஷயாடவீ
வலயலக்ந தாவாநல
ப்ரஸ்ருத்வரசிகா
வளீவிகலிதம் மதீயம் மந:।
அமந்த மிலதிந்திரே
நிகிலமாதுரீ மந்திரே
முகுந்த முகசந்திரே
சிரமிதம் சகோராயதாம் ॥

விசால - மிகப்பெரிய, விஷயாடவீ வலய - விஷயங்களாகிற காட்டின் வட்டத்தில், லக்ந - பிடித்துக்கொண்ட, தாவாநல - காட்டுத் தீயிலிருந்து, ப்ரஸ்ருத்வர - பரவிய, சிகாவளீ - அக்னி ஜ்வாலைகளால், விகலிதம் - துன்புற்றுச் சோர்ந்த, இதம் - இந்த, மதீயம் மந: - என்மனம், அமந்த மிளதிந்திரே - கெட்டியாக அணைந்த லக்ஷ்மீ (கபோலத்

தோடு) பொருந்தியதும், நிகிலமாதுரீ மந்திரே - ஸகல இனிமைக்கும் நிவாஸ க்ருஹமுமான, முகுந்த முகசந் திரே - அம்ருதமெனும் மோக்ஷத்தைத் தரும் க்ருஷ்ண முக சந்த்ரனிடம், சிரம் - நீடூழிகாலம், சகோராயதாம் - சகோர பக்ஷிபோல அதன் காந்தியைப்பருகி அதையே தாரகமாகப் பெறவேணும்.

ஆரம்பத்தில் 'விஷாக்நி போன்ற துக்கபூமியான ஸம்ஸாரத்தில்', ஸம்ஸாராக்னி ஜ்வாலைகளால் மிகவும் லோபித்த சைதந்யத்தை யுடையவனுல்" என்று பாடியது போலிங்கும் முடிவில், 'விசாலமான விஷயக்காடுகளில் மண்டியெரியும் அக்நிஜ்வாலைகளால் வெந்த என்மனம்' என்கிறுர். வெந்த மனதை உயிர்ப்பிக்க அமுதம் வேணும். வெந்ததால் வந்த தாபத்தைத் தீர்க்கவும் உஜ்ஜீவிப்பிக்கவும் அம்ருதத்தைப் பொழிவது முகுந்த முகசந்திரன், தொடக் கத்தில், 6-வதில் 'ரமாமுகாம்போஜவிகாஸகக்ஷம:' என்று லக்ஷ்மியின் திருமுகத் தாமரையின் விகாஸத்தையும் கூட்டி யநுபவித்ததுபோல, இங்கும் லக்ஷ்மியின் கன்னத்தோடு யதேஷ்டமாக யணைந்து பொருந்தும் பாக்யத்தையுடைய முகசந்திர னென்கிறுர். "ஆஸத்தியோகாத் அவிரளித கபோலம்" என்று உத்தரராம சரித்ரத்தில் ஸீதையிடம் ராமன் வசனத்தை நினைக்கவேணும். 'காடாலிங்கந ஸங்க பீடிதமுகம்' என்று முத்ரா ராக்ஷஸம். பூர்ணமான லக்ஷ்மீயோடு கூடிய முகமென்றும் கொள்ளலாம். 'அகிலம் மதுரம்' என்று வல்லபாசார்யர் அநுபவித்ததுபோல 'நிகிலமாதுரீ மந்திரம்' என்கிறுர். லக்ஷ்மியின் கன்னம் பொருந்தும் பாக்யத்தைப்பெற்ற, ஸம்பூர்ண லக்ஷ்மீ விலாஸமுள்ள, ஸமஸ்த இனிப்புகளுக்கும் வாஸஸ்தாந மான க்ருஷ்ணமுக சந்த்ரனை என்மனம் சகோரப்போலப்

பருகிப்பருகி இன்புற்று வாழவேணும். சகோரபக்ஷி சந்த்ரகிரணங்களையே பருகி ஜீவிக்குமென்பர். கண்ணன் முகசந்திரனையே நான் பருகிப்பருகி தரிக்கவேணும். (59)

सुरस्रोतस्विन्याः पुलिनमधितिष्ठन्नयनयोः
विधायान्तर्मुद्रामथ सपदि विद्राव्य विषयान् ।
विधूतान्तर्ध्वान्तो मधुरमधुरायां चिति कदा
निमग्नः स्यां कस्याञ्चन नवनभस्याम्बुदरुचि ॥

ஸுரஸ்ரோதஸ்விந்யா:
புலிநமதிதிஷ்டந் நயநயோ:
விதாயாந்தர் முத்ராமத
ஸபதி வித்ராவ்ய விஷயாந் ।
விதூதாந்தர் த்வாந்தோ மதுர
மதுராயாம் சிதி கதா
நிமக்ந: ஸ்யாம் கஸ்யாம்
சந நவபஸ்யாம்புதருசி ॥

ஸுரஸ்ரோதஸ்விந்யா:- தேவகங்கையான கங்கைமா நதியின், புளிநம் - மணலில், அதிதிஷ்டந் - ஆஸீநராய், நயநயோ: - என்னிரண்டு கண்களையும், அந்தர் முத்ராம் விதாய - உள்ளே திரும்பி உள்நோக்கச்செய்து முத்ரை போட்டு, ஸபதி - உடனே, தத்க்ஷணமே, விஷயாந் - புலன் விஷயங்களை, வித்ராவ்ய - விரட்டிவிட்டு, விதூதாந்தர்த்வாந்த: - உள்ளிருளை யெல்லாமகற்றி, நவநபஸ்யாம் புதருசி - பாத்ரபத மாஸத்தில் புதுமேகம் போன்ற

வண்ணமுடைய, கஸ்யாம் சந - வர்ணனை யிலடங்காத, மதுர மதுராயாம் - மிகவுமின்பமான, (மதுரமான மதுரை யில் வஸித்த) சிதி - சைதந்யத்தில், (ப்ரஹ்மத்தினிடம்) கதா - என்று கொல், நிமக்ந: ஸ்யாம் - ஆழ்ந்து முழுகி இருப்பேனே.

ஸ்ரீக்ருஷ்ணனென்னும் ப்ரஹ்ம சைதன்யத்தில் நான் ஆழ்வாராக என்றுகொல் ஆவேனென்று பாரிக்கிறார். பகவானுடைய ஸ்ரீ பாததீர்த்தமான கங்கையிலவகாஹித்து, அந்தி மணலில் உட்கார்ந்துகொண்டு கண்ணனை த்யானம் செய்துகொண்டே, 'ஆவ்ருத்த சக்ஷு:' என்று உபநிஷத்து கூறியபடி கண்களை உள்ளே கண்ணனிடம் திருப்பி மனனகமலமறக்கழுவி, விஷயங்களை யெல்லாம் வெளியே விரட்டி, உள்ளிருளையகற்றி. அமுதினுமினியனான மதுர மதுரனான ஜ்ஞானாநந்தகன ஸ்வரூபனான கொண்டல் வண்ணனான கோவலனுக்குள் நான் ஆழ்ந்து முழுகிக் கிடப்பேனே.

'ஆளவந்தாரோ' என்றார் ஆளவந்தாரை. க்ருஷ்ண சைதந்யாமுதக் கடலில நான் ஆழவாசைப்படுகிறேன். அதில் நானுமோராழ்வானாக வேணும் என்று ஆசைப்படுகிறார். 'மதுர மதுராயாம்' என்பதற்கு 'மதுரமான மதுரையில் வஸித்த' என்றும் பொருள்படும்படி ப்ரயோகம். 'ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோ஽ஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்' என்றதுபோல தாபத்ரயங்களும் தீர்ந்து ஆழ்ந்து குளிர்ந்து இன்புற்று, 'இனி மீள்வதொன்றில்லை' என்றபடி அபுநராவ்ருத்தமாய் முழுகிக் கிடக்கவேணும், 'चिदानन्दोदन्वत्यनघगुणरत्नौघभरिते निमज्ज्यात्यन्यसितत्रयमपुनरुन्मज्जनमिह' 'சிதாநந்தோதந்வதி அநகுணாத்நௌகபரிதே

நிமஜ்ஜத்யங்யஸ்மிந் அயம் அபுநருந்மஜ்ஜநமிஹ'' என்ற ஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகத்தில்போல அநுபவம். 'अघोघः पापात्मा शरणद निमज्जामि तमसि' (அகோக: பாபாத்மா சரணத நிமஜ்ஜாமி தமஸி' என்று ஸ்தோத்ரத்நத்தில் பாடியபடி முன்பு தமஸில் நிமக்நனாயிருந்தது கழிந்து உமக்குள் நித்ய மக்னனாய் இருக்க வாசைப்படுகிறேன். க்ருஷ்ணத்ருஷ்ணா எனக்கும் பூர்ணம். (60)

முற்றிற்று.

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், (லிமிடெட்)
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.